கல்வித்தந்தை

சர்; செவாலியர்;

டாக்டர். ஆர்.ஏ.என். முத்துசாமி முதலியார்

முத்து விழா மலர்





முதலியார் கல்வி நிறுவனம்
ஈரோடு கலைக் கல்லூரியின் எழில்மிகு தோற்றம்



ஈரோடு கலைக்கல்லூரி கலையரங்கு
நூலகம், தேர்வு கட்டுப்பாட்டு அலுவலகம்

கல்வித்தந்தை சர். செவாலியர்

டாக்டர்

ஆர். ஏ. என். முத்துசாமி முதலியார்

அவர்களின்

முத்து விழா மலர்

18-09-1994



மலரின் மணத்தை நுகருமுன்.....

RANM நான்கு எழுத்துக்களில் ஒரு வரலாறு. இந்த நான்கு எழுத்துக்களின் சொந்தக்காரர் கல்வித் தந்தை, கல்விச் சக்கரவர்த்தி, சர். செவாலியர், டாக்டர் ஆர்.ஏ.என். முத்துசாமி முதலியார். இவர், ஒரு சகாப்தம்! ஐம்பதாண்டுகளின் வரலாற்றுப் பெட்டகம்! பொது வாழ்வின் பொன்னேடுகள்!

ஆயிரம் பிறை கண்ட அண்ணல் திருமிகு ஆர்.ஏ.என். முத்துசாமி முதலியார் அவர்களுக்கு முத்துவிழா காண விழைந்தோம். இவரைப் போற்றுவதன் மூலம், பாராட்டுவதன் மூலம், நம்மைப் போற்றிக் கொள்ளலாம். வாழ்த்திக் கொள்ளலாம் என்று கருதினோம். எனவே, இவர்தம் பொன்வாழ்வு – பொது வாழ்வு – புகழ் வாழ்வு இங்கு பொன் மலராக மலர்கிறது; மணம் பரப்ப இருக்கிறது.

சொந்தம், பந்தம் பாராது – காலம் கருதாது ஏழைக்காக – எளியோர்க்காக – கல்வித் தொண்டிற்காக – இனத்தொண்டிற்காக அல்லும் பகலும் அயராது பாடுபட்டு வரும், முத்துவிழா காணும் கல்வித் தந்தை டாக்டர் ஆர்.ஏ.என். முத்துசாமி முதலியார் பல்லாண்டுகள் இந்த நிலவுலகில் நிலைத்த புகழுடன் வாழ வேண்டும் என்று மலர்க் குழுவினர் நெஞ்சார வாழ்த்துகின்றனர்.

கல்வித்தந்தை சர், செவாலியர், டாக்டர் ஆர்.ஏ.என். முத்துசாமி முதலியார் அவர்களின் முத்துவிழா மலர்க்காக வாழ்த்துச் செய்திகள், கவிதைகள், கட்டுரைகள் வழங்கி இம்மலரை மணக்கச் செய்த பெரியோர்களுக்கு மலர்க்குழு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது. சிறந்த முறையில் மலர் அமைய வேண்டிய கருத்துரைகள் நல்கிய ஈரோடு கலைக் கல்லூரியின் செயலாளர் & தாளாளர் வள்ளல் ராணா க.வெ. இலட்சுமணன் அவர்களுக்கு அன்பு நிறைந்த நன்றி!

குறுகிய கால அளவில், அழகுற அச்சிட்டுத் தந்து உதவிய சக்தி அச்சகம் M. பாலசுப்பிரமணியன் அவர்களுக்கும், மலரினைத் தொகுத்தளித்த டாக்டர் மா. அண்ணாதுரை அவர்களுக்கும் நன்றி! மலர்க் குழுவிற்குப் பேருதவியாக இருந்த பேராசிரியர் டாக்டர். எம். அர்த்தநாரி அவர்களுக்கும் நன்றி.

மலர்க் குழுவினர்

ஈரோடு – 1.
18.09.94



பொருளடக்கம்

வாழ்த்து மலர்

புகழ் பூமாலை

பாமாலை

எங்கள் தலைவர் – அ. இளங்கோவன்

வெள்ளை மனங்கொண்ட பிள்ளை – கனக சண்முகம்

சரித்திர நாயகன் – மே.ச. வாசு

ஒரு கவிக்குயிலின் கானமழையில் – K. கௌதமன்

உரைமணிக் கோவை

அயராத உழைப்பு – ஜெ. சுத்தானந்தன்

கல்விப்பணி மேலும் சிறக்கட்டும்! – செ.க. குமாரசாமி

என் உற்ற நண்பர்! – P.K. நஞ்சப்ப முதலியார்

சீரும் சிறப்புமுடன் வாழ்க! – P.P. சதாசிவம்

தியாக உள்ளம் படைத்த தியாகச் செம்மல் – எஸ். வையாபுரி முதலியார்

யான் வாழும், நாளும் முத்துசாமி வாழிய! – மயிலோன் ஏ. ஆறுமுகம்

இறைவனை வேண்டுகிறேன்! – பிரபாத் J.K. நாராயணன்

இமாலயா சாதனைப் படைத்த சாதனைச் செம்மல் – K.M. தண்டபாணி

RANM ஒரு நடமாடும் பல்கலைக்கழகம் – K.K. பாலுசாமி

உழைப்பிக்கிறோம்! – K.N. முருகேசன்

பலகாலம் நீடூழி வாழ்க – ஏ.வி.ஆர்.எம்.வி. சங்கரநாராயணன்

இளமை + உழைப்பு = உயர்வு – சக்தி M. பாலசுப்பிரமணியன்

கல்வித் தந்தை, செங்குந்தர் செம்மல் கல்விச் சக்கரவர்த்தி வாழ்க பல்லாண்டு! – C. சுப்பிரமணியன்

மலையினும் மானப் பெரிது – டாக்டர் தி.ரா. செல்வராசன்

ஆர்.ஏ.என்.எம். வாழ்க பல்லாண்டு! – பேராசிரியர் க. இராமதாசு

திண்ணையிலிருந்து தில்லி வரை – டாக்டர் மே.அ. பாலமுருகன்

நான் கண்ட மாமனிதர் – டாக்டர் மா. அர்த்தநாரி

பெரியவர் RANM – பொ. க. சாமிநாதன்

ஓயாது உழைப்பவர் கல்வித் தந்தை – ஆர்.என். சந்தான ராஜகோபாலன்

மனிதநேயமிக்க மனிதர் – எம்.எம். தணிகைமலை

மனிதருள் மாணிக்கம்	–	C. காந்திதாசு
முத்து விழாக் காணும் முத்துசாமி அவர்கள்	–	G.S. துரைசாமி முதலியார்
செங்குந்தருள் ஒரு காமராசர்	–	டாக்டர் மு. கருணாநிதி
நான் கண்ட முப்பெரும் தலைவர்களில் முழு வடிவம்	–	து. பழனியாண்டி
வாழ்த்து மடல்	–	ஆ. ராஜவேலு
எஃகு மனிதர்	–	V.V.C.R. கந்தசாமி
நினைவலைகளில்	–	ஆர்.எம். அரங்கசாமி
ஆர்.ஏ.என்.எம். பணி மறக்க முடியாத பணி	–	செ. வெங்கடசாமி
எளிமையான வாழ்க்கை	–	பா. அ. சென்னியப்பன்
பொது நலமே தம் நலம்	–	செய. கோவிந்தராசுலு
செங்குந்தர் ஒளி ஞாயிறு	–	புலவர் அ. சிவசுப்பிரமணியன்
ஈரோட்டின் கல்வித் தந்தை	–	ஆ. ஜெகந்நாதன்
பாராட்டு மடல்	–	T. பழனியப்பன்
கல்வி விளக்கு	–	எம்.வி. தங்கராசு
ஈரோட்டு காமராசர் ஆர்.ஏ.என்.எம்.	–	ரேவதிப்ரியன்
மனித நேய இமயம்	–	ஆர். இராமானுசம்

பன்மணித்திரள்

Thiru. R.A.N.M. The Non Pareil	-	Prof Sumant
Kalvi Neriyalar	-	Prof. N. Vijayakumar

RANM அவர்களுக்குத் தவத்திரு குன்றக்குடி அடிகளார் எழுதியக் கடிதம்

RANM அவர்களுக்கு ஈரோடு நகரச் செங்குந்தர் மகாசன சங்கம் வழங்கிய வாழ்த்துப்பா

ஈரோடு கலைக்கல்லூரி தோற்றமும் வளர்ச்சியும் – R.A.N. முத்துசாமி முதலியார்

பெரியார் மாவட்டச் செங்குந்தர் மகாசன சங்க மாநாட்டுத் தலைமையுரை	–	RAN முத்துசாமிமுதலியார்
RANMவுடன் ஒரு பேட்டி	–	செங்குந்தமணி
கல்லூரி வாழி! வாழி! கல்லூரி ஆண்டுமலர் (1972–73)	–	வித்துவான் திரு.சி. செல்வத்தாண்டவன்

திருமுருக கிருபானந்த வாரியார்
சென்னை

14.8.93

முத்து விழா வாழ்த்து

நேரிசை வெண்பா

நாலிருப தாண்டுகள் நம்பன் திருவருளால்
சீலமுடன் வாழ்ந்துயரும் சீராளன் – நாலமதில்
முத்துவிழாக் கொண்டு மகிழ்முத்து சாமிப்புனிதன்
நித்தமும் வாழ்க நிறைந்து.

Scanned with OKEN Scanner

தவத்திரு குன்றக்குடி அடிகளார்
குன்றக்குடி 623 206
பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம்
தொலைபேசி : குன்றக்கூடி 9227

நாள் 10.9.93

வாழ்த்துரை

ஈரோடு தந்த கல்வித்தந்தை "அருள்நெறிப்புரவலர்" திருவாளர் ஆர்.ஏ.என்.முத்துசாமி முதலியார் அவர்கள் எண்பதாம் ஆண்டை எட்டிப் பிடித்திருக்கிறார்கள். முதலியார் அவர்கள் நடந்து வந்த ஆண்டுகள், தடங்கள் தெரிகின்றன. ஆம்! முதலியார் அவர்கள் கல்விப்பணியில் ஆழம்பட்டு நின்றும் நடந்தும் வந்துள்ளமையை வரலாறு கூறும்; வாழ்த்தும்; திருவாளர் ஆர்.ஏ.என். முத்துசாமி முதலியார் ஒரு சகாப்தம்; அவருடைய அரிய பணியில் அருள்நெறித் திருப்பணி மன்றக் கல்வி வளாகம் கால் கொண்டது; வளர்ந்து வருகிறது.

பழகுதலுக்கு இனிய பண்பாளர். செல்வம் ஈட்டுவதில் அவருக்கு இணை அவரே! அதுபோலவே, ஈட்டிய செல்வத்தைப் பயன்படுத்துவதிலும் தேர்ச்சி பெற்றவர்; கணக்கில் கண்டிப்பானவர். பலருடனும் பழகி வென்று விளங்கி நிற்பவர்.

ஏ! கால தேவதையே! ஏன் ஒரே மாதிரி ஓடுகிறாய்? முதலியார் வாழ்நாள் ஒவ்வொன்றும் தமிழருக்கு நலம் பயக்கும் நாள்! ஆதலால், திருவாளர் ஆர்.ஏ.என். முத்துசாமி முதலியாரைப் பொறுத்து மெதுவாகப் போகவும். யாம் வாழும் நாள் வரை முதலியார் வாழ வேண்டும். வாழ்த்துக்கள்!

தவத்திரு. சுந்தரசுவாமிகள்
மகாசந்நிதானம்
கௌமாரமடாலயம்
கோவை – 641 006

நாள் 25.8.93

ஈரோடு

கல்வித்தந்தை – கல்விச் சக்கரவர்த்தி

உயர்திரு *R.A.N. முத்துசாமி முதலியார்* 80வது ஆண்டு

வாழ்த்து வெண்பா

கற்றவர் வாழ்! ஈரோட்டில் கல்விதரும் தந்தை அன்பு
முற்று முத்துச்சாமி முதலியார் உற்றவர்கள்
வாழ்த்த எண்பதாம் ஆண்டு மன்னினார் வாழியவே.
சூழ்த்த நலம் யாவுமிகத் தோய்ந்து

சாந்தலிங்க இராமசாமியடிகள்
கோவை நீலகிரி மாவட்டத் திருக்கோயில் வாரியம்
தமிழகக் கோயில் சீரமைப்பு
வல்லுநர் குழு
பேரூராதீனம், பேரூர் (அஞ்சல்)
கோயம்புத்தூர் – 641 010 தமிழ்நாடு

நாள்

கல்வித்தந்தை திருமிகு *R.A.N.* முத்துசாமி முதலியார் அவர்களுக்கு 81–ஆம் ஆண்டு மலர் வாழ்த்துப்பா

கல்விப்பணியில் சமுதாயக் களத்தில் இறங்கிப் பாடுபடும்
செல்வர் முத்துச்சாமி யெனும் சிவஞ்சர் பத்தி நெறியாளர்
சொல்லும் வண்ணம் செயல் செய்யும் துணிவும் பணிவும் மிகவுடையார்
பல்லாண் டறஞ் செய் தருள் நெறியில் பரவி வாழ வாழ்த்துகின்றோம்.

நாட்டு நலத்தில் மக்களது நலம் சேர் வாழ்வில் அருள் நெறியைக்
காட்டும் குன்றக்குடி அடிகள் கருணை நோக்கு மிக உடையார்
வாட்டம் அகல இளைஞர் உளம் வளரக் கல்விப்பணி செய்து
நாட்டம் இறைவன் திருவடியில் நாளும் செலுத்தி வாழ்கின்றார்.

கல்வித் தந்தை எனப்போற்றக் கருத்தும் செயலும் ஒன்றாகும்
செல்வர் முத்துசாமி எனத் திகழும் முதலியார் தமது
வல்லாண்மையினால் நிறுவனங்கள் மழலை முதலாம் இளைஞர்கள்
மல்கும் பள்ளி கல்லூரி வளர்த்தார் எண்பதாண்டின் மேல்
பல்லாண்டினிது வாழ்க வென்று பரமன் அருள வேண்டுகின்றோம்.

ஸ்ரீலஸ்ரீ ச. இராஜலிங்க மாணிக்கவாசக சுவாமிகள்
கூனம்பட்டி ஆதீனம், பல்லகவுண்டம்பட்டி (அஞ்சல்)
(வழி) விஜயமங்கலம் – 638 056 பெரியார் மாவட்டம்

நாள் 26.8.94

வாழ்த்தும் ஆசியும்

உலகில் பிறவிகளில் மேலானது மனிதப்பிறவி சேவை செய்வதற்கென்றே ஏற்பட்டது மனிதப்பிறவி. மக்களுக்குப் பணியாற்றுவதே மனிதக்கடமை.

இக்கல்வியில் தலையாய பணியாற்றும் சிறப்புடைய பெரியவர் உயர்திரு RAN முத்துசாமி முதலியார் அவர்கள், செங்குந்த சமூகத்தினரின் மூத்த தலைவராக விளங்குபவர்; வழிகாட்டியாகத் திகழ்பவர்.

மனிதனுக்கு வேண்டிய முக்கிய சொத்து கல்வி; அழியாத சொத்து. அப்படிப்பட்ட கல்விப்பணியால் பலரின் அறிவுக்கண்களைத் திறந்தவர் முதலியார் அவர்கள். பல கல்வி நிறுவனங்களை ஏற்படுத்திக் கல்விக்காக அரிய சேவை செய்பவர்.

அதே போன்று ஆன்மீகப் பணியிலும் முதன்மையாக விளங்குபவர். செங்குந்தர்களின் குலதெய்வமாக விளங்குகின்ற அன்னை காமாட்சியம்மனுக்குக் கவுந்தப்பாடி நகரிலே அழகிய திருக்கோயிலை பலரின் உதவியுடன் நிறுவி குடமுழுக்கு விழா நிகழ்த்தியவர். இக்கோயிலிலே பலரும் பயன்பெறும் வண்ணம் திருவிளக்குப் பூஜையும் பௌர்ணமி பூஜையும் ஆண்டு தோறும் விழாவும் முன்னின்று நிகழ்த்தி வருபவர்.

திரு முத்துசாமி முதலியார் அவர்களால் செங்குந்தர் சமூகம் மட்டுமல்ல; ஏனைய பலரும் பயன்பெறும் பல நற்காரியங்களைச் செய்து கொண்டு வருபவர். முதலியார் அவர்க்கட்கு 81வது ஆண்டு பிறந்த நாள் வருவதைக் கொண்டு விழா எடுப்பது கண்டு மிகவும் மகிழ்கிறோம். அறவழிப்பெரியாராக விளங்குகின்ற முதலியார்கட்கு இவ்விழா எடுப்பது மிகவும் பொருத்தமானதாகும். அவர்களைப் பாராட்டிப் பட்டம் அளித்து மிகமிக மகிழ்கிறோம். தொண்டு செய்யும் பரந்த உள்ளம் கொண்ட முதலியார் அவர்கள் மற்றவர்கட்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றார்கள். நமது மடாலயத்தின் மீது மிகுந்த பக்தி கொண்டவர்.

சமுதாயப் பணியில் மேம்பட்டு விளங்குகின்ற திரு முத்துசாமி முதலியார் அவர்கள் பல்லாண்டு காலம் நீடுநெடிது வாழவும் இன்னும் நாட்டுக்கும் மக்களுக்கும் அரிய சேவைகள் செய்திடவும் மனதார வாழ்த்தி ஆசீர்வதிக்கிறோம். அவர்கள் குடும்பத்தாரும், பல வளமும் நிறைந்து சிறந்திட வாழ்த்தி ஆசீர்வதிக்கிறோம். நலம்.

வாழ்க பல்லாண்டு!

அருளாசிகள்
இராஜலிங்க மாணிக்கவாச சுவாமிகள்

Scanned with OKEN Scanner

வே. சங்கர சுப்பையன்,
AB, 48, Anna Nagar,
MADRAS - 600 040.

தேதி 2.9.1994

பல்லாண்டு வாழ்க

மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய உயர்திரு R.A.N. முத்துசாமி முதலியார் அவர்களது 81–ஆம் ஆண்டு நிறைவு விழா 18.9.1994 அன்று நடைபெற உள்ளதை அறிந்து மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். அவர்கள் நல்ல உடல் நலத்துடன் பல்லாண்டு வாழ்ந்து நமது சமூகத்திற்கும் கல்விப் பணிக்கும் தொண்டாற்ற வேண்டுமென்று முருகப் பெருமானை வேண்டி எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்பான வணக்கம்!

டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்
பேராசிரியர் – தலைவர்
"தமிழகம்", 19, செயம்மாள் தெரு, அய்யாவு குடியிருப்பு,
அமைந்தகரை,
சென்னை – 600 029

நாள் : 23.8.94

ஆயிரம் பிறைகண்ட அண்ணல்

வணக்கம்!

ஈரோடு திரு R.A.N. முத்துசாமி முதலியார் அவர்கள் ஆயிரம் பிறை கண்ட அண்ணல் ஆகிறார்கள். கல்வி, சமுதாயத் தொழில் துறைகளில் அளப்பரிய சாதனைகள் ஆற்றிய முதலியார் அவர்கள் 18.9.94 ஞாயிற்றுக்கிழமை அன்று முத்து விழாக் கொண்டாட இருக்கின்ற செய்தி எம் நெஞ்சுக்கு இனிமையையும், ஏற்றத்தினையும், பெருமிதத்தினையும் பயக்கின்றன. கல்வித் தந்தையாகவும், கல்விச் சக்கரவர்த்தியாகவும் ஈரோட்டில் உலா வருகின்ற பெரியவர் இன்னும் பல்லாண்டுகள் வாழ்ந்து மொழிக்கும், இனத்திற்கும் தொண்டு செய்ய இறையருள் துணைநிற்க வேண்டும் என்று 'அவன் அருளாலே அவன் தாள்' வணங்குகின்றேன்.

பேராசிரியர் P.N. சிலம்பண்ணன், M.A.,
முன்னாள் பதிவாளர்,
பாரதியார் பல்கலைக்கழகம்
கோவை.

நாள் 24.8.94

சாதனை படைக்கும் செம்மல்

ஈரோடு கல்வித்தந்தை உயர்திரு R.A.N. முத்துசாமி முதலியார் அவர்களின் 81ஆம் ஆண்டு விழாக்கண்டு பெருமகிழ்ச்சி அடைகிறேன். ஈரோடு, கவுந்தப்பாடி பகுதிகளில் பல பெரும்பணியாற்றியுள்ளார். ஈரோட்டில் அருள்நெறி திருப்பணிமன்றம் மேல்நிலைப்பள்ளியை மிகச் செம்மையாக நடத்தி வருகின்றார். ஈரோடு இன்ஸ்டிடூட் ஆப் டெக்னாலஜி, ஈரோடு கலைக்கல்லூரி, ஆகியவற்றின் நிறுவனர் (Founder).

புதுமுக வகுப்புடன் தொடங்கப்பட்ட ஈரோடு கலைக்கல்லூரியைப் பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பு, ஆராய்ச்சித் துறையில் டாக்டர் பட்டம் ஆகியவற்றில் பயிற்சியளிக்கும் ஓர் உயர்கல்வி நிலையமாக உயர்த்திய பெருமை அன்னாருக்கே உண்டு. தாம் மேற்கொள்ளக்கூடிய எந்த நல்ல காரியத்தையும் முயற்சி திருவினையாக்கும் என்ற முதுமொழிக்கு ஏற்ப தன்னம்பிக்கையுடன் செயலாற்றி சாதனை படைக்கும் செம்மல். அத்தகைய சாதனை படைக்கும் பெரியவர் திரு R.A.N. முத்துசாமி முதலியார் அவர்கள் நீடுழி வாழ்ந்து, ஆன்மீகப் பணிக்கும், கல்விப் பணிக்கும் அரும் பணியாற்றிட எனது மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்.

Prof. V. C. Kulandaiswamy,
Former V. C.
I. G. N. O. U.

23, M. G. R. Road,
Besant Nagar,
Madras-600090.

Date 18—8—94

Felicitation

I am happy to learn that the eighty first birthday of Thiru. R. A. N. Muthusamy Mudaliar is being celebrated. It is only proper that the Tamil community pays grateful tribute to a person who. by his devotion, determination and philanthoropy contributed so substantially and massively to the cause of education. I have watched with Admiration and great appreciation, the perseverance and dedication which characterised all his activities.

His simplicity, courtesy and hospitality attract and win the affection admiration of every one. At 80. he is admirably fit and young in mind and body and is poised for yet great services to the state and the Nation.

I wish him a long, healthy and active life of continues service to the society.

Sincerly,

V .C. Kulandaiswamy

கவிதைத் தொகுப்பு

கோல்டு பிங் S. நல்லசாமி,
M/s P. Sengoda Mudaliar
Handloom Wholesale Cloth Merchants
62, T.V.S. Street, Erode - 638 001.

நாள் 24.8.94

அறுபடை முதலி ஆல்போல் வாழி!

பஞ்செல்லாம் நூலாக்கி துணியாக்கி மணியாக்கும்
பொன்வண்ண செங்குந்தர் குலமுதித்த பெருங்கோவே"!
நெஞ்செல்லாம் நினைத்தாலே இனிக்கின்ற அறப்பணிகள்
நாள்தோறும் நாடெங்கும் நிலைநாட்டும் திருத்தேவே!
பிஞ்செல்லாம் காயாகி கனியாகி தேன்சிந்தும்
பழுத்தபெரும் அருள்நிதியே! பழங்கால கலைமதியே!
நஞ்செல்லாம் அமுதாகும் நின்பார்வை பட்டாலே
நிலமெல்லாம் செழிப்பாகும் புலமெல்லாம் களிப்பாகும்.

உழைப்பாலே உயர்ந்தோனே முளைப்பாரி எழிலோனே!
ஓம்சக்தி ஈன்றதமிழ் இளையோனே "முத்துசாமி"
களைப்பில்லா நோக்காலே கலைக்கல்லூரி தந்தோனே!
கல்விக்கொரு சக்கரவர்த்தி கொடையோரை கொண்டானே!
களைப்பான ஊர்கூட குபேரத்துவம் பெற்றுவிடும்
காமராசர் கொள்கைவழி நிறைகல்வி கற்றுவிடும்
பிழைப்பெல்லாம் நல்வாக்கால் வாழ்வாங்கு வாழ்ந்துவிடும்
பத்தெட்டு ஆண்டுவிழா கொண்டாடும் ஆலயமே!

ஆண்டவனே ஆனாலும் ஆதவனே ஆனாலும்
அகமதிலே திடக்கொள்கை முகமதிலே மலர்பார்வை
பூண்ட சிவப் புண்ணியவான் புதுயுகத்து கண்ணியவான்
"பாற்கடலின் தங்கமீனாய்" சந்தனம்சூழ் மலைகளாய்
வேண்டிவரும் வையத்தார் தேவையெல்லாம் ஈடேற்றி
வாரியென மாரியென நூறாண்டு பேராண்டு
பாண்டுரங்கன் பரமசிவன் காமாட்சி கந்தப்பன்
பேரருளால் அறுபடைமுதலி முத்தமிழ்போல் வாழியரே!

P.A. Sivakolunthu
Pudukaraipudur Po.,
Kugalur (Via) - 638 313.

நாள் 18.8.94

இளம்பிறை ஆயிரம் கண்ட இனியவரே

ராக்கியா பாளையம் தந்த ரத்தினமே
ரத்தபந் தமல்லாத அத்துணை மக்களுமே – அன்பாய்
ஈரோட்டு "ராணா"வின் செங்குந்த இளையோனே
ஈடில்லா புகழினை ஈட்டிய பெரியவரே
கல்விக்குக் காவலனாய்க் கலைக்கல்லூரிச் சேவகனாய்க்
கற்றுத்தேற தொழிற் கல்வியை நிறுவியவரே
வயதினில் பெரியவராம் வளம்பல கண்டவராம்
வாழ்வின் லட்சியமே சமூகத் தொண்டாய்
முதலியார் இனத்தை முன்னுக்குக் கொண்டுவர
முத்துசாமி முதலியார் ஒருவரேஎனப் புகழ்பெற்று
எண்பதில் சிறப்பாய் நிறைவுவிழா காணும்
அன்புத் தந்தையே அடியேன் வணக்கம்
ஆயிரம் பிறையைக் காணச் செய்வித்த – அந்த
ஆதிகேசன் தாள்பணிந்து முதலில் போற்றுகிறேன்!
இன்னும் பலநூறு இளம்பிறை கண்டு
இமயம் போன்று இன்னும் பல ஆண்டு
நீவிர்வாழ்க! நின்குடும்பம் வாழ்க! நீர்நிறுவிய
நிறுவனம் வாழ்ந்து நின்புகழ் நீடூழி வாழ்கவென
நித்தம் வணங்கும் சேவற் கொடியோனை
நெஞ்சார குடும்பத்துடன் கூடிவணங்கி வாழ்த்துகிறேன்.

சா.கு.பா. பழநிவேல்
செங்குந்த மகாஜன சங்க துணைத் தலைவர்
41, தனியூர் வாணியத்தெரு,
கூறைநாடு, மயிலாடுதுறை – 609 002

நாள் 18.08.1994

ஈரோடு – கல்வித் தந்தை பெரியவர்

திரு ஆர்.ஏ.என். முத்துசாமி செங்குந்தர் அவர்களின் 81ஆம் ஆண்டு பிறந்த நாள் வாழ்த்து

அறம் பல ஆற்றும் அருளாளர் வாழ்க
ஆயிரம் பிறை கண்ட அண்ணலே வாழ்க
இல்லற துணைவியார் இனிதே வாழ்க
ஈந்து உவந்து மகிழும் வள்ளலே வாழ்க
உறவினர் போற்றும் உத்தம பெரியோய்
ஊர்கள் பலவும் உயர்நலம் பெறவே
எழில்மிகு சுற்றம் ஏக்கம் குறைய
ஏழைகள் வாழ்க்கை ஏற்றம் பெறவும்
ஐயம் நீங்க ஆவலுடன் பயிற்றும்
கல்விச் சாலைகள் கனிவுடன் நிறுவி
கற்போர் நலனைக் கண்ணிமையெனக் காக்கும்
கல்வித் தந்தையாய்க் கருணை மிக்கு உடையோய்
ஆயிரம் பிறையுடன் மேலும் பல்லாண்டு
வாழ்க வாழ்க வாழ்க வளமுடன்
வாழ்க நீவீர் வாழ்க நின் சுற்றம்
மக்கள் செல்வங்கள் மகிழ்வுடன் வாழ
மயிலோன் பாதம் மகிழ்வுடன் போற்றி
வாழ்த்துவம் யாமே வாழ்த்துவம் யாமே

டாக்டர் சிற்பி பாலசுப்பிரமணியம்
தமிழ்த்துறைத் தலைவர், பாரதியார் பல்கலைக்கழகம், கோவை – 46

நாள் 2.8.94

கல்வித் தந்தை வாழ்க!

அணிதிகழும் ஈரோட்டுப் பெருஞ்செல்வர்
அன்பின் மிக்கார்
துணிவுடனே வாணிகத்தின் துறையிலுயர்
தொழிலின் வல்லார்
பணிவுடையார் இன்சொல்லார் பழுத்த பழம்
பண்புச் சான்றோர்
மணியனைய முதலியார் பன்னெடு நாள்
இனிதே வாழ்க!

கண்ணுக்கும் கண்ணாகக் கல்லூரி வளர்க்கின்ற
கல்வித் தந்தை
எண்ணங்கள் புதிதாக ஏற்றமுறு செயல்வடிவம்
ஆக்கும் அண்ணல்
மண்ணுக்குப் புகழ்தந்து மலிஎண்ப தகவை நிறை
வெய்தும் நாளில்
நண்ணுகின்ற நலத்தோடு நானிலமே பாராட்ட
வாழ்க! வாழ்க!

P.P. சதாசிவம்,

முன்னாள் தாளாளர், ஈரோடு கலைக்கல்லூரி.
27-30, Hospital, Road, KAVINDAPADI - 638 455.

நாள் 12.8.94

சீரும் சிறப்புமுடன் வாழ்க'

ஈரோடு கல்வி தந்தை, கல்விச் சக்கரவர்த்தி உயர்திரு மதிப்பிற்குரிய R.A.N. முத்துசாமி முதலியார் அவர்களது 81ம் ஆண்டைச் 'சீரும் சிறப்புமுடன் விழா எடுத்துக் கொண்டாடுவது கண்டு மிகவும் பெருமகிழ்வடைகிறேன். உயர்திரு R.A.N. முத்துசாமி முதலியார் அவர்களுடன் 50 ஆண்டுகளுக்குமேல் அவர்களைத் தலைவராகவும் நான் காரியதரிசியாகவும் இருந்து செயலாற்றியுள்ளேன். அவர் சங்கத்தலைவராகவும் நான் காரியதரிசியாகவும் இருந்து பணியாற்றிய கவுந்தப்பாடி சுதேசி ஜவுளி வர்த்தகர் சங்கம், அருள் மிகு காமாக்ஷியம்மன் நிறுவனம், ஈரோடு முதலியார் கல்வி நிறுவனங்கள் ஆகியவைகள் திரு R.A.N.M. அவர்களுடைய சீரிய முயற்சியாலும், ஆர்வத்துடன் இடை விடா உழைப்பாலும், அடக்கமான குணத்தாலும், துணிவுடன் இடைவிடா முயற்சியாலும், மேற்படி நிறுவனங்கள் இன்றும் சீருடனும், சிறப்புடனும், கீர்த்தியுடனும் விளங்குவது கண்கூடு.

அவர்கள் நீண்ட ஆயுளுடனும் நிறைந்த செல்வத்துடனும் சுறுசுறுப்புடனும் வாழ ஆண்டவனை வேண்டுகிறேன்.

நா. ஆறுமுகம்
Peader in Tamil
Department of Tamil
Pondicherry University
Pondicherry.

நாள் 30.5.94

வாழ்த்துகின்றேன், வணங்குகின்றேன்

கல்வி வளர்ச்சியா தொழில் பெருக்கமா கைத்தறி வளர்ச்சியா சிறுசேமிப்புத் துறையா தன்னிறைவுத் திட்டமா சத்துணவுத் திட்டமா பசுமைப் புரட்சியா வெண்மைப் புரட்சியா எண்ணுந் துறைதொறும் ஏற்றமிகு முன்னேற்றம் இணையற்ற வளர்ச்சியை ஏற்றுச் சிறக்கும் பெரியார் மாவட்டம் தலைநகராம் ஈரோட்டில் படிக்காத மேதையாய்ப் பாரோர் போற்றும் பெருமைமிகு கல்விச் சக்கரவர்த்தியாய்த் திகழும் செயல்வீரர் முத்துசாமி அவர்களின் எண்பதாண்டு நிறைவு விழாவின் எக்களிப்பு! வலிமை கல்லுக்குள் அடக்கம் ஆனால் அது எறியப் படும்போதுதான் துடிப்புப் பெனும் அதில் எட்ட முடியா வேகமும் வெடிக்கும் வலிமையும் துடிப்பும் வாகாய்ச் சேர்ந்தால் மாங்காய் விழுகிறது, மகிழ்ச்சி பிறக்கிறது! இலட்சியம், வேகம் பெறுகின்ற போதுதான் வலிமை சேரும், வெற்றியும் கிட்டும். கல்வி வளர்ச்சி காரியவெற்றி இரண்டிலும் முத்துசாமி செங்குந்தரின் தலையான இலட்சியம் வேகம், தன்னலமில்லாத் தகைசால் பண்பு! வேகம், விரைவு, வீரநடை, வெற்றி அவர் பெயரைப் பாருங்கள் ஆர்வமுடன் சொல்லுங்கள். ஆர்.ஏ.என். முத்துசாமியா இல்லை மால்கம் ஆதிசேஷய்யா கூறினார் ஆங்கில 'ரேன்' முத்துசாமியாம் ஆங்கிலத்தில் ' ரேன்' என்றால் வேகம் தானே! ஆம் வேக முத்துசாமி, உண்மையிது பொய்யில்லை அவர் படிக்கவில்லை இலக்கியம் கற்கவில்லை ஆனால் ஆயிரம்பேர் கற்க வழி செய்தார் மக்களை முழுமைப்படுத்துவது கல்வியென்று தான் நம்பியதை நடைமுறைப் படுத்திய நல்லவர்!

நன்னெஞ்சம் நம்புவது எதுவோ அதனை நல்லுள்ளம் இயம்புவது எதுவோ அதனை நம்மால் அடைய முடியும் என்பதே எண்பதாண்டுப் பெரியவரின் இனிய நம்பிக்கை தனக்கு எட்டாத கோபுரக் கலசமாய் உயர்ந்திருந்த கல்வியை உருட்டி ஓடவிட்டு ஏழை இளைஞர்க்கு எளிதாய்க் கிடைக்க கல்விச் சாலை பல கண்டு உயர்ந்தவர்!

சமயத் தலைவரின் உருவம் கண்டால் கன்னத்தில் போட்டுக் களிப்படைகின்றோம். சமயக் கொள்கையின் நெறிமுறை கேட்டால் காதில் போட்டுக் கொள்வதில்லை; ஆமாம் நம்சமயம் வாக்குச் சமயமாய் உள்ளது

அதுவாழ்வு சமயமாக மாற வேண்டும் சமயப் பெருமை சமயக் கொள்கைக்கு வேண்டும் தலைவர் புகழ் தலைவர் கொள்கைக்கும் வேண்டுமென்றும் சமூக ஞானி குன்றக்குடி அடிகளாரே எண்பதாண்டு முத்துசாமி முதலியார்தம் குரு!

கொள்கை இல்லாத அரசியல், கடின உழைப்பு இல்லாத செல்வம், நல்ல ஒழுக்கம் இல்லாத கல்வி, நேரிய நாணயம் இல்லாத வாணிகம் வீணென்று நயமாய்க் சொல்லும் நல்லவர் இவரே!

கைத்தறி, நெசவு, தவிட்டுமுட்டை வணிகம், நூல் விற்பனை, மழகன் சேலைகள் தயாரிப்பு தானே அமைத்த வாழ்வில், தனியாய் வளர்ந்தார் செல்வம் சேர்க்க சோம்பல் படுபவன் பெயர்தான் ஏழை என்பதவர் கொள்கை தானாக விடிவு தாவி வராது விழித்துப் பார்த்தால் விடிந்துவிடும் பொழுது ஒடிந்து வீழும் துன்பச் சோதனைகள்!

தூங்கி விழுந்தாலோ தூரச்செல்லும் விடியல்; வாழ்வின் வெற்றிக்கும் கர்த்தா நாமே பிறரில்லை. தன்னலமற்ற மாந்தனின் தகைகால் செயலே மாற்றங்கள் பலவீறு கொள்ளும் காரணம் எண்பதாம் முத்துசாமி முதலியாரின் வளமான வாழ்க்கை போடும் வண்ணக் கோலங்களிவை!

பலவுறு நறுஞ்சாந்தின் நலமுறு மணமாய் சீர்கெழு வெண்முகத்தின் பார்புகழ் ஒளியாய் ஏழ்புணர் இன்னிசையின் சீர்மிகு இசைப்பயனால் இல்வாழ்க்கைத் துணைநலம் சீரங்காயம் மாளுடன் புகழ்பெற்று வாழ்க பொலிவுடன் வெல்க! ஆறுதலை கொண்ட அரன்மகனே நமக்கு ஆறுதல் தரமுடியும் என்னும் இத்தம்பதியார்

முன்னியது முடிக்கும் முருகன் திருவருளால்
குன்றாத வளமும் குறையாத நலமும்
குறைகள் வாராத வாழ்வும் பெற்று
நெடிது வாழ்க காவிரி மணலினும் பல்லாண்டென
வாழ்த்தி வணங்குகிறேன். வல்லமை பெறுகிறேன்
வாழ்க முத்துசாமி முதலியார்! வளர்க அவர்புகழ்!!

டாக்டர் மா. அண்ணாதுரை
நூலகர்,
ஈரோடு கலைக் கல்லூரி
தன்னாட்சி
ஈரோடு – 638 003.

நாள் 25.8.94

நாளும் வாழி! நலமுடன் வாழி!

அறிவினில் ஆற்றலில் இனிமையில் ஈதலில்
உண்மையில் ஒண்மையில் எளிமையில் ஏற்றத்தில்
தன்னிகரற்ற தனித்திறன் பெற்ற தலைமைநீர்!
சொன்னிகரற்ற சோர்விலா பெரியீர் நீரே!
நல்லன கூறியே அல்லன நீக்கியே
வல்லன செய்யும் நல்லவர் அவரே!
பொல்லா தள்ளியே பொய்யே நீக்கியே
எல்லா நன்மையும் ஈந்திடும் பெரியவரே!
இளமையில் கல்வியைச் சிலையெனப் பெற்றீர்!
வளமையில் வாழ்ந்து வளர்ந்த நீரே!
உண்கின்ற உணவின் வேளாண்மை செய்தீர்!
உழைப்பின் உன்னத நிலையினை அடைந்தீர்!
உடுக்கின்ற உடையின் தொழில்தனைச் செய்தீர்!
நடுக்கின்ற குளிருக்கு நயமாய்த் தந்தீர்!
மண்ணுலக மக்கள் வாழ்வில் உய்திபெற
கண்ணெனும் கல்வியைத் தந்திடும் கலமே!
உண்ணெனும் படியுலகிற் குத்தரு பவரே!
அன்பெனும் பிடியுள் அகப்படு மலையே!
ஈரோடு வாழ்கின்ற ஆண்பெண் உயர்வுபெற
வேரான கல்விக்கு வேலியாய் அமைந்தீர்!
பார்போற்றும் கல்விப் பணியை என்றும்
தளராது செய்தீர் தரணியில் உயர்ந்தீர்!
மலைநிகர் உயர்ச்சியும் அலைநிகர் அறிவும்
பல்துறைக் கல்வியைப் பாங்குடன் பயிற்றும்
நல்துறைத் தலைவ! குலமென்றும் தழைக்க
நாளும் வாழி! நலமுடன் வாழி!!

புலவர் விருத்தாம்பிகை அண்ணாதுரை
எம்.ஏ.,எம்.எட்., எம்.பில்.,
தமிழாசிரியை
அரசினர் பெண்கள் மேல்நிலைப்பள்ளி, ஈரோடு – 638 001

நாள் 25.8.94

கலங்கரை விளக்கு

செங்குந்தர் குலம்விளக்க வந்த செவ்வேளே
செங்குத்தாய்ப் பண்பில் சிறந்திட்ட செஞ்ஞாயிறே
செம்மைசேர் நெறியே சென்றிட்ட செந்தாமரையே
செம்மையாய் ஒளிரும் நன்மையான செழும்பொன்னே.

வளமான வாழ்வதனைப் பெற்று என்றுமே
உளமார குலம்தழைக்க உழைத்திடும் குன்றே
இழப்பே பாராமல் உழைப்பே மூலமாக்கி
உழைத்திட்ட உயர்ந்திட்ட உன்னத மலையே.

அன்பான கண்டிப்பில் அரவணைப் புண்டு
பண்பான பேச்சில் பாதைசொல் வதுண்டு
நண்பான அன்பில் நல்லவைதரு வதுண்டு
கண்போன போக்கில் போகாதே' என்பதுண்டு

படிக்காத மேதை பாருய்ய வந்தவர்
சிந்தனையில் மேதை சிறப்பாய் வாழ்பவர்
உரிக்காத மலைவாழைக் கல்வியை என்றும்
சரியாகக் கொடுக்க சாற்றினார் பன்முறை.

பேச்சினில் விரைவு என்றும் இருக்கும்
மூச்சினில் கல்விப்பணி இன்றும் இருக்கும்
முடிந்திட்ட இளமை முடியாமல் இருக்கும்
கடிந்திட்ட சொல்லினிலே கனிவேமிகுந் திருக்கும்.

அவர் வாழ்வில் நம்வாழ்வு கலந்து இருக்கும்
நம்வாழ்வில் அவர்வாழ்வே நிறைந்து இருக்கும்
செங்குந்தர் வாழ்வில் சேர்ந்திட்ட அவர்வாழ்வு
குலமுள்ள வரைதானே குவலயத்தில் இருக்கும்

சான்றோர் இனத்திருந்தே சான்றாக வாழ்பவர்
ஆன்றோர் இனத்திருந்தே அருமையாய்க் கூறுபவர்
கற்றவராய் இருந்திருந்தால் முற்றுப்பெற்று இருப்பார்
கல்லாததால் நில்லாமல் கற்றுத்துறை போனார்.

பார்போற்றும் கல்வியை ஈரோடு தனிலே
ஒன்றாய் இரண்டாய் பலவாய் நாளும்
நன்றாய்ச் செய்தே நானிலம் தழைக்க
கைக்கோளரின் வாழ்வில் கலங்கரை விளக்கானார்.

G.K. கிருஷ்ணன்,
நிர்வாகி
"ஸ்ரீ துரையப்பா காம்பளக்ஸ்"
152—மெயின்ரோடு,
கோபி செட்டிபாளையம்

நாள் 18.8.94

சரித்திரம் படைத்த நாயகன்

முத்துக்கு ஒருஉவமை முத்துசாமி முதலியார் — என
முதலியார் இனத்துக்கு உம்மால் ஓர் பெருமை
சின்னவன் பெரியவன் சிறுதாலி பெருந்தாலியெனச்
சிதறுண்ட இனத்தைச் சிந்தித்து செயலாற்றி
வம்சா வழியினை ஒன்றாய் இணைப்பதுவே
வாழ்வின் லட்சியமாய் வளர்த்துக் கொண்டீர்
சைவம் முதலியார் கைக்கோள சாதியெல்லாம்
சங்கமித்து ஓர் உருவாய்ச் செங்குந்த மெனசெய்து
சங்கம் வளர்த்த தமிழ்நாட்டு மண்ணில்—நீர்
செங்குந்த முதலியார் சங்கத்தின் தலைவனாய்
அங்கம் பலவைத்து ஆண்டு வந்து
ஆயிரம் பிறைகண்டு காவியத் தலைவன் ஆனாய்
பாவுக்கும் ஊடைக்கும் பதமளிக்கும் கஞ்சிபோல்
படிப்பும் தொழிலும் கலந்தளித்த காவலனே
பட்டப்படிப்பு படித்து அறியா—நீர்

பள்ளியும் கல்லூரியும் பாரினில் அமைத்து—நீர்
பாரோர் புகழ பணியாற்ற ஓர்மருமகனும்
பாசமுள்ள ராணா லக்ஷ்மணனைப் பெற்றாயப்பா
எண்ணத்தில் பதினாறு இன்னமும் முப்பதாய்
எண்பதிலும் எடுத்து திண்ணமாய் நடத்திடும்
என்னே உன்றன் இளமையின் ரகசியம்
எங்களுக்குச் சொன்னால் ஏற்று நடப்போம்
மூவர்கோள் தொழிலை முறையாய்ச் செய்து
முன்னேறும் தமிழனுக்கு முழுமதியாய் ஒளிவிட்டு
இனத்துக்கு இலக்கியம் படைத்து இன்னுமோர்
இளம் தலைமுறைக்குச் சரித்திரம் படைத்த நாயகனே.
எத்தனையோ அறியபல தொண்டினைச் செய்து
எண்பதில் உம்இனிய விழாவைக் காண்பதற்குப்
பொய்யுடம்பு போக்கிப் புகழுடம்பு எய்திய – புதூர்
மெய்யான வள்ளல் "துரையப்ப" முதலியார்
காரியப் பிள்ளை நான் அவர் நினைவாகக்
கலந்து வணங்கும் வாய்ப்பினை நல்கிய
விழாக் குழுவினருக்கு முதற்கண் வணக்கம்
விழாச் சிறப்படைய வேலவனை வேண்டி
நல்லறத் தம்பதி சீரங்காயி அம்மாள்
இல்லறத் தலைவர் முத்துசாமி முதலியார்
இருவர் நீங்கள் ஈருயிர் ஓர்உடலாய்
இணைந்து இன்றுபோல் என்றும் இன்பமாய்
நிறைவான புகழுடன் நீடூழி வாழ்கவென
நீலமயில் வாகனனை வணங்கி வாழ்த்துகிறேன்.

பே

மு. சிவசண்முகம்
பொதுச் செயலாளர்.
கோவை மாவட்டச் செங்குந்த மகாஜன சங்கம்
21-C, அன்சாரி வீதி, உடுமலைப்பேட்டை – 642 126.
கோவை மாவட்டம்

நாள் 18.8.94

ஈரோடு திரு ஆர்.ஏ.என். முத்துசாமி முதலியார் அவர்களின் 81ஆம் ஆண்டு விழா வாழ்த்துக்கள்

வாழ்த்து மலர்

ஈரோடு போற்றுகிற எங்கள் நல்லார்
எந்நாளும் கல்வியிலே கருத்து மிக்கார்
சீரான தொழில்நுட்பக் கல்வியோடு
சிறப்பான அறிவியல் கல்லூரி கண்ட
பார்போற்றும் நற்பெரியார் பாங்கு பெற்ற
பண்பாளர் ! செங்குந்தப் பெருந்த லைவர்!
நேர்மையுள்ளம் நல்லுள்ளம் இவர்தம் சொத்து
நல்லவரை எந்நாளும் போற்று கின்றோம்!

குணம்கண்டார் கொள்கையிலே உறுதி கண்டார்
குன்றாத உழைப்பினிலே இனிமை கண்டார்
இனம்கண்டால் மகிழுகிற பண்பு கொண்டார்!
இணையில்லா ஆன்மீகப் பெருமை கண்டார்!
மனம்கொண்ட அளவுக்குத் தருமம் செய்து
மகிழ்வதனைத் தம்வாழ்வில் என்றும் கொண்டார்
தினம் அணியும் கதராடை போலே உள்ளம்
திகழ்தூய்மை யால்பெருமை கொண்டார் வாழ்க!

மருமகனார் இலட்சுமணனும் 'ராணா' என்றே
மாப்புகழைப் பெற்றவர்காண்' நாண யத்தில்
பிறர்போற்ற வாணிகத்தைச் செய்தே நாளும்
பெரியார்நல் மாவட்ட மாநாட் டோடு
வருவோரை வரவேற்கும் கருத்துக் கொண்டார்'
'வள்ளலார்தம் இல்லத்தில் இருக்கை கொண்டார்'

தினமான தமிழகத்துப் பயணம் கண்டார்
தீவிரமாய்ச் 'செங்குந்தர் நகரம்' கண்டார்.

உள்ளத்து மகிழ்ச்சியெனும் மலர்தொ டுத்தே
உயர்தமிழ்ப் பாமாலை சூட்டு கின்றேன்'
'உள்ளம்போல் உயர்'வென்னும்' குறளுக்கேற்ப
உயர்பண்பிற் கிலக்கணமாய் வாழும் எங்கள்
நல்லதொரு எண்பதொடு ஒன்று சேரும்
நல்லவரை வல்லவரைப் போற்று கின்றேன்'
நல்லதமிழ் இனிமையென நாளும் வாழ்க'
நானிலத்து வளம் ஒன்றாய்ச் சேர்ந்து வாழ்க'

வி. இராமசாமி,
தலைவர் செங்குந்தம்,
தாராபுரம் வட்டக்கிளை.

நாள் 27.8.94

வாழ்த்தி மகிழ்கின்றோம்

தொழுதிடற்கு உரியபண்பாம் பொதுச்சே வைக்குத்
தூய உளம் கொண்டமைந்த கல்வித் தந்தை
கல்விக்கென பயனுள்ள திட்டங்களைச் செயலாய்
மாற்றி விழுதுகளாய் வேரூன்றிப் புகழ்பரப்ப
ஈரோட்டின் பெருமைக்குப் பெருமை சேர்க்கும்
எங்கள் செங்குந்தம் குலம்வாழச் சக்ரவர்த்தி
ஆல்போல் தழைத்து அருகுபோல் வேரூன்றி
பல்லாண்டு பல்லாண்டு வாழ்கவெனப் பணிந்து இவ்வையகம்
உள்ளாண்டும் உயர்ந் தோங்கவே
விருப்பமுடன் விடுக்கின்றோம் வாழ்த்துக் காண்

A. அங்கமுத்து, எம்.காம்.,
மேலாளர்
ஈரோடு தொழில்நுட்பக் கல்லூரி
கவுந்தப்பாடி – 638 455

நாள் 20.8.94

நீடுழி வாழ்க

பல்லாண்டு பல்லாண்டு வாழ்க! வெள்ளைப்
பனிமலர் உள்ளமே நீடுழி வாழ்க!
சொல்லாலும் செயலாளும் நன்மை – செய்யத்
துடிக்கின்ற இதயமே நீடுழி வாழ்க!

உழைப்பிற்கோர் சிகரமே வாழ்க! – எங்கள்
உயர்வுக்குத் துணை செய்யும் ஊக்கமே வாழ்க!
மழைநிகர் கருணையே வாழ்க! – எங்கள்
மனக்கோயில் உறைந்திடும் தெய்வமே வாழ்க!

பழம்போல் இனிக்கின்ற அப்பா! – கம்பன்
படைத்திட்ட கவிபோலும் நீடூழி வாழ்க!
தொழத்தகும் அன்னையாம் சீரங்காய் அம்மாள் நாளும்
தொழுதிடும் செல்வமே நீடூழி வாழ்க!

எண்பதாம் ஆண்டு நிறைவுற்ற – எங்கள்
அன்புடை அண்ணலே நீடூழி வாழ்க!
பிறை–கோடி கண்டுலகு போற்ற – வாழ்வில்
பீடெலாம் பெற்றினிது நீடூழி வாழ்க!

வாழ்க!! வாழ்க!! வாழ்கவே!!

அ. இளங்கோவன், M.A.,M.Phil.,M.L.I.,Sc.,
நூல்கர்
ஈரோடு தொழில்நுட்பக் கல்லூரி
கவுந்தப்பாடி – 638 455

நாள் 21.8.94

எங்கள் தலைவர்

ஓராண்டா ஈராண்டா அப்பப் பா! நீர்
ஓராயிரம் பிறைகண்ட எங்கள் வள்ளல்
ஈரோட்டில் உம்பெயரோ வேத கீதம்
என்னமாயம் செய்தனையோ எங்கும் உம் நாதம்!
பேரேட்டில் கணக்கு பார்த்தா நன்மை செய்தீர்?
பேர்சொல்ல வேண்டு மென்றா தொண்டு செய்தீர்?
நீரெட்டி நடந்த இடம் சோலை யாச்சு – கல்வி
தேரோட்டம் ஈரோட்டில் உம்மா லாச்சு!

ஓவியத்தில் உம்உருவம் தீட்டு தற்கு
ஒரு நூறு வண்ணங்களைச் சேர்த்த போதும்
தாவிவரும் உம்கருணை விழிய ழகை ஓர்
தூரிகையால் காட்டலாமோ? இயலாதன்றோ!
பாவியற்றும் பாவலர்கள் பலபேர் கூடி
பைந்தமிழில் உம்புகழைச் சொல்லிச் சொல்லி
காவியங்கள் பாடினாலும் உன்றன் ஈரக்
கருணைசிந்தும் இதயத்தைப் பாட லாமோ!

கொங்குநாட்டுச் சீமையிலே எங்கள் வேந்தன்
கொடி பறக்கா இடமேயில்லை ; அனைத்தும் உண்மை
செங்குந்தர் மரபுக்கோர் திலக மாகி
செந்தமிழாய்க் கீர்த்திபெற்றார் எங்கள் தலைவர்
சிங்கம்போல் சிலிர்த்தெழுந்த அவரின் பார்வை
செல்லுகின்ற இடமெல்லாம் கல்விச் சாலை
தங்கம்போல் மேனிமின்ன வெள்ளை உள்ளம்
தலைமுடியில் வெண்மைகாட்டும் அன்பின்வெள்ளம்

திங்கள்முகக் காமாட்சி அம்ம னுக்கும்
தெய்வீகக் கோயில்கண்டு திளைக்கும் நெஞ்சம்
எண்பதிலே அடிபதிந்து நிமிர்ந்து நின்று
இளையோரும் நாணுகின்ற நடையைக் காட்டும்
எங்களய்யா! தலைவா! எந்த நாளும்
எழிலரசி காமாட்சி காத்து நிற்பாள்
விண்பதிந்து கண்சிமிட்டும் உடுக்கள் கூட்ட
எண்களிலும் எங்களய்யா தம்பதியினர்
நீடுவாழ்வார் ! வாழ்க !! வாழ்க !!!

கனக சண்முகம், M.A.,
செயலர்
அம்மாப்பேட்டை ஒன்றிய
செங்குந்தமகாசன சங்கம்,
குருவரெட்டியூர் – 638 504.
பெரியார் மாவட்டம்.

நாள் 20.8.94

"வெள்ளை மனங்கொண்ட பிள்ளை"

என் இனிய தலைவர் – தந்தை – வழிகாட்டி – ஆசான் – நண்பர்)

மானிடராய்ப் பிறப்பதற்கே நல்ல
மாதவம் செய்திட வேண்டுமம்மா – என்றான் பாரதி
அரிதரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது
என்றார் தமிழன்னை ஔவை
பலகோடி மாந்தர் உலகில் பிறந்தாலும்
பார்போற்றும் பண்புடையார் எத்துணைபேர்?
காந்தியும், புத்தரும், காமராசும், பிறந்தனர்
ஒரு சமுதாயப் பணிக்கு –
நேருவும் லிங்கனும் தோன்றினர் – ஒரு
நாட்டின் நலம் காக்க –
இராமசாமி இலட்சுமண சாமி முதலியார்...
மருத்துவத்துறையின் மாண்பிற்கு –
கலைத்துறையில் மின்னியவர் ஒரு
பம்மல் சம்பந்த முதலியார் –
இலக்கியம் ஓங்கிட வள்ளுவன்; இவனுடன்

இப்படி ஒரு சிலரே உண்டிவ்வுலகில்...
பிறந்தோம் வளர்ந்தோம் ஏதோ வாழ்ந்தோம்
என்றில்லாமல் – பிறப்பை உலக ஏட்டில் பதிப்பவனே – மனிதன்
முன்னவர்களின் வரிசையில் முகிலென வந்தார்
நம் இதயம் போற்றும் உத்தமர், உண்மையின் உருவம்.
காந்தியவாதி... கடவுள் பற்றாளர் – கருணையின் வடிவம்
சிந்தனையாளர்... சிறந்த உழைப்பாளி – அவரே
நம் உள்ளம் குடிகொண்ட வெள்ளை மனங் கொண்டபிள்ளை
R.A.N. முத்துசாமிஐயாவாம்...

இவரைப் பற்றி

உருவத்தில் பெரியவர், உள்ளத்தில் குழந்தை
கற்றது சிறிதளவு; கற்பிக்க இவர் மனமோகடல் அளவு;
(கல்விப்பணியில்)

நம்மினத் தலைமை பொறுப்பேற்று
நல்லகாரியம் செய்வதிலே வல்லவர்
தமிழ் வளர்ந்தது சங்கத்தால்
சங்கம் வளர்ந்தது செங்குந்தர் சங்கம் வளர்ந்தது இவரால்.
சொல் மாறா தகைமையாளர் –
சொன்னதைச் செய்யும் திறமையாளர்
அனுபவத்தால் பிறருக்குத் தந்தை,
கருத்துக்களைச் சொல்வதில் நல்ல வழிகாட்டி,
தொன்மை நீதிகள் சொல்வதில் இவர் ஒரு ஆசான்,
பழகிடுவதற்கோ நல்ல நண்பரிவர்.

தூரத்தில் நின்றுபார்த்தால் தெரியாது உண்மை
நெருக்கமாய் நின்றுணர்ந்தால் தெரியும் ஒருவர் தன்மை என்றார்
அறிஞர் ஒருவர்
ஐயாவிடம் பழகியவர் இவரின் குணமும் பண்பும் புரிந்திடுவர் –

எனவே தான் :

வெள்ளை மனங்கொண்ட பிள்ளையவர்
தொல்லை நிறைந்த உலகில் – பல
தொண்டுகள் புரிந்தே உயர்ந்தவர்

வாழ்க நீடு !
ஒழுங்கினைக்காப்போம்!

வளர்க இவர் பணி!!
உதவிகள் செய்வோம்!!

சூழ்க நலம் பல
உறவினை வளர்ப்போம்!!!

நாள் 20.8.94

மே.ச. வாசு, பி.எஸ்.ஸி.,
பெ. மேட்டுப்பாளையம்

சரித்திர நாயகன்

வணங்கும் தகுதி மட்டுமே
இருந்தும்
வாழ்த்தும் வாய்ப்பு கொடுத்தமைக்காக
வணங்குகிறேன்.

கல்லாமை இருளில்
சமுதாயம் மூழ்கிவிடக்கூடாதென்பதற்காக
அறிவொளி தீபம் ஏற்றிய ஆசானே!
நாங்கள்
வேலைவாய்ப்பு அலுவலகத்தைக் கூட
நம்புவதில்லை
உங்களைத்தான் நம்பியிருக்கிறோம்
நீங்கள்
இன்னொரு எம்ளாய்மெண்ட் எக்சேஞ்ச்!

நெசவுத் தறியின் மீது
கவிழ்ந்து கிடந்த
என்போன்ற
எத்தனையோ மனிதர்களைத்
தட்டி எழுப்பி
வாழ்வின் தடம் காட்டினீரே!

முகவரியே இல்லாமல்
வெறும் காகிதப்பட்டங்களோடு
வீதிதோறும் அதைத் தேடிக்
கொண்டிருந்தவர்க்கு
விலாசம் கொடுத்தீரே
அதுவும் நிரந்தரமாய்!
அன்னை சரஸ்வதிக்குக் கூட
உம்மீது பொறாமை வரும்!
கல்வி வேண்டுபவர்கள்
தன்னைக் கூட வணங்காமல்
உம்மையல்லவா வணங்குகிறார்கள்!

உங்களின் சமகாலத்தில்
வாழ்கிறவர்கள் பாக்கியவான்கள்!
மழை
உங்களுக்காகப் பொழியும் போது
அவர்கள் காட்டிலும் விளைகிறது!

தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகங்கள்
பதினான்கு
உங்களையும் சேர்த்துச் சொன்னால்
பதினைந்து
நீங்கள் இன்னொரு பல்கலைக்கழகம்!

எண்பதை எட்டுவதற்குள்
எத்தனை சாதனைகள்!
அவைகளை
விரல் விட்டு எண்ணவேண்டுமெனில்
என் விரல்கள் போதாது
நிறைய நபர்களை
துணைக்கு அழைக்க வேண்டிவரும்!
வாழ்வதற்காக மனிதர்கள்
போராடிக் கொண்டிருக்கிறபோது
வாழ்க்கை!
உங்கள் வாயிற்படியில்
தவம் கிடக்கிறதே!
அது எப்படி?

கற்பாறைகளும் கூட
உங்கள் கால் பட்டதால்
பஞ்சுப் பொதியாகிப் போனதே!
அது எப்படி?

வெறும் துணித்திரைகளையே
தாண்ட முடியாதவர்கள் மத்தியில்
இரும்புத் திரைகளையெல்லாம்
தாண்டி வந்து விட்டீர்களே!
அது எப்படி?

கம்ப்யூட்டர்களே
திணறுகிற கணக்குகளைக்கூட
மனக்கணக்காகவே போட்டுவிடுகிறீர்களே!
அது எப்படி?
தைரியம்! அசாத்திரிய தைரியம்!!

சிலர், கனவுகளோடு வாழ்கிறார்கள்
இன்னும் சிலர் கனவுகளாகவே
வாழ்கிறார்கள்
நிஜம் மட்டுமே வாழ்வது
நீங்கள் தான்!

வேதங்களைக் கற்றுக் கொடுக்க
ஆசான் வேண்டும்!
வேதங்களைக் கற்றுக்கொள்ள
கட்டுப்பாடு வேண்டும்!
வேதங்களாகவே வாழ்ந்துகாட்ட
ஒரு ஆர்.ஏ.என்.எம். வேண்டும்!

நீங்கள் இந்துவாக இருந்தும்
பைபிளைப் பின்பற்றுகிறீர்கள்!
பசிக்கிறவனுக்கு மீன்துண்டு தராமல்
மீன் பிடிக்கும் கலையை அல்லவா
கற்றுத் தருகிறீர்!

உங்களின் சைவ நெறிகளும்
ஆன்மீக முறைகளும்
அஹிம்சை வழிகளும்
இன்னமும்
ஆயிரம் ஆண்டுகளுக்குப் பேசப்படும்!

நீங்கள் நான்கு கோவில்களை
நிர்மானித்திருக்கிறீர்கள்!
கல்விக்காக மூன்று
கடவுளுக்காக ஒன்று!
மனிதர்கள் மட்டுமல்ல...
கல்லூரிக் கட்டடத்தின்
ஒவ்வொரு செங்கல்லும்
உங்கள் பெயர் சொல்லும் !

சிலர் வாழ்வதின் அர்த்தம்
அவர்களுக்குத் தெரியாது
இன்னும் சிலர்க்கோ
வாழ்வின் அர்த்தமே தெரியாது
ஆனால்,
எங்கள் வாழ்வின் அர்த்தம்
எங்களுக்குத் தெரியும்
அது,
உங்களை வணங்குவதற்காகவே
நாங்கள் வாழ்கிறோம்!

வெல்க நீவிர்!
வளர்க உங்கள் பணி!

K. கௌதமன்,
III Year, Processing E.I.T.

நாள் 20.7.94

ஒரு கவிக்குயிலின் கான மழையில்...

ஆண்டு ஆண்டுக் கோடியாய்
மாந்தர்கள் மலர்ந்து
பூத்து, காய்த்து, சருகுகளாகுகின்றனர்!

ஒரு சில மாந்தர் மட்டும்
மலர்ந்து, வளர்ந்து
ஒரு சாதனையைச் சந்திக்கின்றனர்!
உதிர்கின்றன வெற்றிக் கனிகள்!
அவர்கள் சிந்திப்பதால்!
எத்தனையோ அதிசயங்கள்!
இந்த வாழ்க்கை எனும் ஆழ்கடலில்!
மூழ்குகின்ற எல்லோரும்
முத்தினை எடுப்பதில்லை!
மலர்ந்திட்ட எல்லோரும்
மாட்சிமையை எட்டியதில்லை!
வாழ்ந்திட்ட எல்லோரும்
வரலாற்றில் நிலைப்பதில்லை!
ஏன்! ஏன்! ஏன்!
எலும்பினைத் தான் வருத்தி
ஊனினைத் தான் உருக்கி
உள்ளமதைச் சீர்திருத்தி
புத்தியைக் கூர்படுத்தி
வாழாத நிலையினாலே!
வாழ்விழந்து போகின்றார்!
வாட்டமுற்றுத் திரிகின்றார்!
ஆனால், நீவிர்
சாதாரணக் குடும்பத்தில்
சந்திரனாய் மலர்ந்தவர் !
உழைப்பெனும் ஏணியில்
ஏறிப்போய் சாதனையைச் சந்தித்தவர்!
புத்தகத்தைப் புரட்டவில்லையென்றாலும்
மனித வாழ்க்கையைப் புரிந்தவர்!
திரைகடலோடியும் திரவியம் தேடு!
பொருளில்லோர்க்கு இவ்வுலகமில்லை!
என்றார் நம் முன்னோர்கள்

நமக்குக் கோடிட்டுக் காட்டினர்!
தாங்கள் அதை மனத்தில் வைத்தே
வளத்தினைப் பெருக்கியவர்!
வளத்தினை வளர்த்ததோடல்லாமல்
வண்ண வண்ணப் பூக்களைப் போல்
வட்டமிட்டுத் தேன் உண்டு
வாட்டமற்றுச் சுற்றித்திரியும் வண்டினைப்போல்!
எண்ணற்ற துறைகளிலே,
எள்ளளவும் இடமில்லாமல்,
எடுத்ததைப் பாங்குடன்
நடத்தியே காட்டியவர்!

மனித வாழ்க்கையில்
மலர்ச்சி பெற வேண்டுமானால்,
மந்திரம் போல் மடக்கி, தமையாளும்
செல்வத்தை, நாளும்; நாமும் பெற்று
பிறர்தாமும் செழிப்புறவே உழைத்திடும்
செம்மையான உம் வழிநோக்கி
இளைஞரெல்லாம் இயங்கிவிட்டால்
இல்லாத இழிநிலை
இல்லாது போய் விடும்
இனிய நம் தேசத்திலே!
எண்பது வயதினை
எட்டிப் பிடித்து விட்ட தாங்கள்,
இன்னும் பல நூறு ஆண்டுகள்
பாங்குறவே வாழ்ந்திட்டு
பல துறையில் பாடுபட்டு;
இச்சமுதாய வளர்ச்சிக்காகப்
பாடுபடும் தங்கள் தொண்டு
எந்நாளும், எக்காலமும்
எவ்விடமும், எல்லா மக்களுக்கும்
என்றும் வேண்டுமன்றோ!
எங்கள் இதயத்தின்
ஸ்சுவரங்களை, இனிய
ஸ்லோகங்களாக உங்களுக்கு
அர்ச்சனை செய்விக்கின்றோம்!
அன்பினைப் பொழிகின்றோம்!
அன்பிற்கினியவரே என்றும் நீர் வாழி!

பாராட்டு மடல்கள்

C. K. Kumaraswamy, M.A.,B.L.,
Hony. Correspondent, Vallal Sabapathy Matriculation School,
Registrar (Retd.) Madras University.
25, Harrington Road, Chetpat, Madras - 600 030. Ph. : Res : 427550

நாள் 23.8.94

கல்விப்பணி மேலும் சிறக்கட்டும்!

நம் பெரியவர் மரியாதைக்குரிய திரு R.A.N. முத்துசாமி முதலியார் அவர்களது 81வது ஆண்டு நிறைவு விழா புரட்டாசித் திங்கள் 2ம் நாள் (18.9.94) ஞாயிற்றுக்கிழமை நடைபெற இருப்பது அறிந்து மகிழ்ச்சியடைகிறேன்.

மானுடப்பிறவி மகத்தான சேவையின் அடித்தளம். அப்படி இருந்தும் அந்த அடித்தளத்தைப், பயனுள்ள எதிர்காலத்தை உருவாக்க சிலரே முயற்சி எடுக்கின்றனர். அவர்களுள் சிலரே வெற்றி காண்கின்றனர். சிறப்பான வெற்றி கண்டவர்களில் பெரியவர் R.A.N. ஒருவர்.

வியாபாரத்தில் தனக்கெனத் தனி இடத்தைத் தேடிக்கொண்ட அவர், கல்விச் சேவையிலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு, அதனைக் குறுகிய காலத்தில் வானளாவ வளர்த்த பெருமை கொண்டார்.

மறைந்த மாமேதை தாமரைத்திரு நெ.து. சுந்தரவடிவேலு அவர்கள் என்மீது வைத்திருந்த அன்பையும், ஆதரவையும், செயல்திறனையும், நம்பிக்கையையும், முதலீடாக்கி நம் இனத்துக்கு உயர்கல்வி அமைப்பை உருவாக்க, உறவினர்களைக் கலந்து முதல் கட்டத்திலேயே பட்டப்படிப்பைப் புகுத்தும் முடிவெடுத்து நெ.து.சு. அவர்களின் ஆசியுடன் பணியைத் தொடங்கினோம்.

இந்த எண்ணத்தைப் பொறுப்பேற்று நடைமுறைப்படுத்த திரு R.A.N.M. அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது.

அந்தப் பொறுப்பினை அயரா உழைப்பாலும் அசராத் நெஞ்சுரத்தாலும், அவர்தம் தலைமையில் இயங்கிய குழுவின் ஒத்துழைப்போடும் இட்டப்பணியைச் செவ்வனே நிறைவேற்றிவிட்டார். ஆரம்பக் கட்டத்தில் பணம் ஈட்டும் முயற்சியில் என்னுடைய நற்பெயரையும் புகழையும் அணைத்துக் கொண்டதும், தொடர்ந்து யாரால் எதைச் செய்து கொள்ள முடியும் என்பதை அறிந்து அவ்வாறே பணியாற்றி வெற்றி கொண்டவராகத் திகழ்வது அவர் திறமைக்கு ஓர் எடுத்துக் காட்டு.

இன்று ஈரோடு கலைக்கல்லூரி ஒரு தானியங்கிக் கல்லூரி (Autonomous College). அக்கல்லூரியில் அனேகமாக எல்லாச் சிறப்புப் பாடங்களும் உண்டு. இதனை இந்த அளவுக்கு வளர்த்ததும், கவுந்தபாடிக்கு அருகில் பொறியியல் அமைப்பை அமைத்தது ஆகியவை அன்னாரது கல்வி ஆர்வத்துக்கும் தொலை நோக்கு யுக்திக்கும் முத்தாய்ப்பு. அறிவுகூர்மையும், தொலைநோக்கும், விடாமுயற்சியும் கொண்ட அவரது சேவை தொடரட்டும். அவர் கல்விப்பணி மேலும் சிறக்கட்டும். இவ்வாறான முயற்சியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்ட பெரியவர் R.A.N.M. அவர்கள் மேலும் பல்லாண்டு உடல் நலத்தோடும், உற்சாகத்தோடும் நம்முடன் இருந்து பணியாற்ற இறையருள் முழுமையாகக் கிடைக்க வேண்டும் என்று இறைவனை என் மனச்சுத்தியுடன் வேண்டிக் கொள்கிறேன்.

வாழ்க R.A.N.M. ! வளர்க அவர்பணி!. கல்வி உலகத்துக்கு அவர் பணி மேலும் சிறப்புச் சேர்க்கட்டும்.

P.K. நஞ்சப்ப முதலியார்
உதவித்தலைவர்
ஈரோடு முதலியார் கல்வி நிறுவனம்
25, வாசுகி வீதி,
ஈரோடு

நாள் 15.8.94

என் உற்ற நண்பர்

உயர்திரு R.A.N. முத்துசாமி முதலியார் அவர்களுடன் எனக்கு நெருங்கிய தொடர்பு உண்டு.

கடந்த 20 ஆண்டுகளாக மிக நெருங்கிய நட்பாக அது விரிந்து உள்ளது.

அவர் செய்யும் கல்விப் பணியிலே உடன் இருந்து பணியாற்றும் வாய்ப்பு எனக்குக் கிடைத்து உள்ளது.

ஈரோடு கலைக் கல்லூரி, ஈரோடு இன்ஸ்ட்யூட் ஆப் டெக்னாலஜி ஈரோடு இன்ஸ்ட்டியூட் காமாட்சியம்மன் பாலிடெக்னிக், அருள்நெறித் திருப்பணிமன்ற மேல்நிலைப்பள்ளி, அருள்நெறித் திருப்பணிமன்ற மெட்ரிகுலேசன் பள்ளி ஆகிய கல்வி நிறுவனங்களில் அவருடன் இணைந்து கல்விப்பணியாற்றுகிற வாய்ப்பு பெற்றுள்ளேன்.

பணியில் அவரின் ஆழ்ந்த ஈடுபாடு, வேகம், எடுத்தக் காரியத்தை முடிக்கும் திறன், முடிவு செய்யும் திறமை, ஒவ்வொரு தனி நபரிடம் உள்ள திறமைகளை ஆராய்ந்து " அதனை" அவன் கண் "விடல்", எடுத்த காரியம் யாவினும் வெற்றி இவைகள் நான் அவரிடம் காண்கின்ற அரிய, பெரிய மிகச் சிறந்த நற்குணங்களாகும்.

அவரது 81ஆம் ஆண்டு விழா சிறக்கவும், அவர் ஆற்று மணலினும் அதிக ஆண்டுகள் வாழும் பேறு பெற்று வாழ்வாங்கு வாழ்ந்து, மென்மேலும் அவரது வாணிபமும் பணியும் சிறந்து அவரது குடும்பமும், சமுதாயமும், அவரின் பணியாற்றுகிற கல்வி நிறுவனங்களும் தெய்வப்பணியும் சிறக்க எனது நெஞ்சார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சு. வையாபுரி முதலியார்,
36/21, Easwaran Koil Street, (Arasu Building)
N.M.S. Compound, Erode - 638 001.

நாள் 10.8.94

தியாக உள்ளம் படைத்த தியாகச் செம்மல்

செங்குந்தர் செம்மல், கல்வித்தந்தை, கல்விச் சக்கரவர்த்தி மதிப்பிற்குரிய ஆர்.ஏ.என். முத்துசாமி முதலியார் அவர்கள் நமது சமுதாயம் கல்வியில் சிறந்து விளங்கவும், முதலியார் கல்வி நிறுவனம் பெரும் வளர்ச்சி அடையவும் அரிய பல சாதனைகள் புரிந்தும் 80–ம் வயதினைக் கடந்து தனது 81–ம் வருடத்தில் அடியெடுத்து வைத்துள்ளார்கள். தலைவர் அவர்களின் கடும் உழைப்பினையும் கல்வியின்பால் அவர்கொண்ட ஆர்வத்தினையும் பாராட்டு முகமாக வண்ணமிகு விழாவிற்கு ஏற்பாடுகள் செய்துள்ள விழாக்குழுவினர் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியினையும், வாழ்த்தினையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்வித்தந்தை அவர்கள் 1954–ம்வருடம் கவுந்தப்பாடி சுதேசி ஜவுளி வர்த்தக சபையின் தலைவராகப் பணியாற்றிய காலத்தில் என்னையும் அச்சங்கத்தில் உறுப்பினர் ஆக்கி அவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பினை எனக்கு ஏற்படுத்திக் கொடுத்தார்கள்.

நமது சமுதாய மக்கள் பயன்பெறும் வகையில் ஈரோட்டில் நமக்கென ஒரு கலைக்கல்லூரி இருந்தால் நல்லது என்ற எண்ணத்தில் நானும் நமது சென்னைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் பதிவாளர் செம்மனச் செம்மல் திரு சி.கே. குமாரசாமி அவர்களும்

> "இதனை இதனால் இவன் முடிக்கும் என்று ஆய்ந்து
> அதனை அவன் கண்விடல்".

என்ற வள்ளுவரின் வாக்கின்படி நம் தலைவர் திரு ஆர்.ஏ.என். முத்துசாமி முதலியார் அவர்களை அணுகி கூறியபோது அவர் மிகவும் மன மகிழ்ச்சி அடைந்து அந்த மாபெரும் கல்விப் பொறுப்பினை மனமார ஏற்றுக் கொண்டு, ஏற்றுக்கொண்ட நாள்முதல் இன்றுவரை நம் முதலியார் கல்வி நிறுவனம் பெரும் வளர்ச்சி அடைய இரவு பகல் பாராது, கண் துஞ்சாது, உடல்நலம் பேணாது அரும்பாடுபட்டு வருகின்றார்கள்.

அன்று இந்த நிறுவனம் கலைக்கல்லூரியுடன் ஆரம்பித்து, பின்பு தொழிற் நுட்பக் கல்லூரி, தொழிற்பயிற்சிக் கல்லூரி என ஆலமரம் போல் விரிந்து சமுதாயத்திற்கு நிழல்பரப்பி வருகின்றது என்றால் அது தலைவரின் அரும்பெரும் சாதனையாகும். மேலும் நமது நிறுவனத்தின் மூலம் மகளிர் கலைக்கல்லூரி, பொறியியல் கல்லூரி, மருத்துவக்கல்லூரி மற்றும் நமது சமுதாய மக்கள் பயன்பெறும் வகையில் ஒரு மருத்துவமனை ஆகியவை ஏற்படத் தலைவர் மேன் மேலும் பாடுபட வேண்டுகிறேன்.

நம் தலைவர் ஒரு தியாக தீபம் இதுவெறும் வாய் வார்த்தையல்ல. உண்மை. இதனை முன்பு நடந்த ஒரு நிகழ்ச்சியினை நினைவூட்டினால் புரியும் என எண்ணுகிறேன். நமது ஈரோடு கலைக்கல்லூரி மிகவும் செம்மையான முறையில் நடைபெற்று வந்த நேரத்தில் சோதனையான காலமும் வந்தது. அந்தச் சோதனைக் காலத்தில் கல்வியின் ஒளிவிளக்கு நம் தலைவர் அவர்களும் அப்போது கல்லூரித் தாளாளராகப் பணியாற்றிய திரு பி.பி. சதாசிவம் அவர்களும் தங்களுடைய சொந்த சொத்துக்கள் அனைத்தையும் நீதிமன்றத்தில் அடமானம் வைத்து நமது கலைக்கல்லூரியினை மீட்டார்கள். இப்படிக் கல்விக்காகத் தனது சொந்த சொத்துக்கள் அனைத்தும் போனால் கூட கவலை யில்லை, எனக்குக் கல்வி தான் முக்கியம் என்ற தியாக உள்ளம் படைத்த தியாகச் செம்மல் நம் தலைவர் ஆர்.ஏ.என். முத்துசாமி முதலியார் அவர்கள்.

நம் தலைவர் அவர்கள் இன்னும் நூறாண்டு காலம் வாழ்ந்து எல்லோ ராலும் பொன்மலர் காசுகளால் பெருமையுடன் அர்ச்சித்து சதாபிஷேக விழா காண வேண்டும். தலைவர் அவர்களை வாழ்த்த எனக்கு வயதில்லை. நான் வணங்கும் செந்தாம்பாளையம் ஸ்ரீ மகாமாரியம்மன் பரிபூரண அருளால் எல்லா வளங்களும் பெற்று மேன்மேலும் பல சிறப்புகளும், பட்டங்களும் பெற்று பெருவாழ்வு வாழ என் நெஞ்சில் இருத்தி வணங்குகின்றேன்.

பிரபாத் J.K. நாராயணன்
பவானி.

நாள் 17.8.94

கல்வித் தந்தை வாழ்க!

இப்பவும் ஈரோடு நமது கல்வித் தந்தையும், கல்விச் சக்கரவர்த்தியுமாகிய மதிப்புக்குரிய உயர்திரு R.A.N. முத்துசாமி முதலியார் அவர்களின் 81ஆம் ஆண்டு பிறந்த விழா ஏற்பாடுகள் பற்றி அளவிலா மகிழ்ச்சி அடைகிறேன்.

அன்னாரின் 81ஆம் ஆண்டு பிறந்த விழா புரட்டாசித் திங்கள் 2ஆம் நாள் (18.9.94) ஞாயிற்றுக்கிழமை மிகச் சிறப்பாக நடைபெறவும், அன்னாரின் ஆரோக்கியத்திற்கு வேண்டி, நானும் என் குடும்ப சகிதமும் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திருக்கிறேன்.

மேற்படி விழாவில் அன்னாரின் 81ஆம் ஆண்டு விழா மலரில் வெளியிடுவதற்காக எனது தரப்பிலிருந்து நல்வாழ்த்து கட்டுரை கவிதை கேட்டுள்ளீர்கள். சந்தோஷம். கவிதை கட்டுரை போன்றவை எழுதியனுப்ப ஆற்றல் இல்லாத நிலைக்கு மன்னிப்புக் கோருகிறேன். எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவாராக.

மயிலோன் ஏ. ஆறுமுகம்,
முதலியார் கல்வி நிறுவனம்
ஈரோடு.

நாள் 14.8.94

யான் வாழும் நாளும் முத்துசாமி வாழிய!

'அரிது, அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது' என்பார் சான்றோர். இம்மனிதப் பிறவியிலும் சுட்டி ஒருவரின் பெயரைக் கூறி உலகம் வணங்கும் நிலை ஏற்படுவது அரிதிலும் அரிதாகும். இந்நிலையே வையத்துள் வாழ்வாங்கு வாழும் நிலை; உழைப்பின் இலக்கணம் கூறும் நிலை; விடாமுயற்சியின் பெருமை கூறும் நிலை; மடியின்மைக்குப் பரிசாகும் நிலை; ஊக்கம் உடைமைக்குக் காட்டாகும் நிலை; பிறந்த குடிக்குப் பெருமை சேர்க்கும் நிலை; ஏன்? சுருங்கக்கூறின் இதுவே தெய்வநிலை எனலாம். இத்தனை நிலைகளையும் ஒருங்கே கூட்டிக் குழைத்தெடுத்து வடிவாக்கினாலும் எங்கள் நாயகர் R.A.N. முத்துசாமி முதலியாரின் வடிவத்துக்கு இணையாகா.

ஆம்! பெரியார் மாவட்டத்தின் பெருமைக்குப் பெருமை சேர்க்கும் பெற்றியர் இவர். செல்வந்தர்கள் வையகத்துக்குச் சேவை செய்யும் வழிகளை வகுத்துக் காட்டும் முன்னோடியிவர்! உழைப்பால் உயரந்த உத்தமர் இவர்! இவரின் இளமைக்கால வாழ்வு இன்றைய இளைஞர்களுக்கு வழிகாட்டும்.

ஏழ்மை நிறைந்த நெசவுக் குடும்பத்தில் பிறந்த, விழா நாயகரான இராக்கியபாளையம் அங்கப்ப நாகப்ப முத்துசாமி முதலியார் அவர்கள் உலகியல் கல்வி நிறைந்தவர். "நான்கு சுவர்களுக்கிடையில் பெறும் கல்வி அறிவை விட, பரந்த உலகில் பெறும் அனுபவக் கல்வியே சிறந்தது" என்பார் கவிஞர் இரவீந்திரநாத் தாகூர். கல்விக் கடவுள் காமராசரும், தந்தை பெரியாரும் பயின்ற பள்ளியிலே தான் நம் விழா நாயகரும் பயின்றார். காமராசர் தமிழகமெங்கும் கல்விக்கூடங்களைத் திறந்தார். பெரியார் நாடு முழுவதும் அறிவுக் கூடாரங்களைத் தோற்றுவித்தார். நம் முத்துசாமி முதலியாரோ கல்விக்கூடங்களையும் அறிவுக் கூடாரங்களையும் இணைந்தே திறந்து வைத்தார். "கல்விக் கரையில" என்பர் சான்றோர். ஆனால் இவரோ இன்றைய கல்விப் பெருக்கிற்கு அணைகட்டும் பொறியாளர்.

'ஒரு கல்விக்கூடத்தைத் திறப்பவன் பல சிறைச்சாலைகளை மூடுகிறான்' என்பது மேலைமொழி. எத்தனை கல்விக்கூடங்கள். எத்தனை வகைப் படிப்புகள் இவரின் முயற்சியால் இங்கே தோன்றியுள்ளன. உலக வாழ்க்கையில் செல்வத்தினை மட்டுமன்று; அனுபவத்தினையும் திரட்டியவர் இவர். இவரின் வாழ்வியல் அபிராமி அந்தாதிப் பாடலை நினைவூட்டுகிறது.

கலையாத கல்வி
குறையாத வயது
கபடற்ற நட்பு
முதிர்வுமறையும் இளமை
குன்றாத வளம்
நோயற்ற வாழ்வு
சலியாத மனம்
அன்பு அகலாத மனைவி
தவறாத வழித்தோன்றல்கள்
தாழ்விலாப்புகழ்
சொன்னசொல் தவறாத பண்பு
தொலைவில்லாத நிதியம்
அருட்பெருங் கொடை,
வளையாத ஆளுமைப் பண்பு
துன்பமில்லாத வாழ்வு

ஆகியவற்றை அருள அபிராமிபட்டர் திருக்கடவூரில் வாழும் இறைவியை வேண்டுகிறார். அவர் இவற்றைப் பெற்றாரோ, பெறவில்லையோ, யாம் அறியோம். ஆனால் இப்பாடலின் தொகுப்பாகவே நம் முத்துசாமி முதலியார் காட்சியளிக்கிறார். அபிராமி பட்டரின் மறுபிறப்போ இவர்!

ஒரு சுவையான செய்தி, வாரியார் சுவாமிகள் தம் சொற்பொழிவில் வள்ளலாரின் "தனித்தனி முக்கனி பிழிந்து" எனும் பாடலுக்குச் சுவையான விளக்கம் தருவார். இப்பாடலில் குறிப்பிடப்படும் தெள்அமுதை – அதாவது, ஒரு பாத்தரத்தில் வாழை, மா, பலா ஆகிய முக்கனிகளின் சாற்றை எடுத்து ஒன்றாகக் கலந்து, சர்க்கரை, கற்கண்டின் பொடி ஆகியவற்றைத் தூவி, தேன்பெய்து, நெய்விட்டு, கெட்டியாகும்வரை இளஞ்சூட்டில் காய்ச்சி எடுத்து ஆற வைத்துப் பின்பு இந்த அமுதத்தினை உண்டால் எப்படி இருக்கும் என்று எண்ணி நம் முத்துசாமி முதலியார் தம் இளமைக் காலத்தே தைப் பொங்கல் நாளன்று வள்ளலார் கூறிய முறைப்படி தயார் செய்து என்போன்றோருக்குத் தருவார். சுவை! சுவை!! பெருஞ்சுவை!!! அவர் ஒரு அறுசுவை ஞானி; கலைப்பிரியர். அவ்வுணவினை இன்று நான் நினைத்தாலே என் உடலும் உள்ளமும் இனிக்கின்றன.

நம் முத்துசாமி முதலியார் மேலை நாட்டு சாமுவேல் ஜான்சனுக்கு நிகரானவர். இவரைச் சந்தித்தாலோ, பார்த்தாலோ கரடுமுரடானவர் போலத் தோன்றுவார். உண்மை இதுவல்ல. இவர் மிகவும் மென்மையானவர். இவரிடம் நெருங்கிப் பழகியவர்களுக்கு இது புரியும், தெரியும். இவர் சிறந்த உரையாடல் நிபுணர். நகைச்சுவையாகப் பல நேரங்களில் இவர் பேசுவார். இவரின் பஞ்சாயத்துத் தீர்ப்புகள் அனைவரையும் வாய்மூட வைக்கும், வியப்பில் ஆழ்த்தும்.

ஒருமுறை ஊர்ப் பஞ்சாயத்து நடந்தது. இரு பிரிவினரிடையே சிக்கல் ஏற்பட்டது. அங்கே வாதங்களும், பிரதி வாதங்களும் நிகழ்ந்தன. பஞ்சாயத்துக்குத் தலைமை வகித்த முத்துசாமி முதலியாரை நாங்கள் பார்த்தோம். அப்பொழுது அவர் "இருட்டு அறையிலே, முரட்டுக் காளையிடம் சுருட்டுப் பாயின் மேல் நின்று கொண்டு சண்டை போட முடியுமா? வாதங்கள் சரியில்லை" என்று எங்களிடம் கூறினார். முதலில் அவர் கூறியதை நாங்கள் புரிந்து கொள்ள முடியவில்லை. பின்புதான் இதன் உட்பொருளையுணர்ந்து சிரித்தோம்.

இவர் ஆன்மீகப் பெரியோர்களிடத்து மிகவும் ஈடுபாடு கொண்டவர். வாரியார் சுவாமிகளின் அன்புக்குப் பாத்திரமானவர். தவத்திரு. அடிகளாரிடம் நெருங்கிய உறவுடையவர். தவத்திரு. சுந்தரசுவாமிகளுக்கு அணுக்கமானவர். இவர் அருள்நெறித் திருக்கூட்டத்தின் ஆணிவேர். "தொண்டர் தம் பெருமை சொல்லவும் போமோ' என்றபடி ஆன்மீக உலகத்தின் உண்மைத் தொண்டராகவே இவர் இன்றும் விளங்கி வருகிறார்.

ஈரோடு மாநகரில் வணிகர்களிடையே இவரின் செயல்திறன் பலரும் வியந்து போற்றற்குரியது. இவர் 'நிதி நிறுவனம்' நடத்துவதில் பலருக்கும் வழிகாட்டியாவார். நேர்மை, கண்ணியம், முறை தவறாப்போக்கு, கட்டுப்பாடு, நேரம் தவறாமை ஆகிய சிறப்புக்களையெல்லாம் இவர் நிதி நிறுவனம் நடத்தும் வழிகள் மூலம் நாம் உணர முடியும். இவரை "நிதி நிறுவன நாயகம்" என்றும், " ஏலச்சீட்டுச் சக்ரவர்த்தி" என்றும் கூறலாம். இவரின் முன் உதாரணத்தைப் பின்பற்றியே ஈரோட்டில் பல நிதி நிறுவனங்கள் நடந்து வருகின்றன.

ஆயிரம் பிறைகளைப் படிகளாக வைத்தேறிய
வாய்மை தவறாக்குன்றம் இவர். ஒழுக்கப் பேராற்று
வெள்ளம் இவர். எண்பதாண்டு நிறைவெய்திய
பெருமகனாரை அறுபத்தெட்டாண்டுச் சிறுவன் யான்
எங்ஙனம் வாழ்த்துவேன்? அவர் பாதம் படிகின்றேன்
"யான் வாழும் நாளும் பண்ணன் வாழிய" என்ற சங்ககாலத்
தமிழை நினைந்து "இறைவா! நான் இன்னும்
இவ்வுலகத்தில் வாழக்கூடிய என் ஆயுள் ஆண்டுகளைப்
பிறை ஆயிரம் கண்ட பெரியோனுக்கே தந்துவிடு.
உலகம் உய்ய அவர் வாழட்டும்" என்று செம்பொருளை
வேண்டி நிறைவு செய்கிறேன்.

K.M. தண்டபாணி,
முதலியார் கல்வி நிறுவனம்
ஈரோடு.

நாள் 24.6.94

இமாலயா சாதனைப் படைத்தச் சாதனைச் செம்மல்

சீரோடு விளங்கும் ஈரோடு நகரிலே பேரோடு விழங்கும் செங்குந்தகுல பெரியார், கல்வித் தந்தை, கல்விச் சக்கரவர்த்தி செங்குந்தம் குலச் செம்மல், அருள்நெறிப் புரவலர் என்னை வழி நடத்தும் வணக்கத்திற்குரிய ஆசான் பெரியவர் RAN முத்துசாமி முதலியார் அவர்களின் 81வது ஆண்டு விழா இனிதே நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த நல் வேளையில் என் இதயத்தில் தோன்றும் நினைவு மலர்களைத் தொகுத்து, எழுத்து வடிவில் வண்ண மாலையாகத் தொடுத்து வழங்குவதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன்.

1953ஆம் ஆண்டு அவரது பொது வாழ்க்கைத் தொடங்கியது. 1953ஆம் ஆண்டு கவுந்தப்பாடி சுதேசி ஜவுளி வர்த்தகர் சங்கத்தின் துவக்க விழாவில் தலைவராகப் பெரியவர் அவர்களும், செயலாளராகத் திரு P.P. சதாசிவம் அவர்களும், பொருளாளராக என் தந்தை திரு K. முத்துசாமி முதலியார் அவர்களும், பொறுப்பேற்ற அன்று நான் பதின்மூன்று வயது சிறுவன் அன்று தான். முதல் முதலாகப் பெரியவரைப் பார்த்தேன். அன்று பார்த்த பெரியவரின் சீரிய சிந்தனை மிக்க உருவம் என் நெஞ்சில் பசுமரத்து ஆணியாகப் பதிந்து இன்றுவரை இருந்து கொண்டிருக்கிறது. என்றும் எனது நெஞ்சில் பசுமையாக இருக்கும்.

இமாலயா சாதனை புரிந்த சாதனைச் செம்மல் இமயத்துடன் இணைந்து பொதுப்பணி ஆற்றும் பெரும் பேர் எனக்கு இறைவன் வழங்கியதால் RANM அவர்களுடன் பழகும் போது நான் அடைந்த அனுபவக் கருத்துக்களை உங்களுடன் இந்த விழா மலர் புத்தகத்தின் வாயிலாகப் பகிர்ந்து கொள்வதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன்.

1953ஆம் ஆண்டு கவுந்தப்பாடி சுதேசி சவுளி வர்த்தகர் சங்கத்தின் முதல் தலைவராகப் பொறுப்பேற்று இன்று 1993ம் ஆண்டிலும் தொடர்ந்து கடந்த 40 ஆண்டு காலமாகத் தலைவராக இருந்து அளவிடற்கரிய நற்பணிகளைச் செய்து வருகிறார்.

அந்நாளிலேயே சங்கத்திற்கெனச் சொந்தக் கட்டடம் ஏற்படுத்தி அன்றைய முதல்வர் திரு பக்த வத்சலம் அவர்களால் கட்டடத் திறப்பு விழா மிகச் சிறப்பான முறையில் நடத்தினார். சங்கத்தின் சார்பாக ஏழை மாணவ – மாணவியருக்குப் புத்தகங்கள் வழங்கப்பட்டன. இச்சங்கத்தின் சார்பாகக் கவுந்தப்பாடியில் மருத்துவமனை ஏற்பட வகை செய்யப்பட்டது. 1968ஆம் ஆண்டில் இருந்து சங்க வளாகத்தில் பாலர் பள்ளி இன்று வரை 'கலைமகள் வித்தியாலயம்' என்ற பெயரில் தலைவர் RANM அவர்கள் பொறுப்பில் நடைபெற்று வருகிறது.

சங்கத்தின் சார்பாக அந்நாளில் ரூ. 10,000/- நன்கொடை கொடுத்து கவுந்தப்பாடியில் பெண்கள் உயர்நிலைப்பள்ளி அமைய வழி வகுத்துக் கொடுத்தார். 1989ஆம் ஆண்டு கவுந்தப்பாடி சுதேசி ஜவுளி வர்த்தகர் சங்கத்தின் செயலாளராக என்னை நியமித்தார்கள். அந்த ஆண்டு அவரது அரும் பெரும் முயற்சியினால் நீரின்றி அமையாது உலகம் என்ற வள்ளுவர் வாக்கிற்கு இணங்க சங்க வளாகத்தில் ஆழ்துளை கிணறு போடப்பட்டு, பெரிய அளவில் பாதுகாப்புடன் மேல்நிலை நீர்தொட்டி கட்டப்பட்டு அன்றைய சமூக நலத்துறை அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்களால் திறப்பு விழா மிக சிறப்பான முறையிலே செய்யப்பட்டு, பொதுமக்களுக்குக் குடிநீர் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டது. இன்று பெரியார் மாவட்டத்தின் புகழ் பரப்பிக் கொண்டிருக்கும் தன்னாட்சிக் கலைக்கல்லூரி உருவாகத் தீர்மானம் நிறைவேற்றிய இடம் கவுந்தப்பாடி சுதேசி ஜவுளி வர்த்தகச் சங்க வளாகத்தில் தான் என்பதைப் பெருமையோடு கூறிக் கொள்கிறேன். அன்று சங்கத்தில் தீர்மானத்தில் வித்திட்டது தான் முதலியார் கல்வி நிறுவனம் என்ற விதை. அந்த விதை இன்று ஆல் போல் செழித்து அருகு போல் வேர் விட்டு மூங்கில் போல் உயர்ந்து கலைக்கல்லூரியாக, தொழில் நுட்பக் கல்லூரியாக, தொழிற்பயிற்சி கல்லூரியாக மலர்ந்து மணம் வீசி, கல்வி பணியாற்றுகிறது. மேலும் மகளிர் கலைக் கல்லூரி ஒன்றும் மலர்ந்து மணம் வீசும் எனக் கருதுகிறேன். பெரியவரின் மனத்தில் கவுந்தப்பாடி சுதேசி ஜவுளி வர்த்தகர் சங்கக் கட்டிடம் புதுப்பிக்கப்பட்டு, பல மாடிகளைக் கொண்ட உயர் கட்டடமாக அமைய வேண்டும் என்ற எண்ணம் அவர் மனத்தில் நீண்ட நாளாக இருந்து வருகிறது. அவரது எண்ணம் வெகு விரைவில் ஈடேறும் என்பதில் ஐயம் இல்லை. அந்த நாட்கள் தூரத்தில் இல்லை என்பதைக் கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

ஈரோடு அருள்நெறித் திருப்பணி மன்றத்தில் செயலாளராகவும், பொருளாளராகவும் பொறுப்பேற்று இன்று, பாலர்பள்ளி, ஆரம்பப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி, சொந்தக் கட்டிடத்தில் மிகச் சிறப்பான முறையில் நடந்து வருகிறது. சுமார் இரண்டு ஆயிரம் மாணவ–மாணவிகள் பயிலுகிறார்கள். நூறு சதவீதம் தேரும் பள்ளிகளில் இப்பள்ளியும் ஒன்றாகும். தெய்வப் பக்தியும், தேசப் பக்தியும் இரு கண்களாகவும், ஒழுக்கம் உயிர் மூச்சாகவும் கருத்தில் கொண்டு தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் தலைமையில் செயல்பட்டு வருகிறது. இதன் செயலாளர் செயல்வீரர் RANM அவர்கள் இப்பள்ளியின் வளர்ச்சியிலும் முன்னேற்றத்திலும் கண்ணும் கருத்துமாகக் கவனித்து வருகிறார். 1970ஆம் ஆண்டு முதலியார் கல்வி நிறுவனம் துவங்கப் பெற்று அதன் தலைவராகப் பொறுப்பேற்று, செங்குந்தக் குல வள்ளல் பெருமக்களின் நன்கொடையாலும், பெரியவரின் அரும் முயற்சியினாலும் சுமார் நாற்பது ஏக்கர் நிலத்தில் வானளாவிய கட்டிடத்தில் கலைக்கல்லூரி துவங்கப்பெற்றது. பின்னர் படிப்படியாகக் கவுந்தப்பாடி அருகில் தொழில்நுட்பக் கல்லூரியும் தொழிற்பயிற்சிக் கூடமும் உருவாக்கி, நவீன தொழில் நுட்பங்களைக் கல்லூரி வாயிலாகப் பெற வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தார். இம்மூன்று கல்லூரியிலும் இரண்டு ஆயிரம் மாணவர்கள் பயின்று வருகிறார்கள். இவர்களைப் பட்டதாரியாகவும்

தொழில்நுட்ப வல்லுனராகவும் உருவாக்கிய பெருமை பெரியவரையே சாரும்.

கல்விப் பணியோடு இறைபணியிலும் நாட்டம் கொண்டவர். இவரது அரும் முயற்சியால் கவுந்தப்பாடியில் அருள் தரும் அன்னை காமாட்சி அம்மன் ஆலயம் அழகு பெற அமைக்கப்பெற்று, அடியார்கள் வணங்கி வருகிறார்கள். இங்கு விரைவில் திருமண மண்டபம் ஏற்படத் திட்டம் தீட்டி செயல்பட்டு வருகிறார்.

உடல் உழைப்பால், உயர்ந்த எண்ணத்தினால் உயரிய இடத்தை எட்டியச் சாதனைச் செம்மல் RANM அவர்கள் சமுதாய உயர்வுக்கு உரமூட்ட பெரியார் மாவட்டச் செங்குந்தர் மகாசன சங்கத்தின் தலைவராக 1983ஆம் ஆண்டு முதல் பணியாற்றி வருகிறார். கல்விப் பணி புரிந்த ஈரோட்டு கரும வீரர் முயற்சியால் இன்று ஈரோட்டிற்கு அருகில் சுமார் இருநூறு வீட்டுமனைகள் கொண்ட செங்குந்தப்புரம் உருவாகி வருகிறது. முழுவதும் செங்குந்தர்களுக்கே சொந்தமான அவ்விடத்தில் விரைவில் மாட மாளிகை திகழும். அப்போது குன்றிலிட்ட விளக்காய் அவரது பணியின் சிறப்பு ஒளிவிடும்.

என் தந்தையின் மூத்த சகோதரனாய், என் சிறுவயதில் எனக்கு அறிமுகமாய் இன்று என் தந்தையாய் எனக்கு ஆலோசனை பல கூறி என் வாழ்க்கைக்கு வழிகாட்டி என்னையும் தம் பணியில் பங்கேற்க வாய்ப்பு வழங்கிய வள்ளல் அவர். அவர்தம் குணங்களை நான் நன்கு அறிவேன். வேகமான அவர் சொற்களில் விவேகம் இருக்கும். கடுமையான அவர் பேச்சில் கனிவு இருக்காது. கடமை இருக்கும், துணை இருக்கும். சிரிப்பில்லா அவரது உதடுகள் சிறப்பு வழி உரைக்கும். கருத்துள்ள வார்த்தைகள் பறக்கும். அவரின் கடுகடுப்பான சிறிய கண்களின் பார்வையில் நம்மைச் செம்மைப்படுத்தும் ஒளி இருக்கும். உடையில் மிக சாதாரணமாக இருக்கும். அவர்தம் நடையில் காலத்தின் வேகம் தெரியும். சலனமற்ற அவர் முகத்தில் சாந்தத்தின் நிறைவு இருக்கும். திருநீறு அணிந்த அவரது நெற்றியை நோக்கின் திருவிளையாடற் புராணத்து நாயகன் நமது மனத்தில் தோன்றுவான். வண்ணமில்லா சொல் கூறி, தம் எண்ணத்தை வடிவமைத்துக் காட்டும் நெறியாளர்.

3.9.93 திருவண்ணாமலை ஆதீனம் குன்றக்குடியில் குருபூசை பெருவிழாவின் போது குருமகா சந்நிதானம் தவத்திரு குன்றக்குடி அடிகளார் பொற்கரங்களால் பொன்னாடை போர்த்தி, தங்கப் பதக்கம் அணிவித்து "அருள்நெறிப் புரவலர்" என்ற சிறப்புக்குரிய பட்டம் RANM அவர்களுக்கு வழங்கப்பட்டது. இங்குப் பட்டம் பெறுவது சிறப்புக்குரிய பெரும் பேறாகும். இவரது கல்விப் பணியாலும், இறைபணியாலும் மற்றும் எண்ணற்ற பொதுப் பணிகள் ஆற்றிய வகைக்குக் குன்றக்குடி குரு அருளால் இப்பட்டம் கிடைத்தது. இப்பட்டமளிப்பு விழாவில் அடியேனும் கலந்து கொண்டு காணக் கிடைக்காத இக்காட்சியை காண்பதற்கு இறையருள் எனக்குக் கிட்டியது.

பெரியவரின் எண்ணம் ஈடேற அவர் நினைத்தது சிறப்பாக நடக்க அவர் இன்னும் பல்லாண்டு வாழ்ந்து பலரை வாழ்த்தியும் என்னைப் போன்றோரை வாழ வைத்தும் சிறப்படைய சிங்காரவேலவன் அருள்புரிய வேண்டும் எனப் பிராத்தனை செய்து நிறைவு செய்கிறேன்.

K.K. பானுசாமி,
துணைத்தலைவர்
முதலியார் கல்வி நிறுவனம்,
ஈரோடு.

நாள் 23.6.94

R.A.N.M. ஒரு நடமாடும் பல்கலைக்கழகம்

நம் கல்வித்தந்தை R.A.N. முத்துசாமி முதலியார் அவர்கள் நமது சமுதாயத்தின் கல்வி மேம்பாட்டிற்காகத் தனது வாழ்வையே அர்ப்பணித்து, அருந்தொண்டாற்றி வருகிறார்கள். மிகச்சிறிய அளவிலே தொடங்கப்பட்ட நம் ஈரோடு கலைக்கல்லூரி இன்று தமிழ்நாட்டிலேயே மிகச்சிறந்த கல்லூரியாக வளர்ந்து, தன்னாட்சி பெற்று உயர்ந்திருக்கிறது என்றால் அதற்கு நம் கல்வித் தந்தையின் விடா முயற்சியும், அயராத உழைப்பும் தான் காரணம்.

கவுந்தப்பாடி கிராமத்தில் தொடங்கப்பட்ட ஈரோடு தொழில்நுட்பக் கல்லூரி நமது மாநிலத்திலேயே மிகச்சிறந்த தொழில்நுட்பக் கல்லூரியாகப் பரிணமித்து இருக்கிறது என்பது நாம் அனைவரும் அறிந்த உண்மை. குறிப்பாக E.I.T. மாணவனே வேலைக்குத் தேவை என்று கேட்கின்ற பல நிறுவனங்கள் இன்று உள்ளன. E.I.T.யில் படித்த மாணவனுக்கு உடனடியாக மிக உயர்ந்த சம்பளத்திலே வேலைகள் கிடைப்பதையும் நாம் நன்கு அறிவோம். இப்படி உன்னதமான ஒரு கல்விமுறையை உருவாக்கித் தந்த பெருமை நமது கல்வித் தந்தையையே சாரும். ஈரோட்டில் இருந்து தொலைவில் இக்கல்லூரி அமைந்திருந்தாலும், நம் பெரியவருடைய சிரமம் பார்க்காத தன்மையாலும், விடாப்பிடியாகப் பிடித்த கொள்கையில் வழுவாது நிற்கின்ற தன்மையாலும் இன்று இக்கல்லூரி மிகப்பெரிய அளவிலே உருவெடுத்திருக்கிறது என்பது நாம் அறிந்த உண்மையே.

சிறிய அளவிலே ஆரம்பிக்கப்பட்ட அருள் நெறித்திருப்பணி மன்றப் பள்ளியானது இன்று உயர்நிலைப்பள்ளியாக வளர்ந்திருக்கின்றது. மேலும், ஆங்கிலத்தின் வாயிலாகப் பயிற்றுவிக்கின்ற ஒரு கிளையும் தொடங்கப்பட்டிருக்கிறது. மிகச் சீரிய முறையிலே இதன் நிர்வாகம் அமைந்திருக்கின்றது என்றால் அதற்கெல்லாம் இதைத் தனது சொந்தப் பள்ளியாகப் பாவித்து, இதன் வளர்ச்சியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி உழைத்த அதன் செயலாளராக, பொருளாளராக இருக்கின்ற நமது பெரியவருடைய விடாமுயற்சிதான் காரணம் என்பதை நாம் நன்கு அறிவோம்.

இந்த ஆண்டிலே தொடங்க இருக்கின்ற பெண்கள் கல்லூரி தொடங்குவதற்கு முழுமுதற்காரணமாக இருந்து இதைத் தொடங்குவதற்கு ஏற்பட்ட எல்லா இன்னல்களையும் தனது அயராத முயற்சியால் வெற்றி கண்ட நம் பெரியவருடைய கடினமான உழைப்பு பாராட்டப்படத் தகுந்ததாகும்.

கவுந்தப்பாடியில் கலைமகள் கல்வி நிலையம், அரசு உயர்நிலைப்பள்ளி இவைகள் தோன்றி நல்லவிதமாக நடப்பதற்கு நல்ல உறுதுணையாக இருந்திருக்கின்றார். காமாட்சியம்மன் தொழிற்பயிற்சி நிலையம் தொடங்கி, அதை மிகச்சிறந்த முறையிலே நடத்தி வருகின்ற திரு RANM அவர்களுடைய நிர்வாகச் சிறப்பு போற்றத்தக்கது.

ஈரோடு இந்துக் கல்வி நிலையம் நல்லவிதமாகத் தோன்றுவதற்கும், சிறப்பான முறையிலே இயங்குவதற்கும் நல்உதவியாக இருக்கின்றார்கள். தன் சார்பில் தனது இரு புதல்வர்களையும் உதவித்தலைவராக ஈடுபடுத்தி இந்த நிறுவனத்தை வளரச் செய்திருக்கிறார்கள்.

இதனால் மட்டும் திருப்தி அடைந்துவிடாமல், தமது கல்விப்பணியைப் பொறியியல் கல்லூரி, மருத்துவக் கல்லூரி எனப்பல பிரிவுகளையும் தொடங்கி, நமது கல்லூரியை ஒரு பல்கலைக் கழகமாக மாற்ற வேண்டும் என்ற மாறாத சிந்தனையைக் கொண்டிருக்கின்ற நமது கல்வித் தந்தையின் அருந்தொண்டு பாராட்டத்தக்கது.

நம் செங்குந்த மகாசன சங்கத்திற்குப் பெரியார் மாவட்டத் தலைவராகப் பொறுப்பேற்ற திரு RANM அவர்கள் ஆற்றி வருகின்ற சேவை போற்றுதலுக்குரியது. நம் சமுதாயம் பொருளாதார ரீதியில் பின்தங்கி இருப்பதற்காகப் பல சொற்பொழிவுகளில் அதற்கான காரணத்தையும், அதைக் களையும் வழிமுறைகளையும், கண்ணீர்மல்க கூறியிருக்கிறார் என்றால் அவர்கள் நம் சமுதாயத்தின் வளர்ச்சியில் வைத்திருக்கின்ற ஆழமான பாசத்தையும், பற்றையும் அறியமுடிகிறது.

நம் சமுதாயம் ஈரோட்டில் வசிப்பதற்குச் சொந்தமாக வீட்டுமனை வாங்குவது அரிது என்பதை அறிந்து, நம் பெரியவர் மிக அருமையான ஓர் இடத்திலே 'செங்குந்த நகர்' என்ற நகரத்தை உருவாக்கி வீட்டுமனைகளாகப் பிரித்து லே–அவுட் செய்து, அதை ஒவ்வொருவருக்கும் பட்டா செய்து வழங்கியிருக்கின்றார் என்றால் அவர் நம் சமூகத்தின் முன்னேற்றத்தில் மிகுந்த பாசத்தை வைத்திருக்கிறார் என்று சொல்வது மிகையாகாது.

திரு RANM அவர்கள் நடத்தி வருகின்ற வணிக குழுமங்கள் மிகச்சிறந்த நிர்வாகத்திறனைப் பெற்றிருக்கிறது என்றால் அதற்கு அவர் கடைப்பிடிக்கின்ற நேர்மையும், நாணயமும் தான் காரணம்.

சீட்டுநிதி நிறுவனத்தை நடத்துவதில் பெரியார் மாவட்டத்திலேயே மிகச்சிறந்த முன்னுதாரணமாகத் திகழ்ந்து கொண்டு இருக்கின்றார்கள். அது மட்டுமல்லாது, சீட்டுநிதி நிறுவனச் சங்கத்திற்குத் தலைவராக இருந்து, அந்த நிறுவனங்களுக்கும் சேவை செய்து வருகின்றார்கள். நூல் வியாபாரத்தில் நம் நகரத்திலேயே முன்னோடியாகத் திகழ்ந்து வழிகாட்டியாக இருந்து

வருகின்றார்கள்.

ஆன்மீகத் துறையிலேயும் நமது பெரியவர் ஓர் உன்னதமான இடத்தைப் பிடித்து ஒளி வீசுகிறார்கள். கவுந்தப்பாடியில் அருள்மிகு காமாட்சியம்மன் கோயிலைத் தலைமையேற்று மிகச்சிறப்பாகக் கட்டுவித்து, மிகச்சிறந்த முறையிலே அதைப் பராமரித்து வருகின்றார்கள்.

ஈரோடு அருள்நெறித் திருப்பணி மன்றத்தில் நிர்வாகப் பொறுப்பில் கலந்து கொண்டு ஈரோட்டிலேயே மிகப்பெரிய கோயிலான 'திருத்தொண்டீஸ்வரர் ஆலயம்' அமைவதற்கு மிக உறுதுணையாகப் பணியாற்றி இருக்கிறார்கள்.

கவுந்தப்பாடி கூட்டுறவு சங்கத்திலே ஸ்தாபகத் தலைவராகப் பொறுப்பேற்று இன்று வரையும் மிகச் சிறப்பான முறையிலே அதை நடத்தி வருகின்றார்கள்.

பல வெளிநாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டு, அங்குப் பல நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு, தான் கண்ட, கேட்ட நல்ல பல செய்திகளைத் தனது நிர்வாகத்திலே கடைப்பிடித்து, தமது மேற்பார்வையில் இருக்கின்ற அனைத்து நிறுவனங்களையும் சிறப்பாக நடத்தி வருகிறார்கள்.

இப்படிப் பல நிறுவனங்களைத் தோற்றுவித்து, நிர்வகித்து வருகிறார்கள் என்றால் அதற்கெல்லாம் அவரிடம் இருக்கின்ற விடாமுயற்சியும், கடின உழைப்பும், தன்னலம் பாராத பொதுநல சேவையும் தான். நடத்துகின்ற நிறுவனத்தை மிகச்சிறந்த ஸ்தாபனமாக மாற்ற வேண்டும் என்ற தீராத தாகமும், நடத்துகின்ற நிறுவனம் நேர்மையாக இருக்கவேண்டும் என்பதற்காகத் தான் காட்டுகின்ற கண்டிப்பும், ஊழியர்களை அரவணைத்துச் செல்கின்ற பாங்கும், நிர்வாக அங்கத்தினர்களையும் தன் குடும்ப அங்கத்தினர்களாகப் பாவிக்கின்ற மனப்பாங்கும் தான் காரணங்களாகும்.

இப்படிப் பல சிறப்புகளும் கொண்ட நம் தலைவர் திருமிகு ஆர்.ஏ.என். முத்துசாமி முதலியார் அவர்களை 'நடமாடும் பல்கலைக்கழகம்' என்று அழைப்பதிலே பெருமகிழ்ச்சி கொள்கிறேன்.

இப்படி எல்லா வகையிலும் நமக்கும், நம் சமூகத்திற்கும் சேவை செய்து வருகிற திரு RANM அவர்கள் இன்னும் பல ஆண்டுகள் நல்ல உடல்வளத்தோடு இருந்து மென்மேலும் பல பெருமைகளைப் பெற எல்லாம் வல்ல இறைவனை நல்லவரம் வழங்க வேண்டுகிறேன். எங்கள் கல்வித் தந்தைக்கு இந்த எழுத்து மலர்களைத் தொகுத்து, மாலையாக்கி, கவிதை வரிகள் கொண்டு ஆரத்தி எடுக்கிறேன்.

உத்யோக ரத்னா ஜெ. சுத்தானந்தன்
தலைவர், தென்னிந்திய செங்குந்தர் மகாஜன சங்கம்
145, திருநகர், ஈரோடு – 638 003.
போன் 21076

நாள் 24.7.94

அயராத உழைப்பு

கல்வித்தந்தை பெரியவர் உயர்திரு ஆர்.ஏ.என். முத்துசாமி முதலியார் அவர்களின் 81ம் ஆண்டு விழா நடைபெற இருப்பது அறிந்து பெரிதும் மகிழ்ச்சி.

ஒருவருடைய வாழ்க்கையில் ஆயிரம் பிறை கண்டு நிறைவான வாழ்க்கை அமைவது கிடைத்தற்கரிய பேறாகும்.

பெரியவர் ஆர்.ஏ.என். முத்துசாமி முதலியார் அவர்கள் எளிய முறையில் வாழ்க்கையைத் வழங்கி இன்றைய நிலைக்கும் உயர்ந்து புகழ் பெற்றதற்குக் காரணம் அவருடைய கடுமையான உழைப்பேயாகும்.

"ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பதொன்று இல்".

எனவே, அவர் அடைந்துள்ள உயர்ந்த புகழ் என்றும் அழியாமல் நிலைத்து நிற்கும்.

ஈரோடு கலைக் கல்லூரியும், ஈரோடு தொழில்நுட்பப் பயிலகமும் அவரது அயராத உழைப்புக்கும் கல்விப் பணிக்கும் சான்றாக என்றும் விளங்கிக் கொண்டிருக்கும்.

"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியராகப் பெறின்"

என்ற வள்ளுவனின் வாக்கிற்கொப்ப தான் எண்ணியபடியே செயல் ஆற்றுவதில் உறுதியுடன் இருப்பதால்தான் அவரால் பல சாதனைகளைப் படைக்க முடிந்தது.

பெரியவரை வாழ்த்தும் வயது எனக்கில்லை, இருந்தாலும் எல்லாம் வல்ல செந்தில் கந்தப் பெருமானின் திருவருளால் இன்னும் பல்லாண்டு காலம் நலமுடன் வாழ்ந்து சமுதாயத்திற்கும் கல்விக்கும் பணியாற்ற வேண்டும் என்ற என் விருப்பத்தினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

K.N. முருகேசன்,
தலைவர், ஈரோடு செங்குந்த மகாஜன சங்கம்.
K.N.M. பில்டிங்,
7, N.M.S. காம்ப்ளக்ஸ்,
காந்தி மார்க்கெட், ஈரோடு – 1.

நாள் 28.5.94

உழைப்பின் சிகரம்

81 வயது நிரம்பிய நம் கல்வி தந்தைக்கு விழா எடுப்பது பற்றி அறிந்து பெரும் மகிழ்ச்சி எய்தினேன். அவரைப் பற்றிய என் நினைவுகள் என் மனத்தை நிரப்பியது. 'இராக்கியப்பாளையம்' என்ற குக்கிராமத்தில் பகலில் விவசாயத் தொழிலாளியாகவும், இரவில் நெசவாளியாகவும், கடுமையாக உழைத்து செயல்பட்டார். பிறகு 'துடுப்பதி' என்ற ஊரில் குடியேறி தொழிலுடன் சிறிய அளவில் வியாபாரம் தொடங்கிச் செயல்பட்டார். பின்னர் கவுந்தப்பாடி வந்து தங்கள் தொழிலை வளப்படுத்தி, வியாபாரத்தைப் பெருக்கி, அங்கேயே 1953–ல் ஜவுளி வியாபாரிகள் சங்கம் தொடங்கி அனைத்து வியாபாரிகளின் நன்மதிப்பு பெற்று, அன்று முதல் இன்று வரை அதன் தலைவராகச் சங்கத்தைச் சிறப்புற நடத்தி அதன் வாயிலாக கல்விப் பணிகள் செய்து, கவுந்தப்பாடியில் ஆரம்பப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி பெண்கள் பள்ளி உண்டாக உறுதுணையாக இருந்துள்ளார். தற்சமயம் நர்சரிப்பள்ளி ஏற்படுத்தி அதன் தலைவராகவும், பொறுப்பேற்று நடத்தி வருகிறார். பின்னர் ஈரோடு குடிவந்து, கடுமையாக உழைத்து, தன் வியாபாரத்தைப் பெருக்கிப் பொதுத் தொண்டிலும் ஈடுபட்டார். இவருடைய கடுமையான உழைப்பே பொதுத் தொண்டில் ஈடுபாடு கொள்ள வைத்தது எனலாம். பொது வாழ்விலும் காலம், நேரம், சிரமம் பாராமல், கடுமையாக உழைத்து, 'R.A.N. முத்துசாமி முதலியார் என்று தனி முத்திரையைப் பதித்து, புகழ் சேர்த்துக் கொண்டவர் ஆவார் நம் பெரியவர்.

1970–71ம் ஆண்டு முதலியார் கல்வி நிறுவனத்தைத் தொடங்கி, நிறுவனத்திற்கும் அதனால் நடத்தப்பட்டு வரும் ஈரோடு கலைக்கல்லூரிக்கும் முதல் தலைவராகப் பொறுப்பேற்று, இன்று வரை தலைவராக இருந்து வருகின்றார். 40 ஏக்கர் நிலப்பரப்பில், கல்லூரிக் கட்டப்பட்டு, பல பட்டபடிப்பு வகுப்புக்களைத் திறம்பட நடத்தி, 1987–ல் தன்னாட்சிக் கல்லூரியாக ஆக்கப்பட்டது. மற்றும் முதலியார் கல்வி நிறுவனத்தின் சார்பில் 1982–ல் கவுந்தப்பாடியில் 50 ஏக்கர் நிலப்பரப்பில் தொழில்நுட்பக் கல்லூரி (பாலிடெக்னிக்) தொடங்கப்பட்டு, திறம்பட நடந்து வருகிறது.

1984–ல் தொடங்கப்பெற்ற பெரியார் மாவட்டச் செங்குந்த மகாஜன சங்கத்தின் தலைவர் பொறுப்பேற்று, அன்று முதல், அதன் தலைவராகச் சிறப்புற பணியாற்றி வருகின்றார். நம் பெரியவர் கடவுள் பக்தி மிகுந்தவர். அப்பன் முருகன் மேல் தீராத காதல் கொண்டவர். மிகுந்த கடுமையான சைவர்,

குன்றக்குடி அடிகளாரின் மிக நெருங்கிய நண்பர். அடிகளார் மீது மிகுந்த அன்பு கொண்டவர். அரித்துவாரம், ரிசிகேசம், கேதாரிநாத், பத்ரிநாத், கங்கையும், யமுனையும் தோன்றுமிடமான கங்கோத்ரி, யமுனோத்திரி ஆகிய தலங்களுக்குச் சென்று வழிபட்டவர். ரிசிகேசத்தில் சிவானந்த ஆசிரமத்தில் தங்கி சுவாமிகளின் ஆசியையும் பெற்றவர். 3–வது வகுப்பு வரை மட்டுமே படித்த நம் பெரியவர் தமிழ்மீது மிகுந்த பற்று கொண்டவர். 1987–ஆம் ஆண்டு மலேசியாவில் நடைபெற்ற உலகத்தமிழ் மகாநாட்டில் கலந்து கொண்டு, மகாநாட்டில் சிறப்புரை நிகழ்த்தியுள்ளார்கள்.

யாருக்கும் சிரமம் கொடுக்காமல் தனது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வார். தானே துவைத்த நான்கு முழ வேட்டியும், தானே துவைத்த கதர் சட்டையும் இரண்டு முழ துண்டும் உடுத்திய நல்ல உயரமும், சிவந்த மேனியும் ஏர்வையான முகமும், சமச்சீராக வெட்டப்பட்ட வெண்முடி வேந்தரும் இவர் ஆவார். பீடு நடை, யாரும் பார்த்தால் நின்று பேசக்கூடிய தோற்றமும் கூடிய மொத்த உருவமே R.A.N. முத்துசாமி முதலியார் ஆவார்.

ஒருமுறை இவருடன் சென்னை சென்று இருந்தேன். சங்கத்தின் வேலையாக அதிகாரி ஒருவரைச் சந்திக்க வேண்டியிருந்தது. பெரியவருடன் நானும் குறிப்பிட்ட அதிகாரியைச் சந்திக்கச் சென்றேன். பெரியவரைக் கண்ட அந்த மிகப்பெரிய அதிகாரி எழுந்து வந்து வரவேற்று உபசரித்து உட்கார வைத்துப் பேசினார். எனக்கு மெய்சிலிர்த்து விட்டது.

இவர் ஒரு சுயநலக்காரர், தான் வளர வேண்டும் என்று ஆசைப்பட்டார். ஆதலால் இவர் சுயநலக்காரர். இவர் குடும்பம் வியாபாரம் வளர வேண்டும் என்று ஆசைப்பட்டார். ஆதலால், இவர் சுயநலக்காரர். தன்னைச் சேர்ந்தவர்கள் வளரவேண்டும் என்று ஆசைப்பட்டார். ஆதலால் இவர் சுயநலக்காரர். தன் சுற்றத்தார் வளர வேண்டும் என்று ஆசைப்பட்டார். ஆதலால் இவர் சுயநலக்காரர். தன் இனத்தவர்கள் வளர வேண்டும் என்று ஆசைப்பட்டார். ஆதலால் இவர் சுயநலக்காரர். தனது ஊரில் உள்ளவர்கள் வளர வேண்டும் என்று ஆசைப்பட்டார். பின்னர், இந்த நாட்டில் உள்ளவர்கள் அனைவரும் வளர வேண்டும். கல்வி கற்க வேண்டும் என்று ஆசைபட்டார். ஆதலால் இவர் சுயநலக்காரர்.

தன் இனத்தவர்கள் வளர்ச்சியுற வேண்டும் என்று தீராத ஆசை கொண்டு, பெரியார் மாவட்டச் செங்குந்த மகாசன சங்கம் ஏற்படுத்தினார். மாவட்டச் செங்குந்த மகாசன சங்கம் மட்டும் போதாது என்று ஒவ்வொரு யூனியனிலும் கிளைச்சங்கங்கள் அமைத்தார். பின்னர் ஒவ்வொரு தாலுக்காவிலும் கிளை சங்கங்கள் ஏற்படுத்தினார். பின்னும் இவர் ஆசை தீரவில்லை. ஒவ்வொரு ஊரிலும், ஒவ்வொரு கிராமத்திலும் சுமார் 150 கிளைச் சங்கங்களை ஏற்படுத்தினார். பெரியார் மாவட்டச் சங்கத்தின் பொதுச் செயலாளர் M.S. பழனியப்பன் அவர்களுடனும் மாவட்டப்பொருளாளர் P.K. நஞ்சப்ப முதலியார்

அவர்களுடனும் சென்று தலைமையேற்று, இந்தக் கிளைச் சங்கங்களைத் தொடங்கியுள்ளார்.

கல்விப் பணியில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்ட இவர், நம்மவர் அனைவரும் கல்வி பயில வேண்டும் என்பதே தனது தீராத ஆசையாகக் கொண்டார். தனது உற்ற நண்பர்களுடன் சேர்ந்து அருள்நெறிக் குழந்தைகள் பள்ளி, அருள்நெறி நடுநிலைப்பள்ளி, அருள்நெறி மேல்நிலைப்பள்ளி ஆகியவற்றைத் துவக்கினார். அப்படியும் கல்வியில் இவர் ஆசை தீரவில்லை. ஈரோடு கலைக்கல்லூரி, தொழில் நுட்பக்கல்லூரி, காமாட்சிம்மன் ITI ஆகியவைகளை ஏற்படுத்தியும் இவர் ஆசை தீரவில்லை. ஆதலால் தான் இவரைச் சுயநலக்காரர் என்கிறேன்.

மூன்றாவது வகுப்புவரை படித்த இவர் பொறுப்பு வகிக்கும் ஸ்தாபனங்களின் பெயரைக் கேட்டால் மலைப்பாக இருக்கும். அவர் பொறுப்பு வகிக்கும் ஸ்தாபனங்கள் :-

1.	முதலியார் கல்வி நிறுவனம்	தலைவர்
2.	ஈரோடு கலைக் கல்லூரி	தலைவர்
3.	ஈரோடு தொழில் நுட்பக் கல்லூரி	தலைவர்
4.	கலைமகள் வித்தியாலயம், கவுந்தப்பாடி	தலைவர்
5.	கவுந்தப்பாடி ஜவுளி வர்த்தகர்கள் சங்கம்	தலைவர்
6.	பெரியார் மாவட்டச் செங்குந்த மகாசன சங்கம்	தலைவர்
7.	செங்குந்தர் முன்னேற்ற சங்கம், ஈரோடு	தலைவர்
8.	அருள்தரும் காமாட்சிஅம்மன் ஆலயம், கவுந்தப்பாடி	தலைவர்
9.	ஈரோடு அருள்நெறி திருப்பணி மன்றம்	செயலாளர் & பொருளாளர்
10.	காமாட்சியம்மன் ITI	தலைவர்

இந்நிறுவனங்கள் அனைத்தும் திறம்பட செயல்பட்டு வருகிறது. இந்த 81 வயதிலும் இத்தனை சாதனை படைத்துவரும் கல்விச் சக்கரவர்த்திமாகிய பெரியவரைச் சிறியேன் வாழ்த்துகிறேன்.

பொதுநல நோக்கில் கவுந்தப்பாடி ஜவுளி வர்த்தகர் சங்கத்தில் தண்ணீர் தொட்டிக்கட்டி, பொது ஜனங்களுக்குத் தண்ணீர் வழங்கப்படுகிறது. கல்விப் பணியில் முழுமையாகத் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு இந்த ஆண்டு அருள்நெறி திருப்பணிமன்றப் பள்ளியில் இரண்டு அடுக்குக் கட்டிடம் கட்டி வகுப்புகள் நடத்தப் படுகிறது. கலைக்கல்லூரியில் பிரமாண்டமான கட்டிடங்கள் கட்டியும் தொழில் கல்லூரியில் பல கட்டிடங்கள் கட்டியும் இவர் ஆசைதீராது கலைக்கல்லூரியில் புத்தகசாலை ஏற்படுத்தவும் (லைபரரி) கலை அரங்கம் (ஆடிட்டோரியம்) ஏற்படுத்தவும் சுமார் 40 லட்ச ரூபாய் செலவில் பிரமாண்டமான கட்டிடம் கட்டி முடிக்கப் பெற்றுள்ளது. இக்கல்லூரி இன்று 40 ஏக்கர் நிலப்பரப்பில் நிமிர்ந்து

நிற்கிறது தொழிற்கல்லூரி 50 ஏக்கரில் அமைந்துள்ளது. இந்தக் கல்விப்பணி அனைத்தும் நமக்காக அவரால் செய்யப்பட்ட பொதுப்பணிகள் என்பதை இங்குப் பெருமையுடன் கூறிக் கொள்கிறேன்.

இந்தக் கல்விப் பணிகள் திறம்பட நடத்த தன் உற்ற நண்பர்களாக இருந்தவர்கள்.

S. வையாபுரி முதலியார்

C.K. ராமநாதன்

P.K. நஞ்சப்பமுதலியார்

பிரபாத் J.K. நாராயணன்

கயிலைமணி முனுசாமி முதலியார்

மயிலோன் ஆறுமுகம்

T.R. சாமிநாத முதலியார்

K.M. தண்டபாணி

P. குப்புசாமி முதலியார்

டாக்டர். பரந்தாமன்

விக்னேஷ்வர முதலியார்

லோகநாதன்

S.K.C. சுப்ரமணியம்

சக்தி M. பாலசுப்பிரமணியம்

K.K. பாலுச்சாமி

K.K. பழனிச்சாமி

K.K. ராமலிங்கம்

K.N. முருகேசன்

மற்றும் பல நண்பர்களுடன் தனக்கு இட்ட பணியைச் செய்து முடிப்பவரும், குறித்த காலத்தில் பணியைத் தொடங்குபவரும், தன்னை இனங்காட்டிக் கொள்ளாது தன்னை அடக்கப்படுத்திக் கொள்பவரும், தன் பார்வையாலும் தன் பேச்சாலும் யாரையும் தன்னுள் அடக்கிக் கொள்ளும் ஆற்றல் பெற்றவரும். அதிபயங்கர ஞாபகசக்தி பெற்றவரும், எதையும் பொறுப்புடன் செய்து முடிப்பவரும் கொடுத்துச் சிவந்த கரத்தை உடையவரும் நம் அனைவருக்கும் உற்ற தோழனும் வள்ளலுமான ராணா K.V. லட்சுமணன் அவர்களுடன் இணைந்து கல்விப் பணிகளைத் திறம்பட செயலாற்றும் வல்லவர் தான் 81 வயது நிரம்பப்பட்ட நம் பெரியவர் திரு R.A.N. முத்துசாமி முதலியார் அவர்கள்.

தன் இனமக்களும் மற்ற அனைத்துத் தரப்பினரும் கல்விகற்று மென்மேலும் வளரவேண்டும் என்பதில் தீராத தாகம் கொண்டும் நல்லவராகவும் மிக வல்லவராகவும், கல்விப் பணிக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர் நம் பெரியவர் R.A.N. முத்துசாமி முதலியார் அவர்கள். இந்த 81 வயது பெரியவரை வாழ்த்தும் தகுதி எனக்கில்லை. இருந்தாலும் ஆசையின் காரணமாக உளமார வாழ்த்துகிறேன். இவர் செய்துள்ள கல்விப்பணி அனைத்தும் ஆண்களுக்காக மட்டுமே, நம் இனத்தில் பெண் குழந்தைகள் அதிகம் கல்வி பயிலவில்லை. ஆனால் வளர்ந்து வரும் சமுதாயத்தில் மற்ற பெண் குழந்தைகளைப் போல் நம் பெண் குழந்தைகளும் கல்வி பயில வேண்டும் என்பதற்காக ஒரு பெண் கல்லூரி துவங்க முயற்சித்து வருகிறார். 81வயது இளைஞர் அதையும் விரைவில் நிறைவேற்றியே தீருவார். அவர் ஆசை நிறைவு பெறும் கல்வித் தந்தை – கல்வி சக்கரவர்த்திக்கு இது ஒரு பெரிய காரியம் அல்ல. செய்து முடிப்பார்.

Scanned with OKEN Scanner

நம் பெரியவர் அவர்களின்

உடைகள் வெள்ளை,

இவர் தலைமுடிகள் வெள்ளை

இவர் உள்ளம் வெள்ளை இது இவருடன் பழகியவர்களுக்குத் தெரியும்.

கடைசியாக, பெரியவர் அவர்களின் இந்தப் பிரமாண்டமான வளர்ச்சிக்கும் முக்கிய காரணமாக உள்ளவர் அவர்தம் துணைவியர் சீரங்காயம்மாள் ஆவார்கள். ஒரு ஆணின் வளர்ச்சிக்குப் பின்னால் ஒரு பெண் இருப்பார்கள் என்பது இந்த தம்பதிகளைப் பார்த்தால் புரியும். தன் கணவர் செய்யும் பணிகள் சிறக்க தன் ஒத்துழைப்பை முழுமையாகத் தந்து கணவரின் வளர்ச்சியில் தன்னைக் கண்டவர் நம் மதிப்பிற்குரிய ஆயாள் சீரங்காயம்மாள் அவர்கள். அவர்களை வாழ்த்துகிறேன். அவர்கள் திருப்பாதங்களில் தலை வைத்து வணங்குகிறேன். பெரியவருடைய கல்விப்பணிக்கும், பொதுப்பணிக்கும் உறுதுணையாக இருந்த மகன்கள், மருமகள்கள், மகள்கள், பேரன், பேத்திகள், அவர்தம் குடும்பத்தார் அனைவரையும் வணங்குகிறேன். உளமார வாழ்த்துகிறேன். பெரியவர் அவர்களின் இனத்தொண்டு, பொதுத்தொண்டு, கல்வித் தொண்டு மேலும் மேலும் சிறக்க அவர் உடல்நலமும், நீண்ட ஆயுளும் நிறைந்த செல்வமும் பெற்று நீடுவாழ்க! வாழ்க! என வாழ்த்தி அவருக்கும் அவர் தம் துணைவியாருக்கும், அவர் தம் குடும்பத்தாருக்கும் எல்லா நலன்களையும் குறைவில்லாது அள்ளிக்கொடுக்க என் அப்பன் முருகப் பெருமானை வேண்டுகிறேன்.

பெரியவர் என்று நம் அனைவராலும் அன்புடன் அழைக்கப்பெரும் திரு R.A.N.M. அவர்கள் நடை, உடை, நம்பிக்கை, நாணயம், உழைப்பு, செயல்திறன், அன்பு, பண்பு, அரவணைப்பு, ஆதரவு ஆகியவற்றில் நமக்குத் தந்தையாக, ஆசானாக, நல்ல நண்பனாகத் திகழும் நம் பெரியவர் அவர்கள் அடிச்சுவட்டில் நாமும் நடந்து நம்மை உயர்த்திக் கொள்வதுடன் இந்த 81 வயது பெரியவருக்கு மீண்டும் என் சிரம் தாழ்ந்த நன்றியுடன் கூடிய வாழ்த்துக்களைக் கூறிக் கொள்கிறேன்.

A.V.R.M.V. சங்கர நாராயணன்,
Viravanallur - 627 426. Tirunelveli Dist., Tamilnadu.

நாள் 25.7.94

பல காலம் நீடூழி வாழ்க!

திரு R.A.N. முத்துசாமி முதலியார் அவர்களது 81வது ஆண்டு விழா கொண்டாடப்படுவது மிகவும் சாலச்சிறந்தது. திரு R.A.N. முத்துசாமி முதலியார் அவர்கள் தனது 81 வயதிலும் சுறுசுறுப்புடன் தங்கள் குடும்பத் தொழிலை நன்றாகக் கவனித்து வருவது மட்டுமல்லாது, நமது செங்குந்தர் மாநில, மாவட்டச் சங்கங்களிலும் முழு ஈடுபாட்டுடன் வேலை செய்து நம்மவர்களுக்குச் சேவை செய்து வருகிறார்கள்.

ஈரோடு முதலியார் காலேஜ், அவர்கள் இல்லாவிட்டால் இந்த அளவுக்கு வளர்ந்திருக்க முடியாது. உயர்கல்விக்கு மிகவும் சிறப்பாக ஈரோடு செங்குந்தர் கல்லூரி நடத்தி வருவது அவர்களுடைய இனப்பற்றுக்கும், கடுமையான உழைப்பிற்கும் எடுத்துக்காட்டு, யாரிடமும் கல்லூரிக்கு நன்கொடை வாங்குவதில் தயங்குவதே இல்லை. தான் நினைத்ததை முடிப்பவர்.

அவர்கள் மேலும் பல காலம் நீடூழி வாழ்ந்து நமது சமுதாயத்தையும், தனது குடும்பத்தையும் சிறப்பாக நடத்தி வர இறைவனை வேண்டுகிறேன்.

எம். பாலசுப்பிரமணியம்
சக்தி அச்சகம், ஈரோடு. போன் 76556 – 72985

நாள் 24.8.94

திறமை + உழைப்பு = உயர்வு

பெருமதிப்பிற்குரிய ஐயா, பாதங்களுக்கு என் சிரம் தாழ்ந்த வணக்கம். நமது இனம் மேன்மை அடைவதற்கும் நாள் முழுதும் ஏன்? தன் வாழ்நாள் முழுதும் அயராது உழைப்பவர் இன்னும் சலியாது உழைத்துக் கொண்டு வருபவர். கல்வி அறிவு ஒரு மனிதனுக்குத் தேவை என்பதை நாளும் உணர்ந்து செயல்படும் இளைஞர். அவருடைய பொதுநல உழைப்பின் முதல்முத்து. ஈரோடு கலைக்கல்லூரி, படித்தால் மட்டும் போதுமா? தொழில் தெரிய வேண்டாமா? அதற்கொரு தொழிற்கல்வி. ஈரோடு தொழில்நுட்பப் பயிற்சிக் கல்லூரி. பத்தாவது படிக்க முடியவில்லையே தொழில்கல்வி கற்கவேண்டுமே என ஏக்கம் வேண்டாம் அதற்கும் ஒரு கல்லூரி – அது தான் காமாட்சி அம்மன் I.T.I. கல்லூரி. இதனையும் சேர்த்து ஆரம்பக்கல்வி முதல் மேல்நிலைப்பள்ளி வரை படிக்க ஒரு அருள்நெறித் திருப்பணி மன்றம், எனத் தன் சொந்தச் செலவிலேயே எல்லா இடங்களுக்கும், நினைத்த மாத்திரத்தில் சென்று வென்றுவருபவர். மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையை ஒழிக்க வேண்டும்" என்று சொன்ன மாத்திரத்தில் உடன் மகளிர் கல்லூரி ஆரம்பிக்க உள்ளார்.

இந்தக் கல்வியாண்டில் தொடங்கி விடுவார். என்னையும் இந்தச்சமூகம் மதிக்கவேண்டுமென எண்ணி சாதாரண உறுப்பினராக இக்கல்லூரியில் சேர்ந்த என்னை நிர்வாகக் குழு உறுப்பினராக்கினார். இன்று வரை முதலியார் கல்வி நிறுவனத்தில் நான் அங்கம் வகிக்கிறேன். என் தந்தையைப் போல் அவர் ஆசியும் வாழ்த்துக்களும் என் குடும்பத்தை வாழவைக்கிறது. வாழ வைத்துக் கொண்டிருக்கிறது. அவர் பின் சென்று அவர் இட்டப்பணிகளை செய்து கொண்டிருப்பவர்களில் நானும் ஒருவன் எனப்பணிந்து கூறிக் கொள்கிறேன்.

C. சுப்பிரமணியம்,
உறுப்பினர், முதலியார் கல்வி நிறுவனம்.

நாள் 22.8.94

கல்வித் தந்தை, செங்குந்தர்ச் செம்மல்
கல்விச் சக்கரவர்த்தி வாழ்க பல்லாண்டு !

அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
அன்னயாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்

என்ற கருத்திற்கு இணங்க அருள்நெறி மேல்நிலைப்பள்ளி, ஈரோடு கலைக்கல்லூரி, ஈரோடு தொழிற்நுட்பக் கல்லூரி, காமாட்சி அம்மன் ITI எனக்கல்வித் தொண்டில் சிகரமாய் விளங்கும் கொங்கு நாட்டின் தங்கம் உயர்திரு R.A.N. முத்துசாமி முதலியார் அவர்களின் 81ஆம் ஆண்டு நிறைவு விழா குறித்துப் பூரிப்படைகிறேன்.

தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று

என்றார் வள்ளுவர். எளிய குடும்பத்தில் பிறந்தாலும் முயற்சி திருவினையாக்கும் என்னும் மூல மந்திரத்தின் வழி நின்று படிப்படியாய் வாழ்வில் ஏற்றம் கண்டவர்.

என் நாடாயினும் இடரிலும் இழிவிலும் படாமல் இருளகன்று ஏற்றம் பெற்று இருந்திட வேண்டுமெனில் அந்நாட்டில் தொடர் தொடராய் அறிவாளர் தோன்றிய வண்ணம் இருந்திட வேண்டும் என்ற எண்ணத்தில் தான் 1971—ம் ஆண்டு மாணவர்களுக்காக ஈரோடு கலைக்கல்லூரித் தோற்றுவிக்கப்பட்டு இன்றுவரை பலப்பல அறிவாளர்களைத் தோற்றுவித்த வித்தகர்.

நாடு முன்னேற தொழில்வளம் பெருக வேண்டும் என்ற அடிப்படையில் 1980—ஆம் ஆண்டு ஈரோடு தொழில்நுட்பக்கல்லூரி தொடங்கி வைத்தார்கள்.

மாணவர்களின் சுய தொழிற்முயற்சியே நாட்டின் வளம் என்று கருதி 1992—ஆம் ஆண்டு காமாட்சி அம்மன் ITI ஏற்படுத்தினார்கள்.

நேர்மையான எண்ணம், பிறர் நலச் சிந்தனை, கட்டுப்பாட்டுணர்ச்சி, அயரா உழைப்பு — இவையே தம்மை வழிநடத்திச் செல்லும் அடிப்படை கொள்கை என உணர்ந்து செயல்படும் கல்வித்தந்தை இந்த நன்னாளில் பொன்னான வாழ்வு பெற்றுப் பல்லாண்டு வாழ்க என வாழ்த்துகின்றேன்.

மலையினும் மாணப் பெரிது !

பார்த்ததும் மனத்தில் பதியும் நெடிய உருவம்; உள்ளத்தின் உறுதியை வெளிக்காட்டும் உடல் திண்மை; மற்றவர் மனத்தைப் படிக்கும் எக்ஸ்ரே கண்கள்; பிறர் சொல்வதை உற்றுக்கேட்டு ஒன்றிரண்டு சொல்லளவில் பேச்சு; முடிவில் எவரையும் தனது போக்கிற்கே 'கடத்திச் செல்லும் ஆளுமை – இத்தகைய தனித் தன்மைகளுக்குச் சொந்தக்காரர் தாம் கல்வித்தந்தை பெரியவர் திரு ஆர்.ஏ.என். முத்துசாமி முதலியார்.

ஒரு மனிதனுக்கு மூன்று வயதுகள் உண்டு. பிறந்த உடலுக்கு ஒரு வயது; தோன்றும் உணர்ச்சிக்கு ஒரு வயது; செய்யும் செயல்களுக்கு ஒரு வயது. இந்த அளவில் நோக்கினால் பெரியவர் முத்துசாமி அவர்களுக்கு உடலால் வயது எண்பது என்றால் அவர் ஆற்றிய அரும்பெரும் செயல்களால் ஆகும் வயதோ எண்பதின் மும்மடங்காகும்.

தனது சொந்த ஊரில் இளமையில் தாம் அனுபவித்த நிலையை எண்ணும் போதெல்லாம் கண்ணீர் பெருக்கும் பெரியவர் தனது இளமைக் காலத்தில் தான் பெற முடியாமற்போன கல்விச் செல்வத்தை இளைய தலைமுறையினர்க்கெல்லாம் தந்து உதவுவதில் இவர்க்கு நிகர் ஈரோட்டில் இவர்தான்.

இன்று கொங்குச் சீமையில் கொடிகட்டிப் பறக்கும் பெரும் சிறப்புடைய ஈரோடு கலைக் கல்லூரியின் தொடக்கக் காலத்தில் பெரியவர் சந்தித்த சோதனைகள் கணக்கிலடங்கா. தனி ஒருவனாய் நின்று, எதிர்வரும் பகையை வென்று வாகை சூடும் ஒப்பிலா மறவனை 'ஏம எருமை' என்று பாராட்டும் புறத்திணை. அதுபோன்றே, பெரியவர் ஏற்றுக் கொண்ட பணியைச் செவ்வனே செய்து காட்ட தந்த உழைப்பும் உறுதியும் அளவிடற்கரியன. தன்னாட்சிக் கல்லூரியாக விளங்கும் கலைக்கல்லூரியின் உயிரோட்டம் தரும் ஆணிவேராக விளங்கும் பெரியவர்க்குப் பல்லாண்டு வாழ்க எனக் கூறுவோம்.

கல்விச் சாலைகள், நிதி நிறுவனங்கள், சமுதாய அமைப்புகள் எவையாயினும் அவற்றை நடத்திச் செல்வதில் தனி முத்திரையைப் பதிப்பது பெரியவர் செயல் பாங்காகும். அனைவரையும் ஒன்று திரட்டி, தனது நோக்கத்தை அவர்கள் நெஞ்சில் விதைத்து, அதனை வளர்ப்பதற்கான வழிமுறைகளை எடுத்துச் சொல்லி, இப்படிச் செய்தால் வெற்றி பெற முடியும் என்று வலியுறுத்தி

அனைவரையும் தமது பாதைக்கே அழைத்து வருவதே பெரியவரின் ஆளுமைப் பண்பாகும்.

பெரியார் மாவட்டச் செங்குந்த மகாசன சங்கத்தின் தலைவராகத் தொடர்ந்து தொண்டாற்றி வரும் பெரியவரின் பெருமுயற்சியால் மாவட்டத்தின் சிற்றூர்களிலெல்லாம் செங்குந்தக் குலக்கொடி பறக்கிறது. கிளைச் சங்கங்கள் பற்பல தோன்றியுள்ளன. செங்குந்த மக்களிடையே பெரும் விழிப்புணர்ச்சியை, ஒற்றுமையை, செயல்பாட்டினைத் தோற்றுவித்தது பாராட்டத்தக்கது. எந்தச் செயலும் தானே நடந்து விடும் என்று அதன் போக்கிலேயே போகட்டும் என்று விட்டுவிட்டு விழா மேடையில் மட்டும் தலையைக் காட்டுவது இவர் விரும்பாத ஒன்று. எந்தச் செயலையும் திட்டமிட்டு, விழா நடக்கும் ஊருக்குப் பலமுறை சென்று, இதனை இவரிடம்தான் ஒப்படைக்க வேண்டும் என்று தெரிந்து அவரிடம் ஒப்படைத்து, அத்தனையும் தான் முன்னின்று நடத்துவது தான் இவர் வெற்றிக்கெல்லாம் திறவுகோலாகும்.

"பெரியவர் – நம் சமுதாயத்து முதியவர்" என்று எல்லோராலும் மதித்துப் பாராட்டப்பெறும் இவர் இனி ஆற்ற வேண்டிய அரும்பணி ஒன்று உள்ளது. பெரியார் மாவட்டத்தில் உள்ள செங்குந்தச் சமுதாயத்து மக்கள் அனைவரும் தங்களுக்கிடையே உள்ள சின்ன சின்ன வேறுபாடுகளை எல்லாம் விட்டுத் தொலைத்து, 'இது செங்குந்தச் சமுதாயத்துக்குப் பெருமை தருவது' என்று எண்ணி, ஒன்றுபட்ட சிந்தையராய்ச் செயல்பட வேண்டிய காலக்கட்டத்தில் நாம் இருக்கின்றோம் என்பதனை மறக்கக் கூடாது. இத்தகைய உணர்வை மதித்துச் செயல்பட்டால் அரசியல், தொழில், கல்வி, கலை ஆகிய நிலைகளில் செங்குந்தர்கள் மேம்பாடு அடைய முடியும். செங்குந்த குலம் ஓர் உருவாய்ப் பேருருவாய்ப் பெருஞ்சக்தியாய்த் திகழ்ந்திட அனைவரையும் அரவணைத்துச் செல்லும் அன்பும் விட்டுக்கொடுக்கும் பண்பும் நமது அவசரத் தேவையாகும். இந்த அரும்பெரும் செயலைச் செய்யும் திறன் கொண்ட பெரியவர் தம் வாழ்நாளில் இதனைச் சாதித்துக் காட்ட வேண்டும்.

"நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது"

என்பது வள்ளுவம். அளக்கலாகா அளவும் தோற்றமும் வளமும் கொண்ட மலையினும் மாண்பால் உயர்ந்து ஓங்கும் பெரியவர் அவர்கள் நீடு வாழவும் நெடும்பணி புரியவும் வணங்கி வாழ்த்திப்பணிவோம்.

பேராசிரியர். க. இராமதாஸ்,
முன்னாள் முதல்வர் ஈரோடு கலைக்கல்லூரி.
2, தா.மு.நகர்,
கோயமுத்தூர்.

நாள் 3.8.94

வாழ்க வளமுடன்

வாழ்க வையகம்

ஆர்.ஏ.என்.எம். வாழ்க பல்லாண்டு

ஆயிரம் பிறைகண்டு ஒருவர் வாழ்கின்றார் என்றால் அது போற்றுதலுக்கு உரியது. அதுவும் அவர் பலர்க்கும் பயன்பட வாழ்கின்றார் என்றால் வணங்கி வாழ்த்துதலுக்கு உரியது. வணங்கி, வாழ்த்த வாழ்ந்து வருபவர் தான் ஆயிரம் பிறைகண்டு அனைவராலும் அறக்கொடையாளர், அருந்திநலர், சிறந்த நிர்வாகி, சிந்தனைச் செல்வர், இறைபணியாளர், இன்முகச்செம்மல். கல்வித்தொண்டர் ஆர்.ஏ.என்.எம். என்று அன்பொழுக அனைவராலும் அழைக்கப்பெறுகின்ற உயர்திரு ஆர்.ஏ.என். முத்துசாமி முதலியார் அவர்கள்.

பெரியவர் ஆர்.ஏ.என். அவர்கள் உழைப்பால் உயர்ந்தவர். செல்வத்தால் சிறந்தவர். ஒரு சிறந்த தலைவன் என்றால் அவனுக்குப் பொருளை ஈட்டத் தெரிய வேண்டும். ஈட்டிய பொருளைக் காக்கத் தெரிய வேண்டும். கட்டிக்காக்கும் பொருளைப் பலர்க்கும் பயன்படும் வகையில் அறம், பொருள், இன்பங்களின் பொருட்டுச் செலவிடவும் தெரியவேண்டும் என்பது வள்ளுவர் கூறுவது.

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு" (குறள் 385)

ஆயிரம் பிறை கண்ட பெரியவர் ஆர்.ஏ.என்.எம். அவர்கள் வள்ளுவர் கருத்துப்படி ஒரு சிறந்த தலைவராக விளங்குபவர்.

தலைமைப் பதவிக்கு எல்லோரும் ஆசைப்படுவது இயற்கை. அதற்காகப் பல்வேறு வழிகளைக் கையாள்வதும் உலக நடைமுறை. ஆனால் ஒரு சிலரையே தலைமைப் பதவி தேடிக் கொண்டு வருவதோடு தக்க வைத்தும் கொள்கிறது.

ஈரோடு முதலியார் அறக்கட்டளைக்கும் அவ்வறக்கட்டளை அருளிய கல்விக் கருவூலங்களான ஈரோடு கலைக்கல்லூரி மற்றும் ஈரோடு தொழில் நுட்பக்கல்லூரி ஆகியவற்றிற்கும் தலைவராக இருபது ஆண்டுகளுக்கும் மேலாக இவர் தொடர்ந்து தொண்டாற்றி வருகின்றார் என்றால் அதற்குக் காரணம் இவர்தம் தலைமைப் பண்பே. இதனை நான் பெரியவரோடு நெருங்கிப் பழகி அறிந்தவன்.

அறக்கட்டளை முறையாகச் செயல்படவும் அறக்கட்டளை நிறுவனங்கள் சிறப்பாகத் தொண்டாற்றவும் இவரின் இயல்பு பெருங்காரணமாகும். செல்வத்தால் சிறந்து விளங்கும் இவர் எல்லா மட்டத்தினரையும் அணைத்துச் செல்லும் இவர்தம் இயல்பும், யாரையும் கவரும் இனிய சொற்களும், பிறர்தம் கடிய சொற்களையும் பொறுமையாகக் கேட்டு உண்மைகண்டு திருத்தும் திறனும், காட்சிக்கு எளிமையும், யாரிடத்தும் கடுஞ்சொற்களை பயன்படுத்தாப்பாங்கும், அஞ்சாமையும், செயலைச்

செவ்வனே செய்து முடிக்கவல்ல அறிவாற்றலும், பலருக்கும் நலம்தரும் நற்செயல்களில் நல்ல ஊக்கமும் இதனை இதனால் இவன் முடிக்கும் என்று அறிந்து அதனை அவரிடம் விட்டுச் செயல்படச் செய்யும் நிருவாகத் திறனும் இவரின் சிறந்த தலைமைக்குக் காரணங்கள் என்பதனை இவரோடு நெருங்கி இருந்து உணர்ந்து மகிழ்ந்தவன் நான்.

காந்தியடிகள் தாம் எழுதிய வரவு செலவு கணக்கில் ஒரு பைசா வேறுபாடு வரவே, தூக்கம் பிடிக்காமல் அக்குறைபாட்டைக் கண்டு சரி செய்த பின்னர் தான் உறங்கினார் என்பது அவர் வாழ்வு காட்டும் செய்தி. திருவாளர் ஆர்.ஏ.என். அவர்கள் தன் பணமாயினும் பொதுப் பணமாயினும் கணக்கைத் துல்லியமாக வைத்திருப்பதில் கண்ணும் கருத்துமாக இருப்பவர். திடீரென்று "உங்கள் சட்டைப்பையில் எவ்வளவு பணம் உள்ளது. என ஒருவரைக் கேட்டால் அவரால் சொல்ல இயலாது. இது தான் உலக இயற்கை. ஆனால் திருவாளர் ஆர்.ஏ.என்.எம். அவர்களைக் கேட்டால் துல்லியமாக, தங்குதடையின்றி பைசா வரை உடனே கணக்குச் சொல்லும் ஆற்றல் உள்ளவர் இது உண்மைத் தலைவனின் உயர்ந்த பண்பு.

இவர் உள்ளம் உயர்ந்த உள்ளம், தொண்டு உள்ளம், உள்ளத்தின் உணர்வும் உறுதியானது. எனவே தான் இவர் தலைமையில் இயங்கும் அறக்கட்டளையானது சேவை நிறுவனங்கள், சேவைப்பணிகள் பலவற்றைக் கண்டும் செய்தும் மகிழ்கின்றது. இதனைத்தான் வள்ளுவர்

"வெள்ளத்து அனையது மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத்து அனையது உயர்வு" எனவும்
"எண்ணிய எண்ணியாங்கு எய்துபவர் எண்ணியார்
திண்ணியர் ஆகப்பெறின்"

எனவும் கூறியுள்ளார்.

இவரிடம் நான் காணாதன செருக்கும் சினமும் சிறுமையும் ஆகும். குறைகள் செய்ய அஞ்சும் பண்பும், குற்றம் ஏற்படுமுன்பு முன்கூட்டியே உணர்ந்து அது வராமல் தடுக்கும் திறமும், நடுநிலை நின்று ஆராயும் இயல்பும் இவரிடம் இயல்பாகவே இருப்பதனை உணர்ந்து மகிழ்ந்திருக்கிறேன்.

இத்தகு அருந்திறலார், ஆயிரம் பிறை கண்ட பெரியாரின் வாழ்க்கை வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்துவரும் வாழ்க்கை. சான்றோர்க்கு ஒளி கூட்டும் வாழ்க்கை வாழ்வில் நன்முறையில் வளர விரும்புவார்க்கு நன்னெறி காட்டும் நல்வாழ்க்கை.

80 வயது நிறைந்து 81வது வயதில் வாழ்கின்ற இப்பெருமகனாரை "இன்னும் ஒரு நூற்றாண்டு இரும்" என வாழ்த்துவதனைத் தவிர இவருக்கு உடல் நலம் நீள் ஆயுள், நிறை செல்வம், உயர்புகழ், மெய்ஞ்ஞானம், ஓங்கிய வாழ்வு அருளாய் ஆண்டவனே என வேண்டுவதனைத் தவிர எம்போன்றவர்களால் வேறு என்ன செய்ய இயலும். திரு ஆர்.ஏ.என்.எம். வாழ்க பல்லாண்டு. அவர்தம் தொண்டுகள் வளர்க. பல்லாண்டே வாழ்க வளமுடன்.

டாக்டர். மே.அ. பாலமுருகன்,
தமிழ்த்துறைத் தலைவர்,
ஈரோடு கலைக் கல்லூரி (தன்னாட்சி)
ஈரோடு – 638 009.

நாள் 14.8.94

திண்ணையிலிருந்து தில்லி வரை....

ஆலமரத்தின் வித்துக் கடுகினும் சிறிதெனினும் அதிலிருந்து கிளர்ந்து வரும் மாபெரும் சக்தி நம்மை வியக்க வைக்கின்றது. வாமனனாய் வந்தவன் நெடுமாலாய் நிமிர்ந்து ஓரெட்டில் உலகளந்தது உலகறிந்தது. வரலாற்று ஏடுகளிலும் பூகோளப் படங்களிலும் பூதக்கண்ணாடி வைத்துத் தேடினாலும் அகப்படாத ஒரு சிறிய கிராமமான இராக்கியாபாளையத்தில் 1913 ஆம் ஆண்டு தோன்றிய பெரியவர் ஆர்.ஏ.என். முத்துசாமி முதலியார் அவர்களின் விசுபரூபம் அவ்வாறு தான்.

ஓரெட்டில் உலகளந்தது போன்ற கதையில்லை இவர் வாழ்வு. ஆலவித்துப் போல் சிறிது சிறிதாக – கண்ணுக்குப் புலப்படாமலே விரிந்து பரந்ததுதான் இவர் வாழ்வு. பெரியவர் ஆர்.ஏ.என். முத்துசாமி முதலியாரின் வாழ்வு ராஜபாட்டையில் நடை போட்ட வாழ்வல்ல. கல்லும் முள்ளும் நிறைந்த கடினமான பாதை. 'மடுத்த வாயெல்லாம் பகடன்னது' இவருடைய வாழ்க்கை.

உழவும், நெசவும் உலகிற்கு இன்றியமையாதவை. இவ்விரு தொழிலையும் தொடக்கக் காலத்தில் செய்தவர்.

"உள்ளம் இலாதார் எய்தார் உலகத்து
வள்ளியம் என்னும் செருக்கு"

எனும் வள்ளுவர் மொழிக்கேற்ப இவர் தந்தை நாகப்ப முதலியார் தன் பிள்ளைகளோடு ஊர்ப்பிள்ளைகளும் கற்கவேண்டும் என்ற ஆவல் காரணமாக அக்குக்கிராமத்தில் ஓர் ஆசிரியை ஏற்பாடு செய்தார். 'தாயைப் போல் பிள்ளை' என்பது போல் இவர் 'தந்தை போன்ற பிள்ளை'. ஆகவே தான் முதன் முதலில் சிறுவர்களுக்கான பள்ளியொன்றை இளமைக் காலத்தில் தொடங்கினார்.

அச்சிறு வித்து இன்று உயர்நிலைப் பள்ளிகளாகவும், மேனிலைப் பள்ளிகளாகவும், கல்லூரிகளாகவும், தொழிற்பயிற்சிக் கல்லூரியாகவும், பல்தொழிற்பயிற்சி நிறுவனமாகவும் விழுது பரப்பி விரிந்து நிற்கின்றது.

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை"

எனும் மொழியின் உண்மையறிந்து சிறுசிறு துளிகளாகச் சிதறிக் கிடந்த

செல்வத்தைப் படிப்படியாக ஏறி இறங்கிச் சேர்த்தார். இன்று கம்பீரமாகக் கல்வி நிலையங்கள் நிமிர்ந்து நிற்கின்றன. அணிலின் சேவை போல் என் சேவையும் இக்கல்வி நிறுவனங்கள் தோன்றக் காரணமாயின எனப் பல ஏழை நெசவாளர்களைப் பெருமைப்பட வைத்திருக்கின்றார் பெரியவர் ஆர்.ஏ.என். முத்துசாமி முதலியார். சிறு தொகை வழங்கியவர்கள்கூட எங்கள் கல்லூரி – இது எங்கள் கல்லூரி என்று உரிமை பாராட்ட வைத்திருக்கின்றார்.

சிதறிக் கிடக்கும் சக்திகளை ஒன்று திரட்டுவதும் – ஒருமுகப்படுத்துவதும் சிறந்த தலைமைப் பண்பாகும்.

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்"

என்ற கூற்றின் இலக்கியம் ஆவார் பெரியவர். கொண்ட கொள்கையின் உறுதிப்பாடு, எவை வந்தாலும் அஞ்சாது எதிர்த்து நிற்கும் துணிவு கொண்டவர்.

கல்வித் துறையில் மட்டுமல்ல ஆன்மீகத் துறையிலும் பேரீடுபாடு கொண்டவர். தான் சார்ந்த சமூகம் – மக்கள் உயரவேண்டும் என்ற சிந்தனையுடையவர். சில சொல்லிச் சிந்திக்க வைக்கும் ஆற்றல் பெற்றவர். எந்தப் பிரச்சனை என்றாலும் இவர் பார்க்கும் கோணம் புதுமையானதாக – புரட்சிகரமானதாக இருக்கும். மாபெரும் சபை என்றாலும் தான் எண்ணிய கருத்தைத் திண்மையுடன் சொல்லும் வன்மையும் கற்றறிந்த சான்றோர்களையும் வியக்கவைக்கும் தன்மையும் கொண்டவர்.

மிகப் பழமையான கல்லூரிகள் தமிழகத்தில் பல இருந்தாலும் இளம் கல்லூரியான ஈரோடு கலைக் கல்லூரிக்குத் தன்னாட்சி நிலை கிடைக்கத் தில்லி வரை சென்றவர் – கல்லூரியின் சிறப்பைத் தில்லிக்கு எடுத்துரைத்தவர். திண்ணைப் பள்ளியில் தொடங்கிய இவருடைய கல்விப் பயணம் இன்று தில்லியை எட்டியுள்ளது. இப்பயணம் ஆரம்பம்தான் முடிவல்ல.

டாக்டர். மா. அர்த்தநாரி
பேராசிரியர்
கணிப்பான்துறை
ஈரோடு கலைக்கல்லூரி, ஈரோடு – 9

நாள் 15.8.94

நான் கண்ட மாமனிதர்

புவனம் முழுமையும் புன்னகை பூத்த வண்ணம் காக்கும் காமாட்சியம்மனுக்குக் கோயில் எடுப்பித்து இம்மைக்கு இவ்வையகத்தே இசையோடு வாழ்ந்து, சைவ நெறி தழைக்கப் பணி செய்து பிறர்க்கென எஞ்ஞான்றும் முயலும் திருவளர் ஆர்.ஏ.என். முத்துசாமி முதலியார் அன்ன பெருந்தகையோரால் இவ்வுலகம் நிலை பெற்றதாயிற்று. சிறப்பொடு பூசனை சிவனுக்கு நடத்தும் ஈரோடு அடிகளாரின் அருள்நெறித் திருக்கூட்டத்தின் அன்பராய், குன்றக்குடி வாழ்மக்கள் தொண்டே மகேசன் தொண்டராய்க் கொண்ட குன்றக்குடி அடிகளாரின் தலைமையின்கீழ் இவர்தம் திருத்தொண்டுகளும் எண்ணிலடங்கா. ஆண்டுதோறும் கவின்பெறு தன் சுற்றமொடு ஆலயங்கள் பலவற்றிற்கும் சென்று மாதொரு பாகர் மலர்த்தாள் மனம் பதித்துக் கூடும் அன்பினில் காதலாகிக் கசிந்து கும்பிட்டு மக்களிடையே சிவநெறி தழைக்கச் செய்கின்றார். தூய வெண்ணீறு துதைந்த பொன்மேனியும் நாயகன் சேவடி தைவரு சிந்தையும் பதிகச் செஞ்சொல்லும் கொண்டு அன்னதானங்கள் நடத்தியும் தண்ணீர்ப்பந்தல் வைத்தும் செல்வத்துள் செல்வமாகிய அருட் செல்வத்தைத் தானும் பெற்றுப் பிறரும் பெறத் தூண்டு கோலாய் உள்ளார்.

ஒரு குடிப் பிறந்த பல்லோருள்ளும் அறிவுடையோன் ஆறே அரசும் செல்லுமாதலின் மாண்ட அறிவு உடையவராய் மக்களை உயர்த்தி ஆன்றவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர் பலர் வாழும் ஊராகத் தான் வாழும் ஊர் திகழ்ந்திட உலைவின்றித் தளராது உழைக்கின்றார். ஈட்டிய பொருளின் எழுத்தே உடைமை என்பதறிந்து, செய்தருமங்கள் யாவும் பெயர் விளங்க ஒளிரும் கல்வி நிலையங்கள் சில கண்டார். சிறு வயதிற் கல்வி கணிப்பான யுக மேதைகளை உருவாக்கக் கல்லூரியும் இழையை நூற்றுப் பாலாவியன்ன நல்லாடை நெய்யும் தொழில்நுட்ப வல்லுநர்களை வளர்க்கத் தொழிற்பயிற்சிக் கல்லூரியும் அமைத்துள்ளார். கேள்விச் செல்வமும் பட்டறிவும் மிக்க இவர்தம் எண்பதிலும் இருபதாய் நின்று செயலாற்றும் வினை வலியாலும் நுண்மாண் நுழைபுலத்தாலும் இவரைத் தலைமகனாய்ப் பெற்றுள்ள கல்வி நிறுவனங்கள் அனைத்தும் கலைமகள் அருளோடு அலைமகள் அருளும் பெற்றுச் சீரோடும் சிறப்போடும் மிளிர்கின்றன. இவர்தம் செயலாற்றுத் திறனையும் உரம் சால் உள்ளத்தையும் கண்துஞ்சாது செவ்வி அருமையும் பாராது கடமையாற்றும்

ஆற்றலையும் எண்ணிய எண்ணியாங்கு எய்தும் மனத் திட்பத்தையும் தன் சொல்லை வெல்லும் பிறிதோர் சொல் இல்லாத நாநலனையும் நினைக்கின் வியப்பே விஞ்சி நிற்கும்.

ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்று வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைத்த விந்தை மனிதர் வாழ்ந்த கால கட்டத்தினர் எனினும் மாதர்தம் மடமையைக் கொளுத்திப் பட்டங்கள் ஆளவும் சட்டங்கள் செய்யவும் வேதம் படைக்கவும் நீதிகள் செய்யவும் வல்ல ஒளி படைத்த கண்களும் தெளிவு பெற்ற மதியும் உறுதி கொண்ட வயிர நெஞ்சமும் உடைய மங்கையர் தம்மை உருவாக்கப் பெண்கள் கல்லூரிக்குக் கால்கோள் விழா எடுத்துள்ளார். கண்ணுதற் பெருங்கடவுளும் கழகமோடமர்ந்து பண்ணுறத் தெரிந்தாய்ந்தவிப் பசுந்தமிழ் வளர்க்கும் நோக்கில் கோலாலம்பூரில் நடைபெற்ற உலகத்தமிழ் மாநாட்டில் பங்கேற்றார்.

இவ்வாணிக யுகத்தில் கொடுப்பதூஉம் குறைபடாது கொள்வதூஉம் மிகைபடாது. பெருவணிகம் செய்து பொருளீட்டிய இவர் சுதேசி ஜவுளி வர்த்தக சங்கத்தின் தலைவராய் வீற்றிருந்து அச்சங்கத்தை வளர்த்த பெருமைக்குரிய பெரியாராவார். இவரின் அடிப்படை எண்ணங்கள் அனைத்தும் வணிக நோக்கினவேயாம். குலவிச்சை கல்லாமல் பாகம் பட்டு விட்டதல்லவா?

செங்குந்தர் குலச் சமூகம் ஆல்போல் தழைத்து அருகுபோல் வேரோடி வளரத் தளர்வின்றி பணிபுரியும் எங்கள் குலச் செம்மல் இவர். பல அறநிலையங்களின் தலைமைப் பொறுப்பில் உள்ள இவர் ஆகாறு அளவிட்டிதாயினும் கேடில்லை போகாறு அகலாக்கடை என மன்னிய புகழ் பாரததேவி தன்னிரு தாளிணைக் கடிமையாகி முடிவில்லாக் கீர்த்தி பெற்ற காந்திய வாதியாக தர்மகர்த்தாக் கொள்கைப்படி நடப்பதால் அந்நிலையங்கள் யாவும் பொருளாதார வசதியில் மேம்பாட்டுத் தன்னிறைவு பெற்றுள்ளன.

மக்கள் மாக்களாய் வல்லசுரராய் வாழும் இக்கலியுகத்தில் படைப்புப் பல படைத்துப் பலரோடு உண்ணும் உடைப் பெருஞ்செல்வந்தராய்த் தம் செழுங்கிளை தாங்கி எல்லா உயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகு அன்பும் அறனும் பண்பும் பெற்று என்நோக்கில் மாமனிதரான செம்மல் இவர் வையத்துள் வாழ்வாங்கு பல்லாண்டு வாழப் பரமனடி பணிவேன்.

பொ.க. சுவாமிநாதன், B.Com.,
சென்னைப் பெருநகர் செங்குந்த மகாசன சங்கம், சென்னை.
தொலைபேசி 4939966
6, இரண்டாவது குறுக்குத் தெரு,
ஜெத் நகர், சென்னை – 600 028.

நாள் 18.8.94

பெரியவர் RANM

RANM என்றாலே ஈரோடு கல்வித்தந்தை திரு R.A.N. முத்துசாமி முதலியாரைத் தான் குறிக்கும் என்கிற அளவிற்கு தமிழகச் செங்குந்தரிடையேயும், ஈரோடு வாழ் பொது மக்களிடையேயும் புகழ்பெற்று விளங்கக் கூடியவர் ஆவார்.

வெள்ளைக் கதர் ஜிப்பாவும், கதர் வேட்டியும், அதற்கேற்ப மெல்லிய வெள்ளிக் கம்பிகள் தலையில் சிறு சிறு துண்டுகளாக முளைத்திருப்பது போன்ற தலைமுடியும், கம்பீரமான தோற்றமும், அஞ்சா நெஞ்சமுள்ளவராகவும், 81 வயது என்று கிடைக்கக்கூட முடியாத அளவிற்கு நடையும், எதையும் வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்று ஒளிவு மறைவு இல்லாமல் எடுத்துக் கூறுபவர் தான் திரு RANM ஆவார்கள்.

பெரியார் மாவட்டச் செங்குந்த மகாசன சங்கத்தின் தலைவராகச் சிறப்பாகச் செயல்படுவதோடு, மாநிலச் சங்கத்தின் சார்பாக பல்வேறு மாவட்டங்களில் நடைபெறும் பெரும்பாலான கூட்டங்களில் நேரில் கலந்து கொண்டு, மாநிலச் சங்க வளர்ச்சிக்குத் தன் எண்ணங்களையும், கருத்துக்களையும் வெளியிடுவதிலும் தயக்கம் காட்டுவதில்லை.

13.8.94 அன்று மறைந்த என் சம்பந்தி கள்ளக்குறிச்சி புலவர் திரு.V.தங்கவேலு அவர்களின் நெருங்கிய நண்பராவார். அதன் மூலமும், நம் மாநிலத் தலைவர் திரு. J. சுந்தானந்தன் அவர்களின் பொன் விழா வதுலுக்காக மாநிலச் சங்க நிர்வாகிகளோடு ஈரோடு சென்றிருந்த போதும், அவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு கிடைத்தது. அவைகளை எண்ணி மகிழ்கிறேன்.

நம் சமுதாய வளர்ச்சிக்கும், கல்வியின் வளர்ச்சிக்கும் அரும்பாடு பட்டுவரும் திரு R.A.N.M. அவர்கள் மேலும் பல்லாண்டு பல்லாண்டு சீரும் சிறப்புடனும், தேகத் திடத்துடனும் வாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

எம்.எம். தணிகைமலை,
துணைத்தலைவர், தென்னிந்த செங்குந்த மகாஜன சங்கம்,
வடபழனி, சென்னை – 600 026.

நாள் 17.8.94

மனித நேயமிக்க மனிதர்

மனித நேயமிக்க மாபெரும் மனிதராக, கல்விக்கண் திறந்த அறிவொளி புகட்டும் கல்வித் தந்தையாக, பல்லாயிரம் குடும்பங்களின் கண்கண்ட கடவுளாக விளங்கி வரும் புகழாளர் திருமிகு ஆர்.ஏ.என். முத்துசாமி முதலியார் அவர்களது எண்பத்தோராம் ஆண்டு விழா ஏற்றமுற நடை பெறுவதை நல்லோரும் நாட்டோரும் நன்றியுடன் பாராட்டுகின்றனர். நானும் மகிழ்வோடு பாராட்டிப் பூரிப்படைகிறேன். திருமிகு முதலியார் அவர்கள் மேலும் பல்லாண்டுகள் வாழ்ந்து பலநூறு குடும்பங்கள் செழித்திடுமாறு மனமார இறையருளை வேண்டிக் கொள்கிறேன்.

பெருந்தகையாளர் தமது இளமையில் அதிகம் படிக்காதவர் ஆயினும் உலகத்தவர் படித்து மேன்மையுற வேண்டும் என்று விரும்பித் திட்டமிட்டுக் கலைக் கல்லூரி தொடங்கினார். அன்னார் தொடங்கிய கல்லூரி பத்தாண்டுகளில் பல்கிப் பெருகி, சீரும் சிறப்புமாகச் செயல்பட்டு வருவதை எல்லோரும் பார்த்துப் பாராட்டு கின்றனர்.

மாணவர் உலகம் முன்னேற அனைத்துப் பாடங்களும் பட்ட மேற்படிப்புகளுக்கு உரிய வசதிகளுடன் உள்ள கல்லூரியாக வளர்ந்துள்ளது. ஏழை, எளிய மாணவரும், குறிப்பாக நமது செங்குந்தர் மாணவர்களுக்கும் உரிய உதவிகள் செய்து வருவதும் குறிப்பிடத்தக்கதாகும். மேலும் தொழில் பயிற்சிக் கல்விக் கூடமும் தொடங்கியுள்ளார். இங்கும் பலதுறைகளில் டிப்ளமோ கோர்ஸ் உள்ளன. தொழில் வளம் பெருக, பைனான்ஸ் கம்பெனி தொடங்கி, எளியோர்க்கும் முன்னேற்ற வழி கண்டுள்ள இப்பெருமகனாரை மக்களின் கலங்கரை விளக்கம் என்று போற்றுகிறோம்.

பண்பும் பக்தியும் கொண்ட நம் பெருந்தகை கோயில்களுக்கும் திருவிழாக் களுக்கும் பிற நல்ல காரியங்களுக்கும் வாரி வழங்கும் பருவ மழையாக, கொடை வள்ளலாக விளங்குகிறார்.

எல்லார்க்கும் இன்பம் சேர்க்கும் இப்பெரியார் தாம் பிறந்த சமூகமான செங்குந்த மகாஜன சபைக்குத் தேவைப்படும் போதெல்லாம் பெரிய நன்கொடை கள் தந்து பேருதவி புரிந்து வருகிறார். இத்தகைய பேருள்ளங் கொண்ட மாமனிதர் நம் வாழ் நாளில் கண்கண்ட தெய்வமாக வாழ்வது நாம் பெற்ற பெரும் பேறாகும். அவரும் அன்னாரது குடும்பத்தாரும் எல்லா நலங்களும் பெற்று இனிது வாழ வேண்டுமென்று நெஞ்சார விரும்பி இறையருளை வாழ்த்தி வேண்டிக் கொள்கிறேன்.

R.N. சந்தானராஜகோபாலன்,
9–10 அக்கரை நடராச முதலியார் தெரு,
மன்னார்குடி – 614 001.

நாள் 29.8.74

ஓயாது உழைப்பவர் கல்வித் தந்தை

நெடிதுயர்ந்த செம்மேனி, கனிவான பார்வை இனியபேச்சு, கதராடை மனிதர். இவர் எல்லோராலும் மதிக்கப்படுபவர் ஈரோட்டுச் செம்மல், கர்மவீரர், கல்வித்தந்தை திரு R.A.N. முத்துசாமி முதலியார் அவர்கள். செயல்களில் கண்டிப்பு, ஏமாற மாட்டார் ஏமாற்றவும் மாட்டார். தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தை அறிந்தவர் அனைவரும் பெரியவர் திரு R.A.N. அவர்களை அறிவார்கள். பெரியார் மாவட்டச் செங்குந்த மகாஜன சங்கத் தலைவரான இவர் மாநிலத்தில் பெரியதாக மாவட்ட சங்கத்தை அதிக உறுப்பினர்களைக் கொண்ட அதிக கிளைச் சங்கங்களை உருவாக்கித் திறம்பட செயலாற்றி வருகிறார்.

ஆயிரம் பிறை கண்டவரா இவர்? என வியக்கும்படி இளைஞர்போல் சுறுசுறுப்பானவர். எந்நேரமும் தன்னுடைய வர்த்தகஸ்தாபனத்திற்கும், பள்ளிக் கூடங்கள் கல்லூரிகள் என ஒவ்வொன்றுக்கும் ஓயாது உழைப்பவர். வல்லவர், எதையும் சாதிக்கக்கூடியவர் எனப் பெயர் பெற்றவர். அவர் பள்ளியில் பயின்றது அதிகமில்லை. ஆனால் அறிவில் சிறந்து விளங்குகிறார் அவர் கல்வி நிலையங்களில் படித்துப் பட்டம் பெற்று வாழ்வில் உயர்ந்துள்ளோர் பல்லாயிரம். கல்வித் தந்தை என எல்லோராலும் அழைக்கப்பட்டு எல்லா நெஞ்சங்களாலும் வாழ்த்தப்படும் இம்மாமனிதர் செங்குந்தர் குலத்தில் பிறந்ததால் குலம் பெருமை அடைகிறது.

வாழ்க பெரியவர் RAN முத்துசாமி! வளர்க அவர் தொண்டுகள்! ஓங்குக அன்னார் புகழ்!

C. காந்திதாஸ், M.A.,B.L.,
மதுரை மாவட்டச் செங்குந்தர் மகாசபை சங்கம்
652, K.K. நகர், மதுரை – 625 020.
போன் நெம்பர் 46105

நாள் 10.8.94

மனிதருள் மாணிக்கம்

பெரியார் மாவட்டச் செங்குந்தர் மகாசன சங்கத்தின் தலைவரும், செங்குந்தர்கள் அனைவராலும் கல்வித்தந்தை, கல்வி சக்கரவர்த்தி என்று அன்புடன் அழைக்கப்படுபவருமான திரு.ஆர்.ஏ.என். முத்துசாமி முதலியார் அவர்களின் 81ம் ஆண்டு விழா 18.9.94ல் ஈரோட்டில் நடைபெற உள்ளது என்பதையும், அதனைத் தொடர்ந்து மலர் ஒன்று வெளியிட இருப்பதையும் அறிந்து மிக்க மகிழ்ச்சி.

நன்றியுணர்வுடன் விழாவிற்கு ஏற்பாடு செய்துள்ள மலர்க்குழுவினரை உளமார பாராட்டுகிறேன்.

விழா நாயகரின் சமுதாயத் தொண்டும், குறிப்பாக, கல்வித்தொண்டும் போற்றுதலுக்குரியது.

கல்விப்பணியில் அவர்கள் தளராது ஆர்வத்துடனும், ஊக்கத்துடனும், உற்சாகத்துடனும் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டுள்ள பெரும் உள்ளத்தின் காரணமாக அவரை மனிதருள் மாணிக்கம் என்று வாழ்த்துகிறோம். பாராட்டுகிறோம்.

மலரின் நாயகரின் முழுமையான வாழ்க்கை வரலாறு வெளியிட அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

விழா சிறக்கவும், நாயகரின் கல்விப்பணி வளரவும், அன்னார் வளமுடன் வாழ்க, நலமுடன் வாழ்க என்று என் சார்பாகவும், மதுரை மாவட்டச் செங்குந்தர் மகாசன சங்கத்தின் சார்பாகவும் மனம் கனிந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

G.S. துரைசாமி முதலியார்,
தலைவர், செங்கை எம்.ஜி.ஆர். மாவட்ட செங்குந்தர் சங்கம்.
5, Appa Garden Street, Kilpauk
MADRAS - 600 010.

நாள் 12.8.94

முத்து விழாக் காணும் முத்துச்சாமி அவர்கள்

பல்லாயிரம் ஆண்டுகாலமாக பாண்டிய மன்னர்களின் கொற்கைத் துறைமுகத்து ஆழ்கடலில் மூழ்கி எடுத்த சிப்பிகளில் கண்டெடுத்ததுதான் நன்முத்தென்பர். இந்த நன்முத்துக்கள் உலகெங்கிலும் உள்ள கடற்கரைகளில் கடலில் கிடைப்பதில்லை. அது பாண்டியரின் கொற்கைத் துறைமுகத்து கடலில் விளைந்ததனால் அது பாண்டியரின் சொத்தாய் இருந்து வந்தது.

அக்காலத்தும் இக்காலத்தும் உலகெங்கிலும் உள்ள பல மன்னர்களின் அணிமுடியையும், கொலுமண்டங்களையும் அலங்கரித்து அழகுபடுத்திவந்த இந்த நன்முத்துக்கள் அவர்களின் பல்லக்குகளையும் அழகுபடுத்தும் முத்துப்பல்லக்காய் விளங்கி வந்ததுண்டு.

இந்தக் காலத்திலும் இம்முத்துக்கள் சாமான்னியர் அணியும் அணிகலன்களிலும் சிறந்து விளங்குகின்றன.

அதே போன்று பெரியவர் ஆர்.ஏ.என். முத்துசாமி முதலியார் அவர்கள் செங்குந்தம் எனும் ஆழ்கடலிலே மூழ்கி எடுத்த முத்து எனலாம். அவர் செங்குந்த குலத்தின் சொத்தேன்பேன். கொற்கைக் கடலின் முத்து பாண்டியரின் புகழ்பாடுவது போல் இம்முத்து செங்குந்தர் புகழை என்றும் எல்லோரும் பாடும் புகழ் முத்து என்பேன்.

கொற்கை முத்தோ வெளித் தோற்றத்தை அழகு படுத்தின. ஆரவாரப் பொருளாய் ஆதிக்கச் சாம்ராஜ்யத்தின் நிலவாய் இருந்தன. ஆயின் நம்முத்தான ஆர்.ஏ.என்.எம். அவர்களோ நாலடியார் கூறுவதுபோல்

'குஞ்சி அழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல – நெஞ்சத்து
நல்லம்யாம் எனும் நடுவு நிலைமையால்
கல்வி அழகே அழகு'

என்ற தத்துவார்த்த கல்வி அழகை உலகுக்குத் தந்து கொண்டுள்ளார்கள்.

ஈரோடு கல்வித் தந்தை! ஈடில்லா செல்வத் தந்தை!! இடர் தீர்க்கும் நல்ல தந்தை வள்ளுவர் கண்ட வாக்குக்கு உண்மையானவர்.

ஊருணி நீர் நிறைந்தற்றே; உலகவாம்

பேரறிவாளன் திரு....................... என்பது அக்குறள் இவரால் ஏற்படுத்தப்பட்டுள்ள கல்வி நிலையங்கள் ஊரார் உண்ணக்கூடிய நல்ல நீராக உள்ளன. செங்குந்தர் குலத்துதித்தோர், ஏழை எளியோராயினும் செல்வச் சீமானாயினும் இவர்தம் கல்வித் திருவை; நன்னீரை, எல்லோரும் சமமாகப் பகிர்ந்துண்டு மகிழ்கின்றனர். இம்முகத்தைச் செங்குந்தர் இல்லங்களிலெல்லாம் சாமியாய் வைத்து வணங்குதல் நன்றியுடையதாகும்.

கல்வித் தொண்டேயல்லாமல் இம்முத்துசாமி அவர்கள் சமுதாயத் தொண்டிலும் சளைத்தாரில்லை. பெரியார் மாவட்டத்துச் செங்குந்தர் தலைவராய் இருந்து இவரால் தோற்றுவிக்கப்பட்ட எழுச்சி மிகு கிளைச் சங்கங்கள், உறுப்பினர் சேர்க்கைகள் கல்வி நிலையங்கள் எத்தனை? எத்தனை? ஆற்றிய நல்லறங்கள் கொண்ட நிகழ்வுகள் எண்ணில் அடங்காது.

செங்குந்த மித்திரனின் ஆயுள் சந்தாதாரையும் ஆண்டு சந்தாதாரையும் அபரிமிதமாகச் சேர்த்து அதற்குப் புத்துயிர் அளித்ததும் இம்முத்து எனில் அது மிகையாகாது.

இப்படிப்பட்ட அரிய சேவைகள் பல செய்துள்ள செங்குந்தக் குல முத்துசாமி அவர்கள் பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு வாழ்ந்து நம் சமுதாயத்திற்கும் உலகுக்கும் மேலும் பல சேவைகள் செய்வான் வேண்டி எல்லாம் வல்ல தணிகை முருகன் அடிவணங்குகிறேன்.

வணக்கம்.

டாக்டர். மு. கருணாநிதி, M.B.B.S., D.C.M.,
A.K.V. நர்சிங் ஹோம்,
ஜெயங்கொண்டம் – 621 802. போன் : 04331 - 279.

நாள் 1.8.94

செங்குந்தருள் ஒரு "காமராஜ்"

வாய் வார்த்தைகளால் மட்டுமே, சமுதாயத்தை முன்னேறச் செய்துவிட முடியுமெனப் பலரும் கனாக் கண்டுகொண்டிருந்த காலத்தில்....

வயிற்றுக்குச் சோறிடல் வேண்டும்
இங்கு வாழும் மனிதர்க்கெலாம்
பயிற்றிப் பல கல்வித் தந்து
இந்தப் பாரை உயர்த்திடல் வேண்டும் – என்ற

புரட்சிக் கவியின் கருத்தில் உள்ள யதார்த்த உண்மையை உணர்ந்து, தமக்குக் கிடைக்காத கல்வி, தமது குலச் செல்வங்களுக்கெல்லாம், குறையின்றி கிடைக்க வேண்டும் – அதன் மூலம் தான் சமுதாயம் உயர இயலும் என்கின்ற தொலை நோக்கோடு செயலாற்றி, பல குலச் செல்வங்களின் கல்வி கண்களைத் திறந்து வைப்பவர், நமது குலம் "கர்ம வீரர்".

மிகமிக எளிய குடும்பத்தில் பிறந்து, உழைத்து, உழைத்து, மிக உயரிய நிலையில் வந்திருக்கின்ற நமது பெரியவர் வர்த்தகத்தையும் சமுதாயப் பணியையும் இருகண்களாகக் கொண்டு வாழ்ந்து வருகிறார். "தமக்குக் கிடைக்காதது – யாருக்குமே கிடைக்கக்கூடாது" என்று நினைக்கின்ற சில பதவியாளர்கள் மத்தியில், கல்விச் செல்வத்தை வாரி வாரி வழங்கி வருகிறார் நமது கல்வித் தந்தை.

வர்த்தக நுணுக்கங்களை நமது உறவினர்களுக்கு எடுத்துக் கூறுவதுடன், பொருளாதார ரீதியாக உதவி செய்து

"வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள் வினையோடு
ஐந்துடன் மாண்டது அமைச்சு"

– எனும் குறளுக்கு இலக்கணமாகத் திகழ்ந்து வருகிறார். நமது "வணிகத்தந்தை", "சொல் ஒன்று – செயல் வேறொன்று" ஆகப்பலரும் வாழ்ந்து வரும் இந்நாளில், கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவதில் வரும் இடர்பாடுகளைப் பொருட்படுத்தாதவர்.

நமது "சொல்லேர் உழவர்".

"வசையொழிய வாழ்வாரே வாழ்வார்,
இசையொழிய வாழ்வாரே வாழாதவர்

எனும் குறளுக்குச் சீரிய உதாரணமாய்த் திகழ்ந்து வரும் நமது குலக்காவலர் நோயற்று நீடூழி வாழ, எல்லாம் வல்ல முருகப் பெருமானை வணங்கி வாழ்த்துகிறேன்.

து. பழனியாண்டி
சங்க அமைப்பு செயலாளர், தென்னிந்திய
செங்குந்த மகாஜன சங்கம் செங்குந்தபுரம்
ஜெயங்கொண்டம் – 621 802.

நாள் 16.8.94

நான் கண்ட முப்பெரும் தலைவர்களின் முழுவடிவம்
ஆர்.ஏ.என்.எம்.

அருந்தமிழின் தன்மானத்தோடு தலைநிமிர்ந்து வாழ துணிச்சலை ஊட்டியவர் ஈரோடு தந்த பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் ஆவார்கள்.

தமிழகத்துக் கிராமங்களில் வாழ்கின்ற படிப்பறிவு இல்லாத ஏழை எளிய மக்கள், கல்வி கற்று வாழ்க்கையில் முன்னேற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்று எண்ணி, கல்வி கண்ணைத் திறந்தார் பெருந்தலைவர் காமராஜ் அவர்கள்.

மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு என்று சொல்லி எதிரிகளையும் அரவணைத்துச் செல்லும் மனப்பாங்கு பெற்றவர் அரசியல் தலைவர்களில் சிறந்த தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

இந்த முப்பெரும் தலைவர்கள் தான் தமிழகத்தில் தமிழ் மக்களின் நெஞ்சகத்தில் நீங்காத இடத்தைப் பெற்றவர்கள். இந்த மூன்று தலைவர்களின் நல்லாசியைப் பெற்றவர்கள் தான் தமிழ்நாட்டை ஆண்டும் வந்திருக்கின்றார்கள். ஆண்டு கொண்டும் இருக்கின்றார்கள்.

முத்து விழா காணும் முதுபெரும் செங்குந்தர்குல ஈரோட்டுப் பெரியார் அய்யா ஆர்.ஏ.என். முத்துசாமி அவர்களே, உங்கள் நல்லாசியை எங்களுக்கு வழங்குங்கள். பெரியாரின் உருவில் ஆர்.ஏ.என்.எம். அன்புடன் வணங்குகின்றோம்.

தங்களின் ஆசியைப் பெற்று நம் குலத் தலைவர் உத்யோகரத்னா, நெசவாளர் நேசன் ஜே.எஸ். அவர்களின் இளைய தலைமுறைகள் நமது சமூக மக்களின் வாழ்க்கையில் மறுமலர்ச்சியை உருவாக்கிட சமுதாய உணர்வோடு செயல்படுவோம் எனத் தங்களின் முத்துவிழா பொன்னாளில் உறுதி எடுத்துக் கொள்கிறோம்.

முன்னுரையில் தமிழகத்தில் தலைசிறந்த முப்பெருந்தலைவர்களின் குணநலன்களை எடுத்துக் காட்டியிருக்கின்றேன்.

முத்துவிழா நாயகரின் உணர்ச்சி பூர்வமான துணிச்சலான பேச்சு சில ஆண்டுகளுக்கு முன் நடைபெற்ற நமது சங்கச் செயற்குழு கூட்டத்தில் நிகழ்ந்தது. அது சமயம் நமது சங்கத்திற்குச் சொந்தமான சென்னை சேத்துப்பட்டு ஆரிங்டன் சாலையில் கட்டியுள்ள நமது சங்க நிறுவனர் ஆரூர் வள்ளல் சபாபதி அவர்களின்

பெயரால் அமைந்துள்ள இல்லம் முப்பது ஆண்டுகளுக்கு முன் கால்கோள் விழா எடுத்து பணி தொடரமுடியாமல் உள்ளது என்பதைக் குறிப்பிட்டார்கள். சிலர் அந்த இடத்தை விற்றுவிடலாம் என்று சொன்னார்கள்.

அய்யாவின் துணிச்சலான பேச்சு

அப்பொழுது தான் ஆர்.ஏ.என்.எம். அவர்கள் சங்கம் தொடங்கி ஐம்பதாண்டுகளுக்கு மேலாகி விட்டது. அறுபது இலட்சம் பேர் நம் இனத்தவர்கள் இருக்கின்றார்கள் என்கிறோம். ஆனால் செய்ய வேண்டிய கடமையை ஏதாவது செய்து முடித்திருக்கின்றோமா என்றால், ஒன்றுமில்லை.

நம்மவர்கள் ஒன்று சேர்ந்து ஆளுக்கு ஒரு ரூபாய் போட்டாகிலும் நம் முன்னோர்கள் விட்டுச் சென்ற பணியைச் செய்து முடிக்க வேண்டுமே தவிர அதை விற்றுவிட வேண்டுமென்ற கருத்து மிகவும் வருந்தத்தக்கது என்று உணர்வு பூர்வமாகப் பேசினார்கள். அன்று பேசிய பேச்சு தான், அவர் கொடுத்த துணிச்சல் தான், முப்பது ஆண்டுகளாகக் கட்ட முடியாத கட்டிடம் இன்று கட்டப்பட்டு கட்டுமான பணி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

அதன் விளைவு தான் நம் குலத்தலைவர் ஜே.எஸ். அவர்கள் தலைமை யிலும் சென்னைப் பல்கலைக்கழக முன்னாள் பதிவாளர் திரு. சி.கே. குமாரசாமி அவர்களின் ஒத்துழைப்பிலும் மற்றவர்களின் முயற்சி யோடும் வள்ளலார் இல்லம் சிறப்பாகக் கட்டி முடித்து இன்று கண்கவரும் வண்ணம் கட்டிடம் ஓங்கி நின்று காட்சியளிக்கின்றது. அழகான தென்னை மரங்களும், மணம் கமழும் பூஞ்சோலைகளாகவும் காட்சித் தருகின்றன. வள்ளலார் இல்லத்திற்கு வருகை தருகின்ற இளைய தம்பிமார்களுக்கு இந்த வரலாறு மனத்தில் பதிய வேண்டும். குலப் பெரியாரின் துணிச்சல் இருந்ததால் தான் வள்ளலார் இல்லம் உருவம் பெற்றது.

காமராஜர் உருவில் ஆர்.ஏ.என்.எம்.

கல்விக்கண் திறந்த பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பெருந்தன்மை உள்ளம் இருந்ததால் தான் பல கல்விச் சாலைகள் ஈரோட்டில் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றது. கல்வித்தந்தை என்றும் கல்விச் சக்கரவர்த்தி என்றும் முத்துசாமி செங்குந்தர் விளங்குகின்றார்கள் என்றால் அதற்குக் காரணம் காமராஜர் கொள்கைப் பிடிப்பே ஆகும்.

அண்ணாவின் உருவில் ஆர்.ஏ.என்.எம்.

அறிஞர் அண்ணாவைப் போல ஒரு இயக்கத்தைக் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு காத்து வளர்த்தது கிடையாது என்றாலும் அந்த அண்ணாவைப் பின்பற்றும் முத்துவிழா நாயகர் நமது சமூகக் கூட்டங்களில் பேசும் போது கிராமங்களுக்குச் சென்று உறுப்பினர்கள் சேர்த்தீர்களா? எத்தனைக் கிளைகள் உருவாக்கியிருக்கின்றீர்கள்? எத்தனை மாவட்டத்தில் சங்கங்கள் ஒழுங்காகச்

செயல்படுகிறது? இளைஞர்கள் என்ன செய்கின்றார்கள்? என்று அடிக்கடி கேட்பார்கள். இளைஞர்கள் உள்ளத்தை அண்ணா அவர்கள் உற்சாகம் ஊட்டுவது போல் முத்துவிழா நாயகர் இளைஞர்களுக்கு உற்சாகம் தந்து கொண்டு இருப்பார்கள். அண்ணாவைப் போல் சமுதாயத் தொண்டர்களை அரவணைத்துச் செல்லும் பாங்கினைப் பெற்றவர் நம் குலத்தோன்றல் ஆர்.ஏ.என்.எம். அவர்கள்.

இந்த முப்பெருந்தலைவர்கள் போல் செங்குந்தர் குல முதுபெருந்தலைவர்களில் மதிக்கத்தக்கவர் நம் ஈரோட்டு குந்தர்குலப் பெரியார் ஆர்.ஏ.என்.எம். அவர்கள்.

முப்பெருந்தலைவரின் முழுவடிவத்தில் ஆர்.ஏ.என்.எம்.

பெரியார் அவர்களைப் பார்த்திருக்கிறேன். பழகியதில்லை. பெரியார் அவர்களின் பேச்சைக் கேட்டிருக்கிறேன் அவரோடு பேசியதில்லை. பெருந்தலைவர் அவர்களின் பேச்சைக் கேட்டிருக்கிறேன் அவரோடு பேசியதில்லை. அதைப் போல பேரறிஞர் அண்ணாவைப் பார்த்திருக்கிறேன் பழகியதில்லை அவர் பேச்சைக் கேட்டிருக்கிறேன் அவரோடு பேசியதில்லை ஆனால் நம் குலப் பெரியார் பெரியவர் முத்துவிழா நாயகர் அவர்களிடம் பழகி இருக்கிறேன். பேசியிருக்கிறேன் அவர் பேச்சைக் கேட்டு, சமுதாயத்தொண்டில் என்னையே அர்ப்பணித்துக் கொண்டு பணியாற்றுகின்றேன் என் உள்ளத்தில் தந்தை பெரியார், பெருந்தலைவர் காமராஜர், பேரறிஞர் அண்ணா இவர்களின் வாயிலாக நம் குலப்பெரியார் முத்துவிழா நாயகர் பெரியவர் ஆர்.ஏ.என்.எம். அவர்கள் இன்னும் பல ஆண்டு வாழ்ந்து இந்தச் சமூகத்திற்கு வழி காட்ட வேண்டும்.

வளர்க அவர்தொண்டு.

வாழ்க ஆர்.ஏ.என்.எம்.

ஆ. ராஜவேலு,
77, வடக்கு ரதவீதி, பெண்ணாடம் (அஞ்சல்)
திட்டக்குடிவட்டம், தெ.ஆ. மாவட்டம்
அ.கு.எண். 606105 போன் 266

நாள் 12.8.94

வாழ்த்து மடல்

ஈரோடு தந்த பெரியவர் செங்குந்தர் குல முதல்வர், எங்கள் பாசமிகு தலைவர், கல்வித் தந்தை கல்விச் சக்கரவர்த்தி, முதுமையில் இளையவர் பாசமிகு பெரியவர் திருமிகு. R.A.N. முத்துசாமி முதலியார் அவர்களுக்கு 81ம் ஆண்டு விழா வரும் புரட்டாசித் திங்கள் 2ம் நாள் 18.8.94 நடைபெற உள்ள செய்தி கேட்டு பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

தம் வாழ்வில் தனக்கு அதிகக் கல்வி கிட்டாவிட்டாலும் நம் செங்குந்தர் குல மக்களுக்கும், பிற இனத்தவர்க்கும், அறிவுக்கண்ணைத் திறந்து வைக்கும் வகையில் கல்லூரியையும் தொழிற்கல்வி கூடத்தையும் துவக்கி வைத்து பெரும் தொண்டு செய்துவரும் பேராளர் பெரியார் மாவட்டச் செங்குந்தர் சங்கத் தலைவர் பொறுப்பு ஏற்றுச் சிறப்புடன் செயலாற்றும் சிறப்பாளர், ஏழை செங்குந்தர்க்குப் பல கல்விச் சலுகைகளைச் செய்திடும் சிறப்பாளர்.

81ம் ஆண்டு விழாக்காணும் திருமிகு R.A.N. முத்துசாமி முதலியார் தம்பதிகள் எல்லாம் வள்ளல் முருகப் பெருமான் திரு அருளால் எல்லா நலமும், பெற்று மேலும் பல்லாண்டு வாழ வேண்டுகிறேன். அவர்கள் திருவடிகளை வணங்குகிறேன். எங்களை வாழ்த்த வேண்டுகிறேன்.

V.V.C.R.M. கந்தசாமி, B.Sc.,
Madura Fabrics Retail Shop
298, Oppanakara Street, Coimbatore - 641 001.

நாள் 20.8.1994

கல்வித் தந்தை கல்விச் சக்கரவர்த்தி R.A.N. முத்துசாமி முதலியார் அவர்களுடைய எண்பதாண்டு நிறைவு விழா கொண்டாடப்படவுள்ள செய்தி அறிந்து மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். எஃகு மனிதராகப் பல்லோராலும் போற்றப்படும் திரு RANM அவர்கள் கல்விக்கும், சமுதாயத்திற்கும் ஆற்றிவரும் பணி மிகச் சிறப்பானது. அவரது தளராத முயற்சிக்கும், அயராத உழைப்பிற்கும் ஈரோடு கலைக்கல்லூரி ஒரு நல் உதாரணமாகும். அன்னாரது பணி சிறக்கவும், அன்னாருக்கும் சகல நலன்களும், சகல வளங்களும் நீண்ட ஆரோக்கியமான வாழ்வையும், அவரது எல்லா முயற்சிகளிலும் சிறப்பான வெற்றியையும் தந்தருளுமாறு எல்லாம் வல்ல பழனி ஞானதண்டாயுதபாணி சுவாமியைப் பிரார்த்திருக்கிறேன்.

R.M. அரங்கசாமி,

தலைவர்
கர்நாடகச் செங்குந்தர் சங்கம்,
பெங்களூர் – 51.

நாள் 17.8.94

நினைவலைகளில்

இந்திய வரலாற்றில் சுதந்திரப் போராட்டக் காலத்தில் முன்னணியில் நின்று போராடியவர்களில் ஒருவர் திரு சர்தார்படேல் அவர்களாவார்கள். அவர்களைப் போன்றே உருவ அமைப்பில், கம்பீரத்தில், செயல்திறனில் செங்குந்த குலமக்களின் மேம்பாட்டிற்காக, முன்னணியில் நின்று போராடிக் கொண்டிருப்பவர்தான் திரு R.A.N. முத்துசாமி முதலியார். இவர் தலைமுறையாகக் கீழ்பட்டு, பாழ்பட்டுக் கிடக்கும் செங்குந்தர் குலக் கொழுந்துகளை, கல்வி என்னும் குன்றின் மேல் ஏற்றி ஒளிபெறச் செய்து கொண்டுள்ளார். அதனால் தான் இவர் 'ஈரோட்டுக் கல்வித் தந்தை' எனவும் 'கல்விச் சக்கரவர்த்தி' எனவும் பெயர்பெற்று உள்ளார். ஈரோடு, பல தலைவர்களை உருவாக்கியுள்ளது. அவர்களில் முக்கியமானவர்கள், தந்தை பெரியார் ஈ.வே.ரா. அவர்கள், பத்மஸ்ரீ M.P. நாச்சிமுத்து முதலியார் அவர்கள், நெசவாளர் நேசன் J. சுத்தானந்தன் அவர்கள் இன்னும் பலர். அவர்களில் ஒருவர் திரு RAN முத்துசாமி முதலியார் அவர்களும் என்பதில் ஐயமில்லை. அன்னாரின் கம்பீரப்பார்வை, தூய கதராடை, தொண்டுள்ளம், எதிலும் முன்னணியில் இருக்க வேண்டும் என இளைஞர் போல் ஒரு வேகம், சொன்னதைச் செயலாற்ற வேண்டும் என்ற துடிப்பு, அன்புகொண்டு அனைவரையும் அரவணைத்துக் கொண்டு செல்லும் மாண்பு, பிறர் மனம் நோகாமல் தவறுகளைத் திருத்தும் பண்பு இவைபோன்று இன்னும் பல குணநலன்களைக் கொண்டும், தொண்டு ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்து வருபவர் தான் திரு R.A.N. முத்துசாமி முதலியார் ஆவார்கள். அன்னாரின் சிறப்பு இயல்புகள் வருங்காலச் செங்குந்தச் சிங்கங்களுக்கு வழிகாட்டியாக அமையும் என்பதால் ஐயம் இல்லை.

முத்து விழா காணும் செங்குந்தப் பண்பாளர் திரு RAN முத்துசாமி முதலியார் அவர்களின் 81வது ஆண்டு நிறைவுவிழா சீரும் சிறப்புமாக நிறைவு பெற எல்லாம் வல்ல இறைவன் முருகனிடம் இறைஞ்சி வேண்டுகின்றோம்.

ஆயிரம் பிறை நிலா காண விழையும் இப்பெருமகனார் எல்லா நலங்களும், வளங்களும் பெற்று, குன்றிலிட்ட விளக்காக ஒளிவிட்டு, இச்செங்குந்தர் சமுதாயம் மேன்மையுற நல்லாசி வழங்க கோருகின்றோம்.

இந்நன்னாளில் கருநாடகச் செங்குந்தர் சங்கமும், செங்குந்தர் சமுதாய மக்களும் கலந்து கொண்டு இருகரம்கூப்பி நல்லாசி பெற விழைகின்றோம்.

செங்குந்தம் வெல்க.

செ. வெங்கடசாமி
Senniappa Mills, 18, Cholakadai Street,
Dharapuram - 638 656, Periyar District.

நாள் 20.8.94

ஆர்.ஏ.என்.எம். பணி மறக்க முடியாத பணி

கல்வித் தந்தை உயர்திரு ஆர்.ஏ.என். முத்துசாமி முதலியார் அவர்களின் 81ம் ஆண்டு நிறைவு விழா 18.9.94ம் நாள் ஞாயிற்றுக்கிழமை நடைபெறுவது குறித்து மகிழ்ச்சி அடைகின்றேன். அவர்கள் கல்விக்காகவும் நம் செங்குந்தர் சமுதாய வளர்ச்சிக்கும் செய்த தொண்டை நாம் என்றும் மறக்க முடியாத ஒன்றாகும். அதிகமாகப் படிப்பு படிக்காவிட்டால் தமது அயராத உழைப்பாலும், அனுபவத்தினாலும் தமது வாழ்க்கையில் சிறந்து விளங்குகிறார் என்பது 'உள்ளங்கை நெல்லிக்கனி' போன்று விளங்குகிறது. நமது பெரியார் மாவட்டத்தில் செங்குந்தர் சங்கத்தின் மாவட்டத் தலைவராக இருந்து கொண்டு கிராமம், கிராமமாகச் சென்று செங்குந்தர் கிளைச் சங்கங்களை உருவாக்கியது நமது சமுதாய வளர்ச்சிக்கு ஒரு பெரிய சாதனை ஆகும். சென்னை, ஈரோடு, குடியாத்தம் முதலிய நகரங்களில் நடைபெற்ற செங்குந்தர் மகாநாடுகளில் சிறப்பாகப் பங்கு கொண்டு தமது பணியைச் செவ்வனே செய்துள்ளார்.

ஐயா, அவர்களுக்கு எல்லாம் வல்ல இறை அருள் நீண்ட ஆயுளையும், எல்லா வளங்களையும் இன்னும் பல சேவைகளைச் செய்யவும் அருள வேண்டும் என்று வேண்டுகிறேன்.

பா.அ. சென்னியப்பன்,
முன்னாள் பேரூராட்சி மன்றத் தலைவர்,
கவுந்தப்பாடி.

நாள் 18.8.94

ஈரோடு கல்வித்தந்தை உயர்திரு R.A.N. முத்துசாமி முதலியார் அவர்களுக்கு 81 ஆண்டு நிறைவு பெற்று, அந்த நிறைவு விழா வருகின்ற புரட்டாசித் திங்கள் 2ம் நாள் 18.9.94 ஞாயிற்றுக்கிழமை ஈரோடு ராணா திருமண மண்டபத்தில் நடைபெறுவது அறிந்து மகிழ்ச்சி. அவர் தலைவராக இருந்து நடத்தும் ஈரோடு கலைக்கல்லூரி மற்றும் ஈரோடு தொழில் நுட்பக்கல்லூரி மூலமாக ஆற்றும் கல்விப்பணி மிகச்சிறந்த பணி. கல்லூரி நிர்வாகம் தலைசிறந்த நிர்வாகம். அவர் நடத்தும் எளிமையான வாழ்க்கை போற்றதலுக்குரியது. இயற்கையாகவே வள்ளலார் வழியில் வாழும் ஐயா அவர்கள் நீண்ட நாள்கள் நலமோடு வாழ்ந்து நமக்கு உதவிகரமாக இருக்கவேண்டும் என்று அன்போடு வாழ்த்துகிறேன்.

செய. கோவிந்தராசலு, பி.இ.,
முதல்வர்,
நாகப்பட்டினம் – 611 001.

நாள் 18.8.93

பொதுநலமே தம் நலம்

ஈரோடு கல்வித்தந்தை, கல்விச் சக்கரவர்த்தி உயர்திரு. R.A.N. முத்துசாமி முதலியார் அவர்களுக்கு 81–ஆம் ஆண்டு நிறைவு விழா 18.9.94 அன்று நடைபெற உள்ளது என்று அறிந்து மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

அன்னாரின் கல்வித் தொண்டு போற்றுதற்கு உரியதாகும். அவர்களை மனத்தில் கொண்டு அவர் வழி நடப்பதற்கு ஏனையோர்க்கு வழிகாட்டியாக விளங்குகிறார்கள். அவர்களுடன் பழக எனக்குக் கிடைத்த வாய்ப்பினைத் தெய்வம் அளித்த பரிசாகக் கருதுகிறேன். அவர்களுக்கு எண்பது ஆண்டு ஆகப் போகிறது என்பதை அறிய மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது. அந்த அளவுக்கு ஆண்டவன் அவர்களுக்கு மனோதிடமும், உடல் நலமும் அளித்து உள்ளான்.

பொது நலமே தனது நலமாக நினைத்து செயல்படுவதுடன், தனக்குச் சரி என்று பட்டால் அந்த இலக்கை அடைய மிகுந்த மன ஊக்கத்துடனும், திடத்திடனும் மற்றவர்களை வழிநடத்தும் திறனை நான் வியந்து பாராட்டுகிறேன். மிகவும் சிக்கனமாகவும், மதி நுட்பத்துடனும் செயல்படும் அவர்களது அணுகுமுறை என்னை மிகவும் பல தடவை பிரமிப்பில் ஆழ்த்தியதுண்டு.

அன்னை ஆதிபராசக்தியின் அருளால் அவர் தம் தொண்டு மேலும் சிறக்கவும் அன்னாருக்கு நீண்ட ஆயுளும், நிறைந்த உடல் நலமும் பெற வேண்டுகிறேன்.

புலவர் அ. சிவசுப்பிரமணியன், எம்.ஏ.,பி.எட்.,
பள்ளித்துணை ஆய்வாளர்,
திருமகள் இல்லம்,
150, முதலியார் வீதி, பெருந்துறை.

நாள் 23.8.94

"மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையையும் மேற்கொள்ளார் – செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்பும் கொள்ளார்
கருமமே கண்ணா யினார்"

பொதுத்தொண்டில் ஈடுபட்டுள்ளவர்கள் உடல் துன்பம், பசி, தூக்கம், பிறரால் வரும் பழி ஆகியவற்றையெல்லாம் பொருட்படுத்தாது, தம் தொண்டையே பெரிதெனக் கொண்டு பணியாற்றுவர். அதற்கு இலக்கணமாகத் திகழ்பவர் நமது பெரியவர், ' கல்வித்தந்தை' 'கல்விச் சக்கரவர்த்தி' 'செங்குந்தர் சமுதாயத்திலகம்' திருநிறை R.A.N. முத்துசாமி முதலியார் அவர்களாவார்.

வயதிலே மிகப்பெரியவர், உற்காசமிக்க பேச்சால், ஓயாத உழைப்பால், சமுதாயத் தொண்டால் அவர் ஓர் இளைஞர்; மிக இளைஞர்.

இவரை நான் நினைக்குந்தோறும் எனது உள்ளத்தே இன்னொருவர் தோன்றுவார். இவரது கல்வித் தொண்டும், எளிய, தூய கதராடை அணிந்து உலாவருகின்ற தன்மையும், வெள்ளை மனத்துடன் பேசுகின்ற கிராமியப் பேச்சும், அனைவர்க்கும் உதவுகின்ற மனப்பாங்கும் கொண்டுள்ள இவர் - நாட்டின் புகழைத் தன்னதாக ஆக்கிக் கொண்ட அந்த உத்தமரின் மறு பிறவியோ இவர் என ஆராய்ச்சி செய்யவும் தோன்றுகின்றது.

ஆம் – இவரைப் பார்த்தால் தமிழகத்துக்குக் கல்விக்கண் தந்தவர் எனப் போற்றப்படும் தன்னலமற்ற அப்பெருமகனாரே கருமவீரர் காமராசரே என் உள்ளத்து உதிப்பவர்.

இல்லையில்லை. இன்னொருவரும் அப்போது என் மனத்தே தோன்றுவார். ஆம். நமது செங்குந்தர் சமுதாயத்திலே தோன்றி எளிய குடும்பத்தில் பிறந்திருந்தாலும் தனது உழைப்பால், நேர்மையால், மிகப்பெரும் செல்வராய் உயர்ந்து, தன்னலமற்ற பண்புடன் கல்விப் பணியில் தலைசிறந்து விளங்கிய காஞ்சி வள்ளல் பச்சையப்ப முதலியாரும் என் உள்ளத்தே தோன்றுவார்.

கல்விக்கண் கொடுத்த காமராசரையும், காஞ்சி வள்ளல் பச்சையப்ப முதலியாரையும் நினைவு கூறும் தன்மைகளைத் தன்னிடத்தே பெற்ற அவர் யார்? அவரே பெரியார் மாவட்டம் பெற்றுத் தந்த கல்வித்தந்தை கல்விச் சக்கரவர்த்தி செங்குந்தர் சமுதாய ஒளி ஞாயிறு. செங்குந்தர் சமுதாய உயர்வினையே தனது இதயத்துடிப்பாக்கிக் கொண்டவர். செங்குந்தர் சமுதாய உயர்வுக்கென அல்லும் பகலும் அயராது பாடுபடுகின்றவர். செங்குந்தர் மகாசனச் சங்கத்தின் பெரியார்

மாவட்டத் தலைவர் நமது குலப் பெரியவர் R.A.N. முத்துசாமி முதலியார் அவர்களால் இன்றைய சாக்கடைச் சமுதாயத்தில் பொதுநலம் எனும் முகமூடியை அணிந்துகொண்டும், ஆயிரமாயிரம் கோடிகளை அள்ளிக் குவித்துக் கொண்டும், நேர்மையானவர்களை வளரவொட்டாமல் கிள்ளியெறிந்து கொண்டும், உலகின் பாவச் செயல்கள் அனைத்தையும் மொத்தக் குத்தகைக்கு எடுத்துக் கொண்டும், பதவியையும், சுகத்தையும் இரு கண்களெனப் பாதுகாத்துக் கொண்டும், ஆனால் சமுதாய நலங்காண வந்த புத்துலகச் சிற்பி எனப் பொய்யுரை பேசியும், ஏமாற்றியும் வாழுகின்ற உலுத்துவர்கள் மத்தியிலே

1. பொதுநலத்துக்குத் தன் செல்வத்தினை அள்ளி வழங்கியும்
2. பொது நலத்திலும், சமுதாயத்திலும் நேர்மையை வாழ வைத்தும்
3. பதவி – சுகம் என்பனவற்றைச் சற்றும் எதிர்பாராமலும்
4. பிறர் நலம் பேணும் பெருந்தகையாளராக விளங்கியும்

உண்மையான சமுதாயக் காவலராக விளங்குபவர் நமது பெரியவர்.

இன்றுள்ள சமுதாயத் தலைவர்கள் எனக்கூறிக் கொள்ளும் எத்தனையோ பேர் தமது சமுதாய மக்களைத் தூண்டி விட்டுக் கொண்டும் – அவர்களது உணர்ச்சிகளை எரிமலையாக்கிப் பொதுச் சொத்துக்களைச் சூறையாட வைத்துக் கொண்டும், அதனால் ஆதாயமும், புகழும் பெறுவதையே குறியாகக் கொண்டும், தத்தம் சமுதாய மக்களை ஆட்டி வைக்கின்ற சூத்திரதாரிகளாய் – அவர்களை அடிமைப்படுத்தி வைத்திருக்கும் சர்வாதிகாரிகளாய் விளங்குகின்ற இக்காலத்தில் அகிம்சை, பொதுநலம், தம் சமுதாயத்தினர்க்கு மட்டுமல்லாது அனைத்துச் சமுதாயத்தினர்க்கும், பாதுகாவலனாய் விளங்குகின்ற உயர்ந்த மனப்பான்மை. நாட்டின் நலன் நாடும் தியாக மனம் ஆகிய இத்தனை மாணிக்கங்களையும், தன் மகுடத்தே பதித்து அணிந்து கொண்டிருக்கும் உயர்வாளர் யார்?

ஆம். அந்த உயர்வாளர் தான் நமது பெரியவர் – இக்கட்டுரை நாயகர் R.A.N. முத்துசாமி முதலியார் அவர்கள்.

மேடையில் ஏறிநின்று அலங்காரப் பேச்சு முழங்காதவர். ஆனால், அவரது எளிய பேச்சில், பாமரப் பேச்சில் வெளிப்படும் உணர்வு அலைகள் – அவர்தம் உள்ளத்தினின்று முகிழ்த்து மலரும் சொற்கள். அவர் நம்மிடத்தே கொண்டுள்ள பாச உணர்வைப் படம் பிடித்துக் காட்டுவனவாகும். செங்குந்தர் சமுதாய உயர்வுக்குப் பாடுபடும் அவர்தம் மூச்சின் வேகத்தைக் கணக்கிட்டுரைக்கக் கருவியும் உளதோ?

அவர் தமது கல்வி நிலையங்கள் மீது கொண்டுள்ள பற்றும், ஆர்வமும் அவற்றின் உயர்வினையே எண்ணி இரவும், பகலும் முயலும் முயற்சிகளும் எழுதிடின் எழுத்தால் அடங்குமோ?

சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் பயின்றவர்கள் 'பச்சையப்பா மாணவர்' எனத் தம்மைக் கூறிக் கொள்வதில் பெருமை கொள்வர். எத்தனையோ அறிஞர் பெருமக்களை உருவாக்கித் தந்த பெருமை அக்கல்லூரிக்கு உண்டு. அங்ஙனமே நமது பெரியவரால் நடத்தப்பெறும் கல்வி நிலையங்களில் பயின்ற,

பயிலும் அனைவரும் தாம் அங்கு பயிலுவதைப் பெருமையாகப் பேசிக் கொள்வதை நாம் அறிவோம். தமது கல்வி நிலையங்களில் சேர வருபவரை இழுத்தடித்துத் துன்புறுத்தும் இழிசெயல் இவரிடத்தே இல்லை.

பெரியார் மாவட்டத்திலுள்ள நம் செங்குந்த இனத்தவர் வாழும் எல்லா ஊர்களிலும், செங்குந்தர் மகாசன சங்கக்கிளைத் தோற்றுவிக்கப்படல் வேண்டும் என்பதில் பெரியவர் அவர்கள் மிகுதியான அக்கறை கொண்டிருந்தார் என்பதை அனைவரும் அறிவர். காலை 7 மணிக்குப் புறப்பட்டு இரவு 12 மணி வரை அலுக்காமல், சலிக்காமல், சோர்வெய்தாமல் எண்ணற்ற ஊர்களுக்குப் பயணம் செய்து கிளைச் சங்கங்கள் அமைத்து முன்னேற்றம் காணச் செய்தவர்.

பெரியார் மாவட்டச் செங்குந்தர் சமுதாய மாநாடு சிறப்புற நடத்தி வெற்றி கண்டவர்.

மாநில மாநாடுகள் ஆங்காங்கு நடைபெறவும், செங்குந்தர் அறக்கட்டளையால் நடைபெறும் நற்செயல்களுக்கு உறுதுணையாகவும் இருந்து வருகிறார்.

சங்கக் காலத்தில் தமிழ்மன்னன் ஒருவனுக்கு ஓர் ஐயம் பிறந்தது. இவ்வுலகத்தில் ஓயாத போர், கடும்பஞ்சம், நிலநடுக்கம், புயல், கடல் கொந்தளிப்பு, பேய்மழை, பெருவெள்ளம் ஆகிய அனைத்தும் அவ்வப்போது தோன்றி அழிவினைச் செய்தாலும் உலகம் இன்னும் அழியாமல் நிலைத்திருக்கின்றதே. இதற்குக் காரணம் ஏதேனும் இருக்கவேண்டும் என ஆராய்ந்தான். அவ்வரசனுக்கு ஓர் உண்மை புலப்பட்டது. தமக்கென வாழாமல் பிறர்க்கென வாழும் சான்றோர்கள் இவ்வுலகில் இருப்பதால்தான் இவ்வுலகம் அழியாமல் இன்னும் நிலைத்து நிற்கின்றது என்னும் உண்மையை அறிந்தான், உலகுக்கு உணர்த்தினான். உலகம் நிலை பெற்றிருக்கக் காரணமாய் விளங்கும் சான்றோர்களுள் நமது பெரியவரும் ஒருவரன்றோ?

தனித்தமிழின் தந்தை, மும்மொழிக் கொண்டல் என்றெல்லாம் போற்றப்படும் மறைமலை அடிகள் மக்கள் நூறாண்டுகட்கு மேலும் வாழ இயலும் என்பதைத் தாம் எழுதிய நூலில் அறுதியிட்டுரைக்கின்றார்.

நமது பெரியவர் மறைமலையடிகள் கூற்றுப்படி நெடுங்காலம் வாழ வல்ல நல்ல இதயங்கொண்டவர்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகங் கண்ட செட்டிநாட்டரசர் போன்று நமது பெரியவர் "ஈரோட்டுப் பல்கலைக்கழகம்" காண வல்லவர் என்பதில் நான் மிக உறுதியுடனும், நம்பிக்கையுடனும் உள்ளேன். இறைவன் அருளால், செங்குந்த மக்களின் பல்கோடி வாழ்த்துக்களால் நமது பெரியவர் நீடிய ஆயுளும், நிலைத்த புகழும் கொண்டு நிறைவாழ்வு வாழ வேண்டுமென முத்தமிழால் வைதாரையும் வாழவைக்கும் முருகப் பெருமானை இறைஞ்சுகின்றோம்.

வாழ்க நம் பெரியவர்,
வளர்க அவர்தம் தொண்டு.

ஆ. ஜெகந்நாதன்,
தலைமை ஆசிரியர் ஆரம்பப்பள்ளி.
அருள்நெறித் திருப்பணி மன்றம், ஈரோடு – 638 003.

நாள் 15.8.94

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேன்.

ஈரோட்டின் கல்வித் தந்தை

கரும்பைப் போல் இனிய பேச்சும், கடலைப் போல் பரந்த உள்ளமும், எஃகைப்போல் நெஞ்சில் உறுதியும் நாணல் போல் சான்றோருக்குப் பணியும் பண்பையும் கொண்ட நம் கல்விச் சக்கரவர்த்தி ஜெகமதினில் செங்குந்தர் இனம் செழிக்க எண்ணிய எண்ணியாங்கு எய்தும் திண்ணியராக இறைப்பணியிலும் கல்விப்பணியிலும் அல்லும் பகலும் அயராது உழைத்து வரும் இவரைப் பெற இவர் தந்தையர் என்ன தவம் செய்தாரோ என்று எல்லோரும் புகழ வாழும் இவருக்கு 81ம் ஆண்டு விழா எடுத்திருக்கும் விழாக் குழுவினருக்கு கனிவன்பான என் வணக்கம்.

ஈரோடு இராக்கியாபாளையத்து நாகப்ப முதலியாருக்கும் மசிரி அம்மையாருக்கும் 1913ம் ஆண்டில் மகனாகப் பிறந்து அவ்வூர் திண்ணைப் பள்ளியில் மூன்றாம் வகுப்பிற்குமேல் "படிக்காத மேதை" சான்றோன் எனக்கேட்டு தன் தாயார் ஈன்ற பொழுதிலும் பெரிதுவக்கும் வகையில் நடந்து கொண்டார். இவருடைய அன்பு அடக்கம் அறிவு ஒழுக்கம் ஊக்கமிகு உழைப்பு உயர்புகழ் ஆகியவற்றைக் கேட்ட பவானி மேட்டுப்பாளையம் செங்கோட முதலியாரும் பழனியம்மாளும் தங்களின் அருந்தவப் புதல்வி தெய்வத் திருமகள் ரங்காயம்மாளைத் திருமணம் செய்து கொடுக்க முன்வந்தனர். இருபத்தொன்றாம் வயதில் அத்தெய்வத் திருமகளைக் கைபிடித்து இல்லறம் என்னும் நல்லறத்தை இனிதே மேற்கொண்டார்.

விழாக் கதாநாயகன் கல்வித்தந்தை அன்றும் இன்றும் என்றும் செம்மை நெறியில் சிறிதும் தளராமல் எறும்பைப்போல் சுறுசுறுப்புடன் அக்கறையாய் ஆர்வத்துடன் அயராமல் உழவுத் தொழிலையும் நெசவுத் தொழிலையும் இருகண்ணெனப் போற்றிப் பாடுபட்டார். சமன்செய்து சீர் தூக்கும் கோல் போல் அமைந்து, குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றுள் மிகை நாடி மிக்க கொண்டு, செய்வினையின் மூலமும் விளைவும் அறிந்து, ஆகுங்காலத்து ஆவதும் போகுங்காலத்து போவதும் தெரிந்து ஆள்வினை ஆற்றினார். இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன்கண் விட்டார். அரும்பெரும் செல்வமும் செல்வாக்கும் இவர் இருக்கும் இடம் தேடிச் சென்று சரண் அடைந்தது.

விழாக் கதாநாயகி இல்லத்தரசி சீரங்காயம்மாள் இல்வாழ்விற்கேற்ற பண்புடைய நங்கை ஆகித் தன்னையும் காத்து தன் கணவரையும் காத்து பிறந்த

வீட்டுப் பெருமையையும், புகுந்தவீட்டுப் புகழையும் உறுதி தளராமல் காத்த, அருணாசலம், சுந்தரம் என்றிரு நன்மக்களைப் பெற்று நல்லதோர் இல்வாழ்க்கைத் திருமகளாகத் திகழ்கின்றார்கள்.

தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு ஐவகை இடத்தும் அறநெறி தவறாமல் போற்றி வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும் என்பதறிந்து இனிதே இல்லறம் என்னும் நல்லறத்தை நடத்திய கல்வித் தந்தை கதாநாயகனும் தெய்வத்திருமகள் கதாநாயகியும் பெற்ற செல்வத்தின் பெரும்பயன் ஈதல், ஈந்து இசைபடவாழ்தல் வேண்டும் என்பதையும் செய்யக்கூடிய வகையில் அறச் செயல்களை இடைவிடாது போற்றிச் செய்ய வேண்டும் என்பதையும் நன்குணர்ந்து இருள்சேர் இருவினையும் சேரா இறைவன் அடிசார்ந்து சீரிய இல்வாழ்க்கை வாழ்ந்தார்கள்.

சமுதாயத்தில் நல்லன்பையும் நன்மதிப்பையும் பெற்ற இவரைத் தலைவராகக் கொண்டு இவரது சொல்லுக்குச் செயலாற்றும் செயல்வீரர்கள் இவரைத் தேடிச் சென்றடைந்தனர். இவரால் தோற்றுவிக்கப்பெற்ற பொது இயக்கங்கள் தோன்றிய நாள் முதலாக இன்று வரை இவரையே தலைவராகக் கொண்டு இயங்கி வருவது அவருடைய செயலாற்றல் திறமையையும் நேர்மையையும் காட்டுகிறது. 1. கவுந்தப்பாடி சுதேசி வர்த்தகர் ஜவுளி சங்கம், 2. ஈரோடு முதலியார் கலைக்கல்லூரி நிறுவனம், 3. பெரியார் மாவட்டச் செங்குந்தர் மகாசன சங்கம், 4. ஈரோடு செங்குந்தர் முன்னேற்ற சங்கம், 5. கவுந்தப்பாடி காமாட்சியம்மன் கோயில் நிறுவனம் மற்றும் பல உள்ளன. மேலும் ஈரோடு கைத்தறி நிதி உதவிக் குழுவில் மூன்று ஆண்டுகள் இயக்குநராகப் பணியாற்றினார். ஈரோடு கைத்தறி ஜவுளி வர்த்தகர் சங்கத்துணைத் தலைவராக ஒன்பது ஆண்டுகள் சிறப்பாகச் செயலாற்றி உள்ளார். குருமகா சன்னிதானம் தவத்திரு டாக்டர் குன்றக்குடி அடிகளார் அவர்களைத் தலைவராகக் கொண்டு இயங்கிவரும் ஈரோடு அருள்நெறித் திருப்பணிமன்றப் பொதுச் செயலாளராக முப்பது ஆண்டுகள் அரும்பெரும் பணிகள் ஆற்றி வருகிறார். அடிகளாரிடம் பாராட்டும் பரிசும் பெற்றுள்ளார்.

பாரதியார் பல்கலைக் கழக முதல் துணைவேந்தர் டாகடர் R. சுப்பையன் அவர்களுக்கும், பாரதிதாசன் பல்கலைக்கழக முதல் துணை வேந்தர் பேராசிரியர் P.S. மணிசுந்தரம் அவர்களுக்கும் ஈரோடு அருள்நெறித் திருப்பணி மன்றத்தலைவர் குருமகா சன்னிதானம் தவத்திரு டாக்டர் குன்றக்குடி அடிகளார் அவர்களுக்கும், சென்னைப் பல்கலைக்கழகத் துணைப் பதிவாளர் C.K.குமாரசாமி அவர்களுக்கும், மற்றும் பல் துறையில் பலருக்கும் பல பாராட்டு விழாக்களை நடத்தி பல பாராட்டுகளையும் பரிசுகளையும் பெற்றுள்ளார்.

அரித்துவார், ரிசிகேசம், கேதாரிநாத் பத்திரிநாத், காசி, கங்கோத்ரி, யமுனோத்ரி போன்ற பல புண்ணிய தலங்களுக்குப் புனித யாத்திரை செய்து பெரியோர்களின் ஆசிகளைப் பெற்று எந்நாளும் கல்விப் பணியாற்றும் கல்வித் தந்தையையும் அவர்தம் குடும்பத்தாரும், பல்லாண்டு பல்லாண்டு பலகோடி நூறாண்டு வாழ்க! வாழ்க!! வாழ்க!!! என வாழ்த்தி வணங்குகிறேன்.

T. பழனியப்பன்,
அருள்நெறித் திருக்கூட்டம்
முந்நாள் செயலாளர் ஈரோடு.

நாள் 15.8.94

உயர்திரு R.A.N. முத்துசாமி முதலியார் அவர்களை ஈரோடு நகரம் நன்கு அறியும். கல்வி வளர்ச்சிக்கும் செங்குந்த இனமக்களின் நல்வாழ்விக்கும் தன்னுடைய 81வது வயதிலும் அயராது சேவை செய்து வருவது எல்லோரும் அறிந்த ஒன்று. தனது 5வது வயதில் திண்ணைப் பள்ளிக் கூடத்தில் மணலில் எழுதிப் படித்ததை இப்பொழுதும் நினைவு கூறுவார்கள். தனக்குக் கல்வி அறிவு அதிகமில்லாவிடினும் வருங்காலத்தில் மாணவர்கள் நன்கு படித்துப் பட்டம் பெற்று உயர்பதவி அடைந்து மேன்மையடைய வேண்டும் என்ற பேராவாவினால் ஈரோடு ரங்கம்பாளையத்திற்கு அருகில் முதலியார் கல்வி நிறுவனத்தின் தலைவராகவும், ஈரோடு கலைக்கல்லூரித் தலைவராகவும், பொறுப்பேற்று அந்நிறுவனங்களை நல்ல முறையில் நடத்தி வருகிறார்கள். 15 வருடங்களுக்கு முன்பு ஈரோடு கலைக்கல்லூரியைப் பார்த்தவர்கள் இப்பொழுது சென்று பார்ப்பார்களானால் அப்படியே பிரமித்துப் போய் நிற்பார்கள். அந்த அளவிற்கு மாணவர்படிக்கும் ஹால், மாணவர்கள் தங்கும் இடம், மாணவர்கள் உணவு கொள்ளும் பகுதி, சொற்பொழிவு மண்டபம் கட்டப்பட்டிருப்பதைக் காணலாம். (இவ்விடம் இவருக்கு உறுதுணையாக, செயலாளராக இருந்து செயல்படுபவர் திரு ராணா லட்சுமணன் ஆவார்கள்). இது தவிர மாணவர்கள் தொழிலிலும் முன்னேற்றம் அடைய வேண்டுமெனப் பெரு நோக்கத்தோடு கவுந்தப்பாடி பாலிடெக்னிக் I.T.I. கவுந்தப்பாடி என்ற நிறுவனங்களில் தலைவர் பொறுப்பேற்றுத் திறமையுடன் நடத்தி வருகிறார். தவிர, ஈரோடு அருள்நெறிக் கூட்டத்தில் துணைத் தலைவராகவும், வைராபாளையம் அருள்நெறித் திருமன்றம் மேல்நிலைப்பள்ளி நிறுவனத்தின் செயலாளராகவும் பொறுப்பேற்று கல்வியின் மேம்பாட்டிற்குச் செயல்பட்டு வருகிறார். இதுதவிர செங்குந்தர் சங்கத்தின் நன்மைக்கும், வளர்ச்சிக்கும், பெரியார் மாவட்டச் செங்குந்த மகாஜன சங்கத் தலைவராகவும், சென்னை தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் செயற்குழு உறுப்பினராகவும் பணியாற்றி வருகிறார். குழந்தைச்செட்டிக் கூட்டத்தின் தலைவராக இருந்து தன்னுடைய குல தெய்வமாகிய காமாட்சியம்மனுக்குக் கவுந்தப்பாடி அருகில் ஆலயம் எடுத்து தினசரி பூஜைக்கு வேண்டிய ஏற்பாடு களையும் முறையாகச் செய்து வருவதுடன் அந்த ஆலயத்திற்கு அருகில் ஒரு திருமணமண்டபம் ஏற்படுத்தவேண்டும் என்ற நோக்கத்தோடு இடம் ஏற்பாடு செய்து மண்டபம் கட்டுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்கள். இந்த முறையில் கல்வி மேம்பாட்டிற்கும் செங்குந்தர் சமூக வளர்ச்சிக்கும், தொழில் வளர்ச்சிக்கும் R.A.N.M. அவர்கள் ஓய்வின்றிச் செயலாற்றி வருவது யாவரும் அறிந்த உண்மை. ஆன்மீகத்துறையிலும் தவத்திரு குன்றக்குடி அடிகளாரிடம் பேரன்பு பூண்டு ஒழுகி வருபவர். சிறு வயதில் துணி வணிகத்தில் ஈடுபட்ட பிறகு நூல் வணிகராகத் திகழ்ந்து, பின் சிட்பண்ட் பேங்கர் என்ற உயர்ந்த நிலையிலும், தனது 81வது வயதிலும், கல்வி தொழில் நிறுவனங்கள் வளர்ச்சிக்கும், செங்குந்தர் சமூக வளர்ச்சிக்கும் அயராது உழைத்து வரும் R.A.N. முத்துசாமி முதலியார் அவர்களுக்கும் அன்னார் குடும்பத்தினருக்கும் எல்லாம் வல்ல இறைவன் நீடிய ஆயுளையும், நோயற்ற வாழ்வையும் குறைவற்ற செல்வத்தைக் கொடுத்து அவர் செய்து வரும் சீரிய தொண்டுகளை மேன்மேலும் சிறப்புறச் செய்து வர அருள்பாலிக்க வேண்டுமென எல்லாம்வல்ல இறைவன் திருவடிகளை வணங்குகிறேன்.

M.P. தங்கராஜ்
விரிவுரையாளர் கணிதத்துறை,
ஈரோடு தொழில் நுட்பக்கல்லூரி
கவுந்தப்பாடி

நாள் 16.8.94

கல்வி விளக்கு

அறுபது வயது கடந்தவர்கள் பொது வாழ்க்கையில் ஈடுபடவேண்டு எனக்கூறி அதன்படி நடப்பவர் கல்வித்தந்தை அவர்கள்.

"ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை உடைத்து"

என்ற குறள் நெறிப்படி, தன்னெறியால், மற்றவரையும் அறவழி ஈடுபட செய்து, வல்லமை உடையவர். அகனமர்ந்து செய்யும் செயலால், இவர் வச திருமகளும், கலைமகளும் வாசம். பணிபுரிபவர் முதல் நிலையாயினு கடைநிலையாயினும் அனைவரும் சமம் என அறிவுறுத்துபவர். அதன்படியே சிங்கப்பூரில் நடந்த உலகத்தமிழ் மாநாடு கண்டு களித்து, வந்தபின் அனைவர்க்கும் பேனாவும், பின் ஒரு சமயம் ரூ. 500 தந்தவர். ஈரோடு கலை கல்லூரியும், தொழில்நுட்பக் கல்லூரியும் இவருடைய இரு வளர்ப்பு குழந்தைகள் இவருடைய அயராத சீரிய பணியில்கலைக் கல்லூரி இன்று பல்கலைக் கழ அந்தஸ்து பெறும் நிலையில், அதிக கலை, அறிவியல் பட்டங்கள் போதிக்கின்றன பாலிடெக்னிக்கும் சில ஆண்டுகளில் பொறியியல் கல்லூரி ஆகும். ஐயா அவர்களின் முயற்சியால் பல இடங்கள், பல இலாக்காக்கள், நேரம் கால பார்க்காமல், மீண்டும், மீண்டும் பயணம் செய்வதைக் கண்ணுற்ற, இவரது அலுவல் தொடர்புடைய அதிகாரிகள் இந்த வயதிலும் இவருடைய தளராத முயற்சி கண்டு, இவர் வேண்டுவன, கேட்பன உடனுக்குடன் செயலாற்றித் தருவர். இதுவே கல்வித் தந்தைக்குக் கிடைக்கும் வெற்றியின் ரகசியம்.

நிலவுலகின் எல்லையில் நீண்ட நெடுங்காலம் நிற்கவல்ல, கல்வி விளக்கேற்றுகிற இவர் கிடைத்தற்கரிய மாமனிதர். ஐயா, உங்களின் ஆசீர்வாதத்தால், புடமிட்டுச் சுடச்சுட ஒளிரும் பொன் போன்ற நின் அனுபவ முத்திரைகளைக் கற்று, உங்கள் கல்விப் பணியைச் சிறப்பிப்போம். வாழ்க வாழ்க. பல நூறாண்டு உம் புகழ்!

கல்யாண் குமார்
ரேவதிப்பிரியன்
திறன் உடனாள் (எலக்ட்ரிகல் பிரிவு)
ஈரோடு தொழிற்பயிற்சி கல்லூரி,
கவுந்தப்பாடி.

நாள் 26.8.94

ஈரோடு காமராஜர் ஆர்.ஏ.என்.எம்.

பதவியால் சிலர் புகழ் பெறுவார்கள். ஆனால், சிலரால் தான் அவர்கள் வகிக்கும் பதவி புகழ் பெறும். அந்த வரிசையில் எங்களது கல்லூரி நிறுவனத் தலைவர் திரு.ஆர்.ஏ.என். முத்துசாமி முதலியார் அவர்கள் இதுவரை வகித்த எந்த பதிவியுமே புகழின் உச்சியில்தான் அரசாட்சி செலுத்திக் கொண்டிருக்கிறது.

படித்தவர்களே தடுமாறும் இந்தக்காலத்தில் "படிக்காத மேதை" காமராஜரைப் போல, மூன்றாம் வகுப்பு வரை மட்டுமே படித்த இவர் இன்று பெரியார் பிறந்த மண்ணில் பல கல்லூரிகள், தொழிற்கூடங்கள், பாடசாலைகள் நிறுவி, ஆயிரக்கணக்கானவர்களுக்கு ஆண்டுதோறும் கல்விக் கண்ணைத் திறந்து விடுகிறார். தூய வெள்ளை உடையுடன், எப்போதுமே தூய்மையை விரும்பும் இவர் ஆடம்பரத்தையோ, புகழையோ விரும்பாதவர். எளிமை, இனிமை, அதே சமயம் கண்டிப்பு என்ற தாரக மந்திரத்தின் படி உண்மை, உழைப்பு, உயர்வு என்று இந்த எண்பது வயதிலும் இவர் சாதித்துள்ளதைப் பட்டியலிட்டால் நீளும். நகருக்குப் பெருமை சேர்க்கும். கலைக்கல்லூரி, நாட்டில் தொழிற்புரட்சி ஏற்படுத்திட தொழிற்கல்லூரி, ஏழைகள் பயன்பெற ஐ.டி.ஐ. இளம் வயதிலேயே ஒழுக்க நெறியுடன் வளர, கலைமகள் கல்வி நிலையம், மற்றும் அருள்நெறி மேல்நிலைப்பள்ளி என்று எதைத் தொட்டாலும், பொன்னாக்கும் ராசிக்குச் சொந்தக்காரர் இந்த ராக்கியா பாளையத்து 'எண்பது வயது இளம்புயல்'.

அதிகாலையில் எழுந்ததும் குளித்து, பூஜை, பின்னர் உடனே கிளம்பி தான் நிர்வகிக்கும், கல்லூரிகளுக்கு ஒரு முறை விஜயம். பின்னர் அவரது அலுவலகத்திற்கு வந்து ஆபீஸ் பணிகள், தவிர பஞ்சாயத்துத் தீர்க்கும் பொதுப் பிரச்சனைகள், தான் அங்கம் வகிக்கும் செங்குந்தர் குல மேம்பாட்டிற்கு ஆலோசனைகள், பின்னர் மதிய உணவிற்குப் பின் ஒரு மணி நேரம் ஓய்வு, மீண்டும் கோவில் போன்ற பக்தி பணிகளுக்காக, நிதி திரட்டுதல், இரவு பத்தோ, பதினொன்றோ வீட்டிற்கு வந்து அருந்தி விட்டு உறங்குதல் – இது தான் இவரது அன்றாட பணிகள். குறைந்தது ஒரு நாளைக்கு பதினெட்டு மணி நேரமாவது உழைப்பு, உழைப்பு, உழைப்பு இல்லாவிட்டால் 'முதலியார் கல்வி நிறுவனம்' என்ற அடையாறு ஆலமரத்தை இருபத்தி ஐந்து வருடங்களாக வளர்க்க முடியுமா?

'இவர் இல்லையென்று வரும் ஏழைப் பறவைகளுக்கு
இடமளிக்கும் வேடந்தாங்கல்'

படித்து வேலையில் சேரத்துடிக்கும் இளையவர்களுக்கு ஏற்றிவிடும் ஏணி

கற்க வழியில்லாத வறியவர்களுக்குக் கல்விக் கண்ணைத்
திறந்துவிடும் கற்பக விருட்சம்.

செங்குந்தர் குலச் செம்மல் என்றாலும் அனைத்து மதத்தினரையும்
அரவணைத்துச் செல்லும் ஆசா...

இன்னும் எவ்வளவோ சொல்லலாம்.

'ஆர்.ஏ.என்.எம்.' என்ற நான்கெழுத்தைச் சொன்னாலே, இந்த நானிலமே புரிந்திடும். அனைவரையும் ஊக்கமும், உற்சாகமும் படுத்தி வேலை வாங்கும் பாங்கும், பிறரை மதிக்கும் பண்பும், அவரிடம் இன்றைய இளைஞர்கள் கற்றுக்கொள்ள வேண்டியது ஏராளம் என்பது மட்டும் உண்மை.

அவர் இன்னும் பல்லாண்டு நீண்ட ஆயுளுடன் துடிப்பாகச் செயல்பட்டு எங்களைப் போன்ற இளைஞர்களுக்கு வழிகாட்டியாக ஒளிவிளக்காகத் திகழ உடல் ஆரோக்கியத்தைத் தர எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

R. Ramaujan,
29, (4) Seyon Street, M.M. Nagar,
Valasaravakkam, Madras - 600 087.

Date 6.8.94

மனிதநேய இமயம்

ஓங்கி உலகளந்த எம்பெருமானைப் போன்ற நெடிய ஆஜானு பாகுவாக விளங்கும் திருமேனி, சாந்தமும், கருணையும் தவழ்ந்திடும் விழிகளின் ஆழமான பார்வை; மனம் தளராத இடைவிடாத கடின உழைப்பு, நிமிர்ந்த வீரநடை, மலர்முகம் காட்டி பேசிடும் இன்பம் பயக்கும் கனிந்த மொழிகள், ஆன்றவிந்தடங்கிய சான்றாண்மை, அற்புதமான நிர்வாகத்திறன், எத்தகைய சூழ்நிலையிலும் உணர்ச்சி வயப்படாத தன்னடக்கம், சாதாரண சராசரி மனிதனுக்கும் இல்லாத எளிமை – கல்விப் பணியையும் ஆன்மீகச் சேவையையும் இருகண்களாகப் போற்றிடும் பால்போன்ற திறந்த இதயம் – இவ்வளவு குணநலன்களும் மொத்தமாக ஒன்றாக உருவெடுத்த வடிவமே பெரியவர், கல்விச் சக்கரவர்த்தி, அருள்நெறிப் புரவலர் திருமிகு R.A.N. முத்துசாமி முதலியார் அய்யா அவர்கள்.

இத்தகைய 81வயது நிரம்பிய இளைஞரைப் பற்றி இவ்வளவு காலமும் என் ஆயுளில் தெரிந்து கொள்ளாமல் இருந்ததற்கு நான் தற்பொழுது மிகவும் வருந்துகிறேன். பெரியவர் ராணா அய்யா அவர்களை அண்மைக் காலத்தில் தான் அதுவும் இறையருள் கூட்டியமையால் நேரில் கண்டு அளவளாவி மகிழும் மகாபாக்கியத்தை நான் பெற்றதோடு இவர்களின் அறிமுகம் கிடைத்தமையை நான் பல பிறவிகளில் செய்த தவப்பயனாகக் கருதி மகிழ்கின்றேன்.

பெரியவர் RANM அய்யா அவர்கள், எவ்வளவு உயர்ந்தவர்களாக வாழ்ந்து வருகின்றார்கள்! இவர்கள் செய்துள்ள, செய்து வரும் கல்வி, ஆன்மீகப் பணிகள் வானிலும் உயர்ந்தன! இவர்களின் பரந்த நெஞ்சமோ கடலினும் பெரியது! இவர்களின் நுணுக்கமான அறிவுத் திறனோ இமயமலையினும் உயர்ந்தது!

இவ்வளவுக்கும் ராணா அய்யா அவர்கள் மூன்றாவது வகுப்பு வரைதான் படித்தவர். அதனாலென்ன இவர் படித்த படிப்பெல்லாம் மனிதநேயம். தொழில்நுட்பம், கல்வியின் அருமை, வாரி வழங்கும் வள்ளல் தன்மை – இவ்வளவும் போதாவா? படிப்பு எதற்கு? படித்தவர்களிடமெல்லாம் மேற்கண்டவை இருக்கின்றனவா? என்றால் பெரும்பாலும் கேள்விக்குறி தான்! பிறகு ஆச்சரியக்குறிதான்.

பெரியவர் RANM அய்யா அவர்கள் மனித சமுதாய விருக்ஷத்தில் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு ஒருமுறை பூக்கக்கூடிய ஓர் அற்புத மலர்! மாந்தருள்

மாணிக்கம்! குறளின் வாழ்வியல் விளக்க இலக்கணம்! கீதையின் வழி பார்த்தால் இவர் ஒரு கர்மயோகி! ஞானயோகி ! 20ஆம் நூற்றாண்டில் ஈடு இணையற்ற கல்வி வள்ளல்.

பெரியவர் RANM அய்யா அவர்கள் தம் 81வயது வயதில் World University round table Diandra Universityயால் Doctor of education என்ற கௌரவிப்பைப் பெற்றுள்ளார்கள். அத்துடன் ராஜ வம்ச அந்தஸ்துக்குரிய Chevalier - SIR பட்டங்கள் இரண்டையும், தங்க மெடல்களையும், செங்கோலையும் கூட பெற்று பாரதத் தாயின் தலைமகனாக விளங்குகின்றார்கள். மேற்கண்ட கௌரவிப்பு விருதுகளால் பெரியவர் RANM அய்யா அவர்கள் மாபெரும் அந்தஸ்தைப் பெற்று விட்டார் என்பது உண்மையாக இருந்தாலும், அவ்விருதுகள் இவரால் தனிப்பெரும் அந்தஸ்தைப் பெற்று விட்டன என்பது தான் வாய்மை.

அவர்களின் 81வது பிறந்த நன்னாளில் நல்ல உள்ளங்கள் எல்லாம் பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு பலகோடி நூறாயிரம் ஆண்டுகள் தீர்க்காயுளுடன் வாழவேண்டும் என்று வாழ்த்துகின்றன. நாமும் வாழ்த்துவோம்! வணங்குவோம்!

மேன்மை தங்கிய ராஜவம்ச அந்தஸ்தை வழிவழியாகப் பெரும் தகுதிக்கு ஆளாகி இருக்கும் Sovereign Excellency, Knight Grand Cross - Chev. SIR Dr. R.A.N. முத்துசாமி முதலியார் D.Edn, KGC அய்யா அவர்கள் – ஆண்டாண்டு தோறும் ஆறு செமஸ்டர் தேர்வுகளிலும் முதன்மையாக வரும் மாணவமணிகளுக்கு 150 தங்கப் பதக்கங்களைத் தவறாமல் வழங்கி கல்விக் கற்போரை ஊக்குவித்து வருகிறார்கள் என்பதை அறியும் பொழுது தாய்க்குலமும் கல்விப் பயிலவேண்டும் என்று ஒரு பெண்கள் கல்லூரியையும் ஏற்படுத்தி விட்டார் என்பதை எண்ணும்போது 'பலனைக்கருதாது கடமையைச் செய்' என்று கீதோபதேசம் செய்த விஜயசாரதியின் பெயரால் அமைந்த பார்த்தசாரதி உலகளாவிய கழகமும் பெரியவர் Dr.SIR RANM அய்யா அவர்களுக்கு 'வித்யாஜோதி' என்ற விருதையும் வழங்கி பெருமிதம் கொள்கின்றது. ஒரு தீபத்திலிருந்து எவ்வளவோ தீபங்கள் ஏற்றப்படுவதைப் போல வித்யா ஜோதியாக விளங்கும் பெரியவர் Dr. SIR RANM அய்யா அவர்களை இப்புனித நன்னாளில் வணங்கி ஆசிகளைப் பெறுவோம்! அவர் வழியில் நடப்போம்! அறப்பணியைக் காப்போம்!

உரியவர்கள், உரியகாலத்தில் உரியநிலையில் கௌரவிக்கப்பட்டே ஆக வேண்டும மேதைகளையும், சாதனையாளர்களையும் மதிக்கத்தெரியாத நாடும், சமுதாயமும் உலக அரங்கில் தம் மதிப்பை இழக்கும் என்பது உறுதி.

இந்நிலை ஏற்படாமல் தற்பொழுது வித்யாஜோதி Dr.SIR R.A.N.M. அய்யா அவர்கள் பெரியார் மாவட்டத்தில் மாமன்னராகி விட்டார். இனி அவர் புகழ்க்கொடி பட்டொளி வீசிப்பறக்கும்!.

பண்மணித் திரள்கள்

Scanned with OKEN Scanner

Prof. Sumant,
HOD of English,
Erode Arts College, Erode - 9.

Date 27.8.94

Thiru. R.A.N.M. - THE NON-PAREIL

There is no one like Thiru.R.A.N. Muthusamy Mudaliar and there can't be anyone like him. In the entire Periyar District no one can come anywhere near him. He is head and shoulders above everyone else.

He is an intellectual giant. Though he has studied only upto second standard, he is truly and rightly considered to be "Kalvi Thanthai". Having missed formal education for reasons beyond his control, his only aim in life seems to be to spread knowledge all round, to remove darkness and to enlighten the minds of one and all. As President of the Mudaliar Education Turst he has been the beaconlight and inspiration for the starting and efficient management of many educational institutions.

Born on 3.9.1913, before the First World War, he is now in his eightees, still going great guns. It is almost impossible to meet any one else so energetic, so enthusiastic, alert, active and lively. His noble and lofty ideas and his untiring hard work defy his age.

God his gifted Thiru. R.A.N.M. with knowledge, with riches, with all comforts and blessings. But he has never used these gifts and blessings for his personal ends. His only aim in life is to make others happy. I have never come across any other person who has gone to any length to make the teaching and non-teaching staff happy and contented with such invaluable, memorable, loving gifts as gold medals, souvenirs, etc. This is what Thiru. R.A.N.M. has done for his employees besides being kind, loving and good. Not only that, he has a novel way of inspiring students to excel in studies - he awards them gold medals!

How does Mr. R.A.N.M. tackle ticklish situations? Not by shying away, by becoming inaccessible, by living in an ivory tower, but by catching the bull by the horn, as it were. Despite his preoccupations and pressing engagements, he makes it a point to come in person to make a thorough enquiry, giving a patient hearing to everyone concerned. Only after that he arrives at a decision that proves to be by far the best.

How does Thiru. R.A.N.M. fare at meetings? He sheds tears, real tears,

filled with emotions and heart - touching appeals. He always inspiries us to work hard in order to improve the standard of the students to turn donkeys into horses, so to say. If he delivers an unprepared speech - there you have him at his best - speaking from the bottom of his heart, highly emotional, tender - hearted, most inspired, filled with the choicest expressions. He freely quotes striking and telling passages from Thirukkural, Bhagavad Gita and from the works and lives of great men to explain and illustrate his point of view. His awe - inspiring presence always works wonders. He has the rare gift of judging people right. Without wasting time, he comes to the heart of the matter. Once convinced, his next move is to go on and on till the task has been successfully accomplished.

Who are the people, the chosen few, who have been chiefly responsible for Thiru.R.A.N.M.'s success all round? None but the galaxy of shining stars, the illustrious and noble-minded philanthropists and altruists like Thiru. Rana K.V. Laxmanan, Thiru. A. Munusamy, Thiru. C.K. Ramanathan, Thiru. S. Vaiyapuri Mudaliar, Thiru.P.P. Sadasivam, Thiru.J.K. Narayanan, Thiru. P.K. Nanjappa Mudaliar, Thiru. T.R. Saminatha Mudaliar, Thiru. K.K. Balusamy, Thiru. Mylon A. Arumugam, Thiru. Ranam Arunachalam, Thiru. M. Balasubramaniam and others who have made many sacrifices and done everything possible, without caring for personal inconvenience and expense, for the spread of knowledge, for the attainment of excellence, for making the Mudaliar Educational Trust what it is today - a name to be reckoned with. With the help, advice, guidance and support of these excellent men, Thiru. R.A.M.N. started Erode Arts College in 1972 as a first grade degree college with one Major, namely, B.A., Economics. After that there was no looking back. Over the years, in tune with the changing times and needs, the College has made rapid strides and developed from strength to strength and now it boasts of enjoying an autonomous status with visible signs of its soon becoming a deemed University.

From where does Thiru. R.A.N.M. get his inspiration, his light, his guidance? From the Almighty Himself, of course. Be it Erode Easwaran Koil, Tirupathi, Tirutani, Palani, Samayapuram, the temple is his first home. He always begins his day with prayers invoking divine blessings. That is the real secret of his success.

May the Almighty grant Thiru. R.A.N.M. many more years of fruitful life in the service of humanity. Amen.

Prof. Vijayakumar,
Principal
E.I.T. Kavindapadi

KALAI NERIYALAR

Sri. R.A.N. Muthusamy Mudaliar is a well known figure in and around Erode. A tireless octogenarian, he has dedicated his life to the uplift of the educationally poor in Periyar District. His sole aim in life, it appears, is to create opportunities for the economically weaker sections of the population to pursue education in all forms in Periyar District itself.

Sri RANM is a strict disciplinarian and a frugal man by habit. A mentally vigorous person, he is always planning and contemplating new ideas with an intent to improve existing conditions within the Institution. He has abundant physical energy despite his advanced age, and travels extensively when necessary to accomplish his aims.

His shrewd wisdom helps him to detect problems facing the institutions in advance thus enabling the institutions to run free of troubles. An imposing figure, he is often seen around the campus, visiting, inspecting and supervising just about everything within the campus. There is no doubt that he is a charismatic man and instantly draws respect and admiration from all staff members. Often his mere presence is sufficient to settle a problem or a dispute and at times to inspire someone to complete a given task.

Chairman RANM who is affectionally called "KALVI THANTHAI" beleives in conserving what already exists rather than indulge in unnecessary expenditure for ostentatious display. A very thrift man by nature, he hates wastage of any kind and negligence in any form.

குன்றக்குடி பெரியபெருமாள்
குன்றக்குடி – 623 206.

பெரியவர் ஆர்.ஏ.என்.எம். அவர்களுக்கு எழுதிய கடிதம்.

நாள் 1.9.93

அன்பிற்கும் மரியாதைக்கும் உரிய அறமனச் செம்மல்

ஆர்.ஏ.என்.முத்துசாமி முதலியார் அவர்களுக்கு

வணக்கம்.

நமது தவத்திரு அடிகளார் திருவுருவச் சிலை அமைப்புத் தொடக்க விழா நிகழ்ச்சி 20.9.93 திங்கள் முற்பகல் நிகழ உள்ளது. தவத்திரு அடிகளார் அவர்களிடம் நெஞ்சார்ந்த அன்பும், நிறைந்த மதிப்பும் கொண்ட ஐவர், விழாவில் பங்கேற்க வேண்டுமென்பது எங்கள் விருப்பம்.

ஐவரில் ஒருவராகத் தாங்கள் தொடக்க விழாவில் பங்கேற்க, மிகுந்த பணிவன்புடன் தங்களை வேண்டி அழைக்கின்றோம்.

தங்கள் இசைவினை உடன் தெரிவித்து உதவினால், அழைப்பு அச்சிட வாய்ப்பாக அமையும். இணைத்துள்ள கார்டில் 'ஒரு வரி' எழுதி உதவுங்கள்.

தங்கள் நலத்திற்குப் பிரார்த்திக்கிறோம்.

அன்புடனும் பணிவுடனும்
குன்றக்குடி பெரியபெருமாள்
செயலாளர்.

தமிழ் வாழ்க! செங்குந்தம் வாழ்க!!

கல்வித் தந்தை செங்குந்தர் செம்மல்

உயர்திரு ***R.A.N. முத்துசாமி முதலியார்*** அவர்கட்கு

ஈரோடு நகரச் செங்குந்தர் மகாசன சங்கம்

வழங்கிய வாழ்த்துப்பா.

வள்ளல் சபாபதி இல்லத்தைச் சீர்செய்ய
வளமாக்க எண்ணிய வள்ளலே! ஊர்தோறும்
கிளைச்சங் கங்களைக் கண்டுசெங்குந் தர்பயிர்
கிளைக்க நீராக விளங்கிய செவ்வேளே!

கல்வியே கலங்கரை விளக்கு! நீவிர்
கல்விக்குக் கலங்கரை விளக்காய் விளங்கப்
பகுத்தறிவு பகலவன் தோன்றிய ஈரோட்டுப்
பெருநகரில் கலைக்கல் லூரியைக் கண்டவரே!

தங்கம்செய் யாததைச் சங்கம் செய்யுமெனும்
தாரக மந்திரத்தைத் தரணிக்குத் தந்தவரே!
கவுந்தியில் சுதேசி வர்த்தகர் ஜவுளிசங்கம்
உருவாக்கி உழைப்பில் உயர்ந்த உத்தமரே!

செங்குந்தர் வாழ்வுமலர செங்குந்தர் நகர்கண்டவரே!
மங்காப் புகழ்பெற புண்ணியஇல் லம்தந்தவரே!
இல்லம் இல்லையென்று சொல்லாதிருக்க செங்குந்தநகர்
மாணவர்கள் தொழிற்பயிற்சி பயில தொழில் கல்லூரி
கண்ட கல்வியாளரே! செயல் மறவரே!

எந்தச் செயலையும் ஏற்றமுற சிந்தித்துக்
காலம் கருதி ஞாலம் போற்ற
எடுத்து முடிப்பதில் வல்லவரே! எல்லோரும்
புகழ்பாட புகழ்வாழ்வு பெற்றவரே! நல்லவரே

நீவிரும் நும்துணைவியார் சீரங்கம் மாளும்
நிறைவான வாழ்வுபெற்று நானிலத் தில்பொது
வாழ்வு சிறக்க பல்லாண்டு பல்லாண்டு
வாழ்க எனயாங்கள் வாழ்த்து கின்றோம்!

இங்ஙனம்,

K.N. முருகேசன், A.P. கணபதி,
தலைவர் செயலாளர்

ஆக்கியோன் :
டாக்டர் மா. அண்ணாதுரை

துணைத் தலைவர்கள், துணைச் செயலாளர்கள்
மற்றும் உறுப்பினர்கள்,
ஈரோடு நகர செங்குந்தர் மகாசன சங்கம், ஈரோடு.

ஈரோடு கலைக் கல்லூரி தோற்றமும் வளர்ச்சியும்

R.A.N. முத்துசாமி முதலியார்
தலைவர், முதலியார் கல்வி நிறுவனம்

ஞாலமுற்றும் பராசக்தியின் தோற்றம்
ஞானம் என்பதோர் விளக்கினை யேற்றிக்
கால முற்றும் தொழுதிடல் வேண்டும்
காதல் என்பதோர் கோயிலின் கண்ணே

— பாரதியார்

நம் இந்திய நாடு சுதந்திர நாளின் வெள்ளி விழாவைக் கொண்டாடிய ஆண்டில் 1972ஆம் ஆண்டில் – ஈரோடு கலைக் கல்லூரி தொடங்கப்பெற்றது.

ஈரோடு வட்டாரத்தைச் சார்ந்த கொடையுள்ளம் படைத்த செங்குந்தப் பெருமக்கள் கூடிச் சமுதாயத்தில் கல்வி வாய்ப்புக்கிட்டாத பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்குக் கல்வி வாய்ப்பு அளிக்க வேண்டி உயர்திரு R.A.N. முத்துசாமி முதலியார் அவர்களின் பெருமுயற்சியாலும், சென்னைப் பல்கலைக்கழக முன்னாள் பதிவாளர் உயர்திரு C.K. குமாரசாமி அவர்களது நல்லாதரவாலும் ஈரோடு முதலியார் கல்வி நிறுவனம் அமைக்கப்பெற்றது. சின்னச் சின்ன இழை பின்னிப் பின்னிவரும் சித்திரக் கைத்தறி நெசவாளர் பெருமக்களில் நிதி குறைந்தவர்களின் காசுகளையும் நிதி மிகுந்தவர்களின் பொற்குவியல்களையும் பெற்று அமைக்கப் பெற்ற அந்த முதலியார் கல்வி நிறுவனத்தினரால் நடத்தப் பெறுவது ஈரோடு கலைக்கல்லூரி ஆகும்.

எலத்தூர் செட்டிப்பாளையத்தைச் சேர்ந்த அமரர் சி.பி. கந்தசாமி முதலியார் அவர்கள் தலைமையில், சென்னைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் தாமரைத் திரு நெ.து. சுந்தரவடிவேலு அவர்கள் 24.11.1971இல் கல்லூரிக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டினார்கள். முதலியார் கல்வி நிறுவனத்தாரின் அயரா உழைப்பினாலும் இடையறா முயற்சியாலும் கல்லூரிக் கட்டடம் விரைவாகக் கட்டப்பெற்று 12.7.72 முதல் கல்லூரிச் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றது.

ஈரோடு இரயில் நிலையத்திலிருந்து மூன்று கல் தொலைவில் சென்னிமலை ரோடில் கவினுறு கல்லூரிக் கட்டடம் காட்சியளிக்கிறது.

கல்லூரிக்கு முன்னால் சலசலக்கும் நீரோடை! அதையொட்டி விளங்கும் அழகான தோட்டம்; தோட்டத்தில் வரிசையாகப் பரவி நிற்கும் பாதாம் மரங்களின் பாங்கான தோற்றப்பொலிவு பார்ப்பவர் மனத்தைக் கொள்ளை கொள்ளும்!

பின்பக்கம் நீண்டு உயர்ந்து விளங்கும் தேக்கு மரத்தோப்பு! இயற்கைத் தெய்வம் எழிற் கொலுவீற்றிருக்கும் இன்பச்சூழல் அமைதிக்கன்னி மோனத் தவமிருக்கும் இனிய சூழல்! கல்லூரி எல்லைக்குள் காலடி எடுத்து வைப்போர்க்கு வாழையும் தென்னையும் வளமான வரவேற்பு நல்கும்

கல்லூரிக்குப் பக்கத்திலேயே அழகான விடுதிக்கட்டடமும் அமைத்துள்ளது.

அறிவு, பண்பு, ஆன்மீகம் என்பவை கல்லூரியின் இலச்சினை எடுத்துச் சொல்லும் உயர்ந்த குறிக்கோள்கள் ஆகும்.

கல்வியின் நோக்கம் இளைஞர்களின் மூளை, மனம், ஆன்மா ஆகிய மூன்றையும் வளர்த்தல் – சீராய் வளர்த்தல் ஆகும். இதுவே கல்லூரியின் குறிக்கோளாக அமைந்திருப்பது எண்ணி மகிழ்தற்குரியது.

மூளையின் வளர்ச்சியை அறிவு காட்டும் !
மனத்தின் விரிவைப் பண்பு பேசும்!
ஆன்மாவின் உயர்வை ஆன்மீகம் உணர்த்தும்!

'கல்லார் நெஞ்சில் நில்லார் ஈசன்' எனில், எல்லாரும் கல்வி கற்க நாம் வழி செய்ய வேண்டாவா? பிற்பட்டவர்களுக்கும் வசதிக் குறைவானவர்களுக்கும் இந்தக்கல்லூரி நல்ல சேவை – கல்விச் சேவை செய்து வருகின்றது.

'ஈரோடு கலைக் கல்லூரி, புறக்கல்வி நடவடிக்கைகளில் சிறப்பாக ஈடுபட்டிருப்பதை அனைவரும் அறிவர்', என்று முன்னாள் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள் வாழ்த்தியிருக்கின்றார்கள்.

'இக்கல்லூரியின் பணி குறிப்பாகப் பின் தங்கிய இன மாணவர்களுக்குச் செய்யும் பணி பாராட்டிற்குரியதாகும்' என்று முன்னாள் தமிழகக் கல்வியமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் போற்றியுள்ளார்.

தொடங்கும் போதே புதுமுக வகுப்பு, பி.ஏ., பொருளாதாரப்பட்ட வகுப்புடன் முதல்நிலைக் கல்லூரியாகத் தொடங்கப்பெற்ற இக்கல்லூரியில் 1973ஆம் ஆண்டு பி.எசி. கணிதமும் 1975ஆம் ஆண்டு பி.காம்., பட்ட வகுப்பும் தொடங்கப்பெற்றன. 1979இல் பி.எசி. வேதியியல், விலங்கியல் பட்ட வகுப்புகளும், 1980இல் பி.எசி. இயற்பியல் பட்ட வகுப்பும், 1981இல் எம்.காம். பட்ட வகுப்பும், 1982இல் எம்.ஏ. பொருளியல் பட்ட வகுப்பும், 1983ல் பி.ஏ. கார்ப்பரேட் செக்ரடரிஷிப் பட்ட வகுப்பும் 1984இல் பி.பி.எம். பட்டவகுப்பும் தொடங்கப்பெற்றன. இந்த ஆண்டு தொடக்கத்தில் 1985இல் பி.எசி. கம்யூட்டர் சயன்ஸ் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கல்லூரியில் தொடக்க காலத்திலிருந்து பேராசிரியர் க. இராமதாஸ் எம்.ஏ. அவர்கள் 10 ஆண்டுகள் முதல்வராகச் சிறப்புடன் பணியாற்றி 31.7.82 ஆம் நாள் ஓய்வு பெற்றார்.

இந்தக் கல்லூரியில் தொடக்க நாள் முதல் கணிதத் துறைத் தலைவராகப் பணிபுரிந்து வந்த பேராசிரியர் ரா.வெ. இராமகிருஷ்ணன், எம்.எசி. அவர்கள் 1.8.82 முதல் முதல்வராகப் பதவி உயர்வு பெற்றுச் சிறப்புடன் பணிபுரிந்து வருகின்றார்.

தலைவர்	:	R.A.N. முத்துசாமி முதலியார்
துணைத் தலைவர்கள்	:	திரு. S.N. பழனியப்ப முதலியார்
		" C.K. சிவசுப்பிரமணியம்
		" J.K. நாராயணன்
		" P.K. நஞ்சப்ப முதலியார்
		" T.R. சுவாமிநாத முதலியார்
		" A. பெருமாள் முதலியார்
		" C.K. இராமநாதன்
செயலாளர் + தாளாளர்	:	திரு. K.V. இலட்சுமணன், M.A.,B.Com.,M.B.A.,
பொருளாளர்	:	திரு. A. முனுசாமி
இணைச் செயலாளர்கள்	:	திரு. மயிலோன் ஆறுமுக முதலியார்
		" S. வையாபுரி முதலியார்

ஆகிய பதவிப் பொறுப்பாளர்கள் உயிர்நாடியாய் இருந்து கல்லூரியைக் கண்ணாய்க் கண்ணின் மணியாய்க் காப்பாற்றி வருகின்றார்கள்.

காடு திருத்திக் கழனியாக்கி உழுது விதைத்து, உரம் கொல்லும் களை நீக்கி, நீர் பாய்ச்சி நிலத்திற்குக் காவலிருந்து அறுவடைக்குச் செல்லும் உழவன், கன்னிப் பெண்களைப் போல தலைசாய்த்து நிற்கும் முற்றிய செந்நெற் கதிர்களைக் கண்டு எவ்வாறு மகிழ்ச்சியடைவானோ அவ்வாறு மகிழ்ச்சியடைந்து கல்லூரியின் நலம் போற்றும் நிர்வாக உறுப்பினர் பெருமக்கள், நிர்வாகத்தினருக்குத் தோள் தந்து துணைநிற்கின்றார்கள்.

இக்கல்லூரியின் வலிவுக்கும் வண்ணப் பொலிவுக்கும் தங்களின் வள்ளல் தன்மையினால் இருபத்தையாயிரமும் அதற்கு மேலும் கொடுத்துள்ள பெருந்தகையாளர்கள் :

1. திரு. R.A.N. முத்துசாமி முதலியார் 2. அமரர் V. அர்த்தனாரி முதலியார் 3. திரு. S. வையாபுரி முதலியார் 4. அமரர் பிரபாத் P.N. காளியண்ண முதலியார் 6. திரு. T.R. சுவாமிநாத முதலியார் 7. அமரர் K. முத்துசாமி முதலியார் 8. அமரர் S.K. சின்னைய முதலியார் 9. அமரர் P. செங்கோடமுதலியார் 10. திரு. A.V.Rm. V.சங்கரநாராயணன்.

மேற்கண்ட புரவலர் பெருமக்களின் பெயர்களைக் கல்வெட்டில் பொறித்து வைத்துள்ளதோடு, அவர்களின் திருவுருவப் படங்களையும் கல்லூரியின்

வகுப்பறைகளில் திறந்து வைத்துள்ளோம். இதற்கான விழா 27.5.79இல் இனிது நடைபெற்றது.

மேலும் கீழ்க்காணும் புரவலர் பெருமக்களும் கல்லூரியின் வளர்ச்சி நிதிக்கு ரூபாய் இருபத்தையாயிரம் நன்கொடையளித்துள்ளார்கள். இவர்களின் பெயர்களும் கல்லூரியில் கல்வெட்டில் பொறித்து வைப்பதோடு, இவர்களின் திருவுருவப் படங்களும் கல்லூரியின் வகுப்பறைகளில் திறந்து வைக்கப்பெறும்.

1. அமரர் R.A.N. அங்கப்பமுதலியார்
2. திரு. R.A.N. முத்துசாமி முதலியார்
   திரு. M. அருணாசலம்
3. திரு. R.A.N. முத்துசாமி முதலியார்
   திரு. M. சுந்தரம்
4. திரு. N.S. சண்முகசுந்தரம் – துடுப்பதி
5. திரு. P.K. நஞ்சப்பமுதலியார்
6. அமரர் C.K. கந்தசாமிமுதலியார்
   திரு. K.K. பாலுசாமி
7. திரு. A. பெருமாள் முதலியார்
   திரு. சி. பெரியண்ண முதலியார்
8. திரு. V.R.A. பாலகிருஷ்ணன், கோவை
9. திரு. புஷ்பா கருப்பண்ண முதலியார்
10. திரு. S.N. பழனியப்ப முதலியார்

பல்கலைக்கழக மானியக்குழுவின் துறை உயர்திட்டத்தின் கீழ் பி.எச்.டி. ஆய்வு செய்து டாக்டர் பட்டத்தை இரண்டு ஆசிரியர்களும், எம்.பில். ஆய்வு செய்து எம்.பில். பட்டத்தைப் பல ஆசிரியர்களும் பெற்றுள்ளனர்.

டாக்டர் பட்டம் பெற்ற ஆசிரியர்களுக்கெல்லாம் நிறுவனத்தினர் பாராட்டுச் செய்து பரிசளிக்கின்றனர்.

கல்லூரியின் புகழோங்குமாறு முதல்வர் ஆசிரியர் அலுவலர் ஆகியோர் கருத்தொருமித்து பணியாற்றி வருகின்றனர்.

இளஞ்செல்வங்களாகிய மாணவர்கள் பிற சூழல்களையெல்லாம் மறந்து 'கற்றனைத் தூறு மறிவு' என்னும் நிலையில் கற்பன கற்று அறிவு ஒழுக்கங்களின் சிறந்து விளங்க ஏற்ற சூழலில் அமைந்துள்ள ஈரோடு கலைக் கல்லூரி பொது மக்களின் அன்பையும் நல்லாதரவையும் இன்முகத்துடன் எதிர்பார்க்கின்றது.

பெரியார் மாவட்டச் செங்குந்தர் மகாசன சங்கம்

மாநாட்டுத் தலைமை உரை

R.A.N. முத்துசாமி முதலியார்

தலைவர், பெரியார் மாவட்டச் செங்குந்தர்
மகாசன சங்கம், ஈரோடு – 1.

தென்னிந்திய செங்குந்த மகாசன சங்கத்தலைவர் அவர்களே! பொதுச் செயலாளர் அவர்களே! பேரணியின் தொடக்கத்தில் கொடியேற்றிய திரு.N.கோவிந்தசாமி முதலியார் அவர்களே! பேரணிக்கு முன்னணி வகித்த திரு.K.K.பாலுசாமி அவர்களே! பேரணியைத் தொடக்கி வைத்த திரு ராண்ண K.V.லட்சுமணன் அவர்களே! மாநாட்டுப் பந்தலில் குத்துவிளக்கேற்றி வைத்த திருமதி. சரோசா லட்சுமணன் அவர்களே! கொடியேற்றி வைத்த AVRmV சங்கரநாராயணன் செங்குந்தர் அவர்களே! பாவேந்தர் பாரதிதாசன் படத்தைத் திறந்து வைத்து உரையாற்ற இருக்கும் கவிஞர் மன்னன் மன்னன் அவர்களே! பத்மஸ்ரீ MP நாச்சிமுத்து முதலியார் படத்தைத் திறந்து வைக்க உள்ள பிரபாத் JK நாராயணன் அவர்களே! மாநாட்டு மலரை வெளியிட உள்ள திரு P.K. நஞ்சப்ப முதலியார் அவர்களே முதல் மலரைப் பெற இருக்கும் திரு K.K. பழனிச்சாமி அவர்களே! வாழ்த்துரை வழங்க வந்திருக்கும் சான்றோர்களே! பல்வேறு மாவட்டங்களிலிருந்து வந்து மாநாட்டைச் சிறப்பித்துள்ள பெரியோர்களே! தாய்மார்களே! அலையெனத் திரண்டு வந்திருக்கும் இளைஞர்களே! வணக்கம்!.

பெரியார் மாவட்டத்தில் முதன்முறையாக மாவட்ட மகாநாட்டைக் கூட்டியுள்ளோம். எழுச்சிமிகு பேரணி முடிந்து மாநாட்டு நிகழ்ச்சிகள் தொடங்கியுள்ளன இம்மாநாடு சீரோடும் சிறப்போடும் நடைபெற எல்லாம் வல்ல முருகப்பெருமானை வணங்குகிறேன்.

தமிழகத்திலும் பிற தென்மாநிலங்களிலும் வசிக்கும் நம் இனமக்களில் பெரும்பாலானவர்கள் கைத்தறியை நம்பியே வாழ்கிறார்கள். கைத்தறியைக் கொண்டு வாழ்க்கை நடத்தும் நம் இனமக்களின் லட்சக்கணக்கானோர் வயிறாரச் சோறுண்ணவும் வழியற்றவர்களாக இருக்கிறார்கள் நூல் விலையேற்றமும் கைத்தறித்துணி தேங்கிப் போவதும் நம்இனமக்களை அச்சுறுத்தி வருகிறது. குஜராத் மாநிலத்தில் நெசவாளிகளைத் தாழ்த்தப்பட்ட வகுப்பினராக அரசு அறிவித்துள்ளது. இங்கும் நம் இனமக்களைத் தாழ்த்தப்பட்டோர் பிரிவில் சேர்த்துக் கல்வியும், வேலை வாய்ப்பிலும் முன்னுரிமை வழங்க வேண்டும். காலை முதல் இரவு வரை குடும்பத்தில் உள்ள அனைவரும் பாடுபட்டாலும் வாழ்க்கைப்பாடு திண்டாட்டமாயிருக்கிறது. சலியாது உழைக்கலாம் என்றாலோ ஆண்டு முழுதும் வேலையும் கிடைப்பதில்லை இந்த நிலை என்று மாறுவது?

நாம் பழம் பெருமைகளைப் பேசியே காலத்தைக் கழித்து வருகிறோம். மாபெரும் மக்கள் தொகையைக் கொண்டிருந்தும் நம்மிடம் ஒற்றுமை இல்லாததால் பின்னடைந்து வருகிறோம். இந்த நிலை மாறுவதற்கு நாம் முயற்சி செய்யவேண்டும்.

தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் சிதறிக்கிடப்பதால் நாம் வலிமை யற்றவர்களாய் இருக்கிறோம். நல்லதொரு அமைப்பையும் தலைவரையும் கொண்டிருக்கும் நாம் முதலில் செய்ய வேண்டியது என்ன? அந்தந்தப் பகுதியில் வாழும் நம்குலமக்கள் செங்குந்தர் சங்கத்தில் உறுப்பினராக வேண்டும். நம்மில் ஒற்றுமையை நீங்கில் நம் அனைவர்க்கும் தாழ்வு அல்லவா? ஒன்றுபடுவோம். பிரச்சனைகளை வென்றெடுப்போம்.

இந்த இனிய நல்ல நாளில் ஒவ்வொரு செங்குந்தரும் தெய்வீகப்பணி, சமுதாயப்பணி கல்விப்பணி ஆகியவற்றில் தாங்களால் இயன்ற பணிகளை ஆற்றி வணிகத்துறை ஆனாலும் உத்தியோகத்துறை ஆனாலும் தாங்கள் சார்ந்துள்ள துறைகளில் புகழ்பெற்று வளம் பெற்று உயர்வடைந்து நீண்ட நாள் இனிதே வாழ உளமார வாழ்த்துகிறேன்.

செங்குந்தர் சமுதாயம் வளர்ச்சியடைய

நாம் அரசியல் ரீதியாக செயல்படவேண்டும்.

மிகப்பெரும் பலம் வாய்ந்த செங்குந்தச் சமுதாயம் வளர்ச்சியடையாமல் முன்னோக்கி செல்ல முடியாமல் இருப்பதற்குக் காரணம் நமக்கு அரசியல் பின்னணி கிடையாது அதனால் நாம் இனிமேல், அரசியல் ரீதியாகச் செயல்பட வேண்டுமென்று பெரியார் மாவட்டச் செங்குந்த மகாஜனசங்க தலைவர் R.A.M முத்துசாமி முதலியார் அவர்கள் செங்குந்தமணிக்கு அளித்த சிறப்புப் பேட்டியில் தெரிவித்தார் அவர்கள் மேலும் கூறியதாவது :

தென்னகத்தில் மிகப்பலம் பொருந்திய சுமார் 50 லட்சம் மக்கள் தொகைக்கு மேல் உள்ள ஜனசமுத்திரம் மிகுந்த நம் செங்குந்தர் சமுதாயத்தை பற்றி மத்திய மாநில அரசுகளும் எந்த அரசியல் கட்சிகளும் கண்டு கொள்வது கிடையாது. நமது தீர்மானங்களும் கோரிக்கைகளும் புறக்கணிக்கப்படுகிறது. சட்டமன்ற நாடாளுமன்றங்களில் நமது சமுதாய உறுப்பினர்களின் எண்ணிக்கை மிகமிகக் குறைவாக உள்ளதால் நமது உண்மையான தேவைகள் அரசுக்குத் தெரிவதற்கு வாய்ப்பில்லை. இந்த நிலை நீடித்தால்..... எதிர் காலத்தில் இந்த 50 லட்சம் மக்களின் வாழ்க்கை என்ன வாகும்...? மேலும் தாமதிக்காமல் நாம் உடனடியாக அரசியல் ரீதியாகச் செயல்பட தொடங்கவேண்டும். கடந்த காலங்களில் நமது சமுதாய மக்களின் பல லட்சம் வாக்குகளைப் பெற்றுத்தான் சில அரசியல் கட்சிகள் மிக வளர்ச்சியடைந்து வருகிறது. ஆனால் அவர்கள் நம்மை மதிப்பது கூடகிடையாது நமக்காக எந்தவித சலுகையும் செய்தது கிடையாது. நமது கோரிக்கைகளையும் தீர்மானங்களையும் கூட ஏற்றுக்கொண்டதாகத் தெரியவில்லை. ஆகவே உண்மையிலேயே நமது மக்களுக்கு நாம் சலுகைகளைப் பெற்றுத்தர வேண்டுமென நாம் நினைத்தால்... அவசியம் அரசியல் ரீதியாகத் தான் சென்றாக வேண்டும்.

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம் அதற்குத் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும். கைத்தறி தொழிலில் முழுமையாகப் பங்கு கொண்டுள்ள நம் செங்குந்த மக்களின் குடும்பங்களில் 5 வயது குழந்தை முதல் வயது முதிர்ந்தகாலம் வரை பாடுபட்டாலும் அவர்கள் வாழ்க்கையில் எந்தவித முன்னேற்றமும் கண்டதாகத் தெரியவில்லை. தொழிலில் நளினங்களைப் புகுத்தி தொழில் மாற்று ஏற்பாடு காணவேண்டும்.

ஒவ்வொரு மாவட்ட சங்கமும் தங்கள் மாவட்டத்திலுள்ள எல்லா தாலூகா மாநாடுகளையும், அதன்பின் மாவட்ட மாநாடுகளையும் அவசியம் நடத்திட வேண்டும். மாநில மாநாடுகள் கூட்டி, நம் கோரிக்கைகளை அரசுக்கு அனுப்புகிறோம். அதன்பின் அந்தக் கோரிக்கைகளை அரசு கவனத்தில் எடுத்துக் கொள்கிறதா என்று கவனிக்க வேண்டும். தமிழகமெங்கும் எல்லா

மாவட்டங்களிலும் மாவட்டச் சங்கம் அமைத்து உள்ளோம். மாவட்ட தாலூக்கா கிளைச் சங்கங்கள் மக்களின் தேவைகளை நிறைவு செய்யும் வண்ணம் எப்படிச் செயல்பட வேண்டும் என்பதை மாநில சங்கம் திட்டங்களை முறைப்படி வகுத்துக் கொடுக்க வேண்டும். அப்பொழுதுதான் சங்கங்கள் முறையாகச் செயல்படும், மக்கள் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியும்.

மிகப்பெரும் மக்கள் தொகைகொண்ட மகத்தான வலுவுள்ள நாம் உறுதியாக அரசியல் கட்சியாக மாறி செயல்பட்டாலொழிய நம் மக்களுக்கு எதிர்காலமில்லை. இதற்கு நாம் உடனடியாகத் தீர்வு காணவேண்டும்.

இவ்வாறு பெரியார் மாவட்டத் தலைவர் R.A.N. முத்துசாமி முதலியார் அவர்கள் தெரிவித்தார்கள்.

பெரியார் மாவட்டத் தலைவர் ***முத்துசாமி முதலியார்*** அவர்களுடன் செங்குந்த மணியின் சிறப்புப் பேட்டி

ஆசிரியர் ப. சொக்கநாதன், மதுரை.

வித்துவான் திரு.சி. செல்வத்தாண்டவன், எம்.ஓ.எல்.,
முதல்வர், கணேசர் செந்தமிழ்க்கல்லூரி
மேலைச் சிவபுரி, திருச்சி மாவட்டம்

கல்லூரி வாழி! வாழி!!

ஆன்மீக நிலையொன்றே வாழ்க்கைப் பேறாம்!
அதை விளக்கும் வண்ணமயில்; அவ்வான் மீக
மேன்மையுற அடிப்படையாம் அறிவின் நுட்பம்,
மேவுசுடர் அதைவிளக்கும்; அறிவு நல்கும்
மேலான பண்புடையார் குழுவைச் சுட்டும்,
மிளிர்கின்ற தாமரை; அக்குழுவி லுள்ளோர்
நூலானே உயர்மானம் காப்பார் என்னும்
நுண்பொருளைப் பாவூடு நுவலும் நன்றே!

பாவூடு கைக்கோளர் ஒன்று கூடிப்
படைமுதலி யாயிருந்த தம்மி னத்தார்
வாழ்வூடு பாவூடாய் நிலைபே றின்றி
வதைகின்ற நிலைமாற்றி உயர்வ ளிக்க
ஈரோடு கல்லூரி கண்டா ரங்கே
யிணையிலா அறிவுபண் பான்மீ கத்தைச்
சீரோடு வழங்குகின்றார்; இனத்தீர், சென்மின்;
சென்றறிவு முதலிகளாய்த் திகழ்மின் நன்றே!

சிந்தனையை வளர்ப்பதுவே கல்வி; நாளும்
சிற்றுயிர்க்கும் உற்றதுணை அதுவென் றோர்ந்து
வந்தனை செய் ஈரோட்டு முதலியார்கள்
வகுத்திட்டார் கல்வியறக் குழுவினர் சார்பில்
கந்தனைநேர் இளையோர்க்குக் கலைக்கல் லூரி;
கற்பிப்போர் கற்போர்நல் லுறவால் என்றும்
வந்தனைசெய் கந்தனருட் கோயி லென்ன
வயங்கிடுக கல்லூரி ! வாழி! வாழி!!

பேராசிரியர் ரா.வெ. இராமகிருஷ்ணன்,

முதல்வர்,
ஈரோடு கலைக் கல்லூரி (தன்னாட்சி),
ஈரோடு – 638 009.

கல்வித் தந்தை – ஓர் ஒப்பில்லாத் தலைவர்

சமுதாய முன்னேற்றத்திற்கு இன்றியமையாத பணிகளாகக் கருதப்படுவன இரண்டு. ஒன்று கல்விப் பணி, மற்றொன்று தெய்வப்பணி. கல்வி மனிதனை மனிதனாக வாழ வழிவகுக்கிறது; மனிதனை முழுமைப்படுத்துகிறது. தெய்வப் பற்று மனிதனை ஒழுக்கமுடன், நம்பிக்கையுடன் வாழ வழிகாட்டுகிறது. இவ்விரண்டு பணிகளையும் இரு கண்களாகப் போற்றுகின்றவர் கல்வித் தந்தை திரு. ஆர்.ஏ.என்.எம். முத்துசாமி முதலியார் அவர்கள்.

அவர்தம் முத்துவிழா நடக்க இருப்பது செங்குந்தர் இன மக்களுக்குப் பெரும் மகிழ்ச்சியைத் தருகிறது. ஈரோடு கலைக்கல்லூரியைத் தொடக்கி வைத்த நாளில் இருந்து ஏறக்குறைய 23 ஆண்டுகளாக யான் நெருங்கிப் பழகும் வாய்ப்புப் பெற்றவன். அவர்தம் வளர்ச்சியைக் கண்டு வியந்தவன்; மேலும், அவர் உள்ளம் குழந்தையின் உள்ளம் போன்றது; மென்மையானது; மனம் மலையைப் போல் உயர்ந்தது; திடமானது. கூரிய கண்கள்; தீர்க்கத் தரிசனமான பார்வை; எடுத்த செயலை உறுதியுடன் நிறைவேற்றும் மனத்திட்பம் பெற்றவர்; வைராக்கியம் உள்ளவர்.

அவர் தொட்டதெல்லாம் பொன்னாகும். அவர் மனமுவந்து எடுத்தச் செயல்கள் அனைத்தும் மாபெரும் வெற்றியை அவர்க்குத் தேடி தந்துள்ளது; புகழைச் சேர்த்திருக்கிறது. கல்வித் தந்தை திரு. ஆர்.ஏ.என்.எம். அவர்கள் உருவாக்கிய ஈரோடு கலைக் கல்லூரி, ஈரோடு தொழில்நுட்பப் பயிற்சிக் கல்லூரி, காமாட்சியம்மன் தொழிற்கூடம், அருள்நெறித் திருப்பணி மன்றம். புண்ணிய இல்லம் – ஆரம்பப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி, மேனிலைப்பள்ளி போன்றவை களே அவர்தம் மனத்திட்பத்திற்கும் செயல்திறனுக்கும் எடுத்துக்காட்டாக விளங்கு கின்றன.

ஆசிரியர்கள், மாணவர்கள் ஒழுக்கமுடன் இருக்க வேண்டும் என்று விரும்பு கின்றவர். ஆசிரியர், மாணவர்க்கு முன்னுதாரணமாக விளங்க வேண்டும் என்று நினைப்பவர். ஆசிரியர், மாணவர்களுக்குக் கடமையுணர்வுடன் கல்வியைப் புகட்ட வேண்டும் என்று அன்போடு அறிவுரையும் அறவுரையும் கூறுகிறார். ஆசிரியப் பெரு மக்களிடம் தூய அன்பினை என்றும் செலுத்தி வருபவர். மலேசியாவில் நடைபெற்ற ஆறாம் உலகத் தமிழ் மாநாட்டில் கலந்து கொண்டு தாயகம் திரும்பிய கல்வித் தந்தை, ஆசிரியர்களின் மீது இருந்த பேரன்பின் காரணமாக விலை யுயர்ந்த பேனாக்களை அனைவர்க்கும் கொடுத்தார். அவர் தம் ஈகை குணத்திற்கு இஃதொரு எடுத்துக்காட்டாகும். மேலும், ஆசிரியர்களின் கடமையைப் பாராட்டும்

வகையில் அவர்களுக்குக் கைக்கடிகாரங்கள் கொடுத்துப் பெருமைப்படுத்திய நல்நெஞ்சினர்.

பெரியார் மாவட்டச் செங்குந்தர் மகாசன சங்கத்தின் தலைவராக, செங்குந்தர் முன்னேற்ற சங்கத்தின் தலைவராக இருந்து செங்குந்தர் இனமக்களுக்குக் கல்விச் சக்கரவர்த்தி திரு. ஆர்.ஏ.என். முத்துசாமி முதலியார் ஆற்றி வரும் அரும் பணிகளை என்றும் மறக்க முடியாத செயலாகும்.

தமிழ் முனிவர் குன்றக்குடி அடிகளார், திருப்பணிச் செல்வர் திருமுருக கிருபானந்த சுவாமிகள் ஆகியோர்களிடம் மிகுந்த ஈடுபாடு கொண்டு விளங்குபவர். இந்த ஆன்மீகப் பெரியோர்களின் நல்லாசியுடன், நல்லாதரவுடன் கவுந்தப்பாடியில் அருள்தரும் அன்னை காமாட்சியம்மன் திருக்கோயிலைக் கட்டியுள்ளார். ஆறு கால பூசையும் செவ்வனே நிறைவேற்றி வருகிறார். கல்வித் தந்தை திரு. ஆர்.ஏ.என். முத்துசாமி முதலியார் அவர்கள் சிறந்த ஆன்மீக வாதியான அவர்கள் இரண்டு முறைகள் கைலாய மலைக்கு சென்று வந்த பெருமைக்குரியவர்.

ஒப்பிலாத் தலைவர் கல்வித் தந்தை திரு. ஆர்.ஏ.என்.எம். முத்துசாமி முதலியார் அவர்களின் வளர்ச்சிக்காரணம் அவர்தம் முயற்சியாகும். உழைப்பாகும். உழைப்பால் உயர்ந்த உயர்திரு. ஆர்.ஏ.என். முத்துசாமி முதலியார் அவர்களின் அரும்பணிகளைப் பாராட்டும் வகையில், 'அருள்நெறிப் புரவலர்' என்னும் சிறப்புமிகு பட்டத்தை அளித்தார் தவத்திரு குன்றக்குடி அடிகளார். சமுதாயத்திற்கு அவர் ஆற்றிய பணிகளைத் தமிழகம் பாராட்டுகிறது. இத்தகைய சிறப்புகள் பல பொருந்திய கல்விச் சக்கரவர்த்தி திரு. ஆர்.ஏ.என். முத்துசாமி முதலியார் அவர்களுக்கு டாக்டர் பட்டமும், சர், செவாலியர், வித்யாஜோதி எனும் விருதுகளும் அளிக்க இருப்பது அவருக்கும் பெருமை தருவதாகும்; நமக்கும் பெருமை தருவதாகும். அப்பட்டம் அவரைச் சேர்ந்து, நிச்சயம் பெருமையடையும் என்பதில் ஐயமில்லை.

கல்வித் தந்தை திரு. ஆர்.ஏ.என். முத்துசாமி முதலியார், இளைஞர்கள் கல்வியில் சிறக்க வேண்டும்; உயர வேண்டும்; இளைஞர்களால் சமுதாயம் மறுமலர்ச்சி பெற வேண்டும் என்பதே. கல்வித் தொண்டு, பொதுத்தொண்டு பல ஆற்றிய கல்வித் தந்தை திரு. ஆர்.ஏ.என். முத்துசாமி முதலியார் இவ்வையகத்தில் பல்லாண்டுகள் வாழ, நம்குலத் தெய்வம் முருகன் துணை இருக்க வேண்டுகிறோம்.

முத்து விழா காணும்
முத்துசாமி முதலியார்
மலரும் நினைவுகள்








ஆர். ஏ. என். முத்துசாமி முதலியார்

பாராட்டு நல்லுரை







சிறப்புப் பட்டமளிப்பு

அன்பிற்கும் மரியாதைக்கும் பாசத்திற்கும் உரிய கல்வித்தந்தை, செங்குந்தர் செம்மல்
உயர்திரு. R. A. N. முத்துசாமி முதலியார் அவர்களுக்கு
முதலியார் கல்வி நிறுவனத்தின் செயற்குழு உறுப்பினர்களால்

"கல்விச் சக்கரவர்த்தி"

என்ற சிறப்பு பட்டம் ஈரோடு RANA திருமண மண்டபத்தில் நடைபெற்ற பாராட்டு விழாவில் அன்போடும் மகிழ்வோடும் அளிப்பதில் பெருமை அடைகிறோம்.

20—10—1991


இவண்,
செயற்குழு உறுப்பினர்கள்
முதலியார் கல்வி நிறுவனங்கள்
ஈரோடு.




பெரியார் திரு . ஆர். ஏ. என். முத்துசாமி முதலியார் கல்விக்காக செய்த அரும்பணிகளை ப் பாராட்டி பரிசு வழங்குகிறார். தவத்திரு குன்றக்குடி அடிகளார்



அருள்மிகு காமாட்சி அம்மன் கோவில், கவுந்தப்பாடி.





நம் கல்லூரிக்கு வருகை தந்த அருள் திருமுருக கிருபானந்த வாரியார்
திரு. ஆர்.ஏ.என் முத்துசாமி முதலியார்,
பி.கே. நஞ்சப்ப முதலியார் தாளாளர்
திரு. பி.பி. சதாசிவம்



அருள்நெறித் திருப்பணி மன்ற ஆங்கிலப்பள்ளியில் அதன் தலைமை
ஆசிரியருடன் நமது கல்வி தந்தை கண்காணிக்கிறார்.





கல்லூரிக் சேர்மன்,அமரர் திரு. V.அர்த்தனாரி முதலியார் அவர்கள்
கடவுள் வழிபாடு செய்து திறந்து வைக்கிறார். உடன் இருப்பவர் திரு. S.P.சம்பந்தம்
கயிலை மணி. அ. முனுசாமி முதலியார்.



20.10.91 ம நாளில் முதலியார் கல்வி நிறுவனத்திற்குப் பெருநிதி திரட்டியப் பெரியவர் திரு **ஆர். ஏ.என். முத்துசாமி முதலியார்** அவர்தம் துணைவியார் திருமதி சீரங்காயம்மாள் அகியோருக்கு மலர் கீரிடம் அணிவித்து பாராட்டினர் நிறுவனத்தினர்



ஈரோடு கலைக் கல்லூரி தொடங்கிய ஆண்டின் முதலாம் குடியரசு நாள் (26.1.73) அன்று கொடியேற்றுகிறார் தலைவர் ஆர்.ஏ.என். முத்துசாமி முதலியார்




திரைப்பட நட்சத்திர கலை விழாவின் மூலம் கல்லூரிக்குப் பெருநிதி திரட்டி தலைவர்
திரு **R.A.N. முத்துசாமி** முதலியாருக்குச் சேலம் திரு . எஸ். பி. சம்பந்தம்
திரு. எம். பி . ஆர். **அர்த்தனாரி முதலியார்** அவர்கள் மலர்க்கிரீடம் அணிவிக்கிறார்
கல்வித் தந்தை RANM அவர்களின் மாமன்னர் பார்வை






சுதந்திர தின விழாவில் பேருரை ஆற்றுபவர் கணக்கம் பாளையம் சி.கே. கந்தசாமி முதலியார்
தலைவர் பெரியவர் **முத்துசாமி முதலியார்** திரு . பி. பி. சதாசிவம்




தேசீய மாணவர் படையின் அணி வகுப்பைப் பார்வையிடுகிறார்
நிறுவனத் தலைவர் . **ஆர்.ஏ.என். முத்துசாமி முதலியார்**



தவத்திரு. குன்றக்குடி அடிகளார் அவர்கள்,
டாக்டர், கொ. ம. மாரிமுத்து நம் தலைவர் ஆர்.ஏ.என். எம்.
முன்னிலையில் மாணவர்க்கு தங்கப்பதக்கம், சான்றிதழ்
வழங்கும் காட்சி.





தமிழக அமைச்சர் மாண்புமிகு சு. முத்துசாமி M.A. அவர்களுக்கு மாலை அணிவித்து வரவேற்கிறார் நிறுவனக் கல்வித் தந்தை R.A.N. முத்துசாமி முதலியார்




' தங்கப் பதக்கம் ' வழங்கும் விழாவிற்குச் சிறப்புரையாற்ற வருகிறார் துணைவேந்தர் டாக்டர் கொ. ம. மாரிமுத்து. அவர்களை தலைவர் திரு. முத்துசாமி முதலியார்,

Scanned with OKEN Scanner



கலைமகள் கல்விநிலையம் திருமிகு. எஸ். மீனாட்சி சுந்தரம் அய்யா,
திரு கே. முத்துசாமி முதலியார், நில்கிரீஸ் திரு M செல்லைய்யா
திரு வி.ஜி.டி வேலு நிறுவனத்தினர்




தமிழ்ப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் டாக்டர் அகத்தியலிங்கம் அவர்கள் கலந்து
கொண்ட விழாவில் கல்வித் தந்தை ஆர்.ஏ.என். முத்துசாமி முதலியார் தாளாளர்
திரு க.வெ. இலட்சுமணன் திரு மயிலோன் ஆறுமுக முதலியார்
போராசிரியர்கள், மாணவர்கள்




பெருநிதியை நன்கொடையாக வாரி வழங்கிய நிறுவன வள்ளல்களுக்கு 26.6.88 இல்
பாராட்டு விழா எடுத்த போது முதன்மை விருந்தினர் மாண்புமிகு சு. முத்துசாமி M.A.,
அவர்களின் வருகையை எதிர்நோக்கும் நிறுவனப் பெருமக்கள்



மாண்புமிகு சு. முத்துசாமி M.A., அவர்கள்
பெரியவர் ஆர்.ஏ.என். முத்துசாமி முதலியார் தலைமையில்
பெருநிதியை வாரி வாங்கிய வள்ளல்களின் உருவப் படங்களைத் திறக்கிறார்






ஈரோடு கலைக் கல்லூரியின் தொடக்கக் காலக் கட்டுமாணப் பணி





ஈரோடு கலைக் கல்லூரிக்கு முதன் முதலில் கட்டப் பெற்ற கட்டத்திற்குத் தகுதிச் சான்றிதழ் வழங்கும் பொறியாளரிடம் விளக்கம் சொல்கிறார் தலைவர் திரு. ஆர். எ. ஏன். முத்துசாமி முதலியார், நிறுவனப் பெருமக்கள்.






பேரவைத் தொடக்க விழாவில் தமிழக அமைச்சர் மாண்புமிகு S. முத்துசாமி M.A.
பெரியவர் ஆர்.ஏ. என். முத்துசாமி




சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்துறை பேராசிரியர் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைகழக
முன்னாற் துணை வேந்தர் டாக்டர் . சி. பாலசுப்பிரமணியன் அவர்களுடன்
பெரியவர் ஆர்.ஏ.என். முத்துசாமி முதலியார், நிறுவனப் பெருமக்கள்



சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் தாமரைத் திரு நெ. து. சுந்தர வடிவேல், ஈரோடு
கலைக் கல்லூரித் தாளாளர் திரு பி.பி. சதாசிவம் கட்டிட நிதி வழங்கிய எலத்தூர்
செட்டிபாளையம் திரு சி.பி. கந்தசாமி முதலியார் ஆகியோர்களுடன்
பெரியார் ஆர். ஏ. என். முத்துசாமி முதலியார்



தவத்திரு குன்றக் குடி அடிகளார், பாரதியார் பல்கலைக் கழகத் துணை வேந்தர் முனைவர் கொ. ம. மாரிமுத்து ஆகியோருடன் தலைவர் திரு. ஆர்.ஏ.என். முத்துசாமி முதலியார் நினைவுப் பரிசு வழங்குகிறார்



தமிழக அமைச்சர் மாண்புமிகு ஆர். சௌந்திரராஜன், மாண்புமிகு சு. முத்துசாமி ஆகியோர் திரு ஆர்.ஏ.என். முத்துசாமி முதலியார் தலைமையில் சிறப்புரை யாற்றுகின்றனர்



ஈரோடு கலைக் கல்லூரி விழாவில் பெரியார் மாவட்ட ஆட்சித் தலைவர்
திருமிகு அ.ந. தியானேசுவரன் அவர்களுடன் கல்வித்
தந்தை அர்.ஏ.என். முத்துசாமி முதலியார் தாளார் க.வெ. லட்சுமணன்



ஈரோடு கலைக் கல்லூரியின் ஆண்டு நிறைவு விழாவில் பேரூர் ஆதீனம்
தவத்திரு. சாந்தலிங்க இராமசாமி அடிகளார் நிறுவனச் செயலர்
சி.கே.இராமநாதன், போராசிரியர். க. இ. ராமதாஸ், ஆகியோர்களுடன்
திரு. ஆர்.ஏ.என். முத்துசாமி முதலியார்



தமிழ்நாடு ஆளுநர் திரு. பட்வாரி அவர்களுடன்
கல்வித் தந்தை ஆர். ஏ. என். எம்.



மாண்புமிகு பாபு ஜெகஜீவன்ராம் ஈரோடு திரு. வரதராஜன்
அவர்களுடன் திரு ஆர். ஏ. என். முத்துசாமி முதலியார்



ஈரோடு கலைக் கல்லூரிக்கு அடிக்கல் நாட்டுபவர் சென்னைப் பல்கலைக் கழகத்
துணைவேந்தா - தாமரைத் திரு நெ. து. சுந்தரவடிவேலு உடன் இருப்போர் தலைவர்
திரு. ஆர். எ. ஏன். முத்துசாமி முதலியார், நிறுவனப் பெருமக்கள்



ஈரோடு கலைக் கல்லூரியின் புதிய கட்டிடக் கால் கோள் விழாவில்
திரு. சி.கே.. குமாரசாமி, திரு. ஜே. கே.. நாராயணன்,பேராசியர். க.இ. இராமதாஸ்,
திரு. பி. பி. சதாசிவம், திரு. எஸ். வையாபுரி முதலியார் போன்ற
நிறுவன பெருமக்களுடன் தலைவா திரு . ஆ. ஏன் . என். முத்துசாமி முதலியார்.

Scanned with OKEN Scanner



கோவை பாரதியார் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் கொ. ம. மாரிமுத்து அவர்களை
நாதசுவர இன்னிசையுடன் விழா மேடைக்கு நிறுவனப் பெருமக்கள், பேராசிரியர் மாணவர்
புடை சூழ அழைத்து வருகிறார் கல்வித தந்நதை திரு ஆர்.ஏ.என். முத்துசாமி முதலியார்



ராணா க. வெ. லட்சுமணன், சக்தி எம். பாலசுப்ரமணியம்
ஆகியோர் விழா மேடைக்கு அழைத்து வருகின்றனர்



சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் தாமரைத் திரு
நெ.து. சுந்தர வடிவேலு அவர்களை இருகரம் நீட்டி வரவேற்று மகிழ்கிறார்
பெரியவர் திரு **ஆர். ஏ. என். முத்துசாமி முதலியார்**




ஈரோடு கலைக் கல்லூரி விழாவில் சிறப்புரையாற்ற வருகை புரிந்த முன்னாள் முதல்வர்
பேராசிரியர் **க. இராமதாஸ்** அவர்களுக்குத் தவத்திரு **குன்றக்குடி அடிகளார்**
முன்னிலையில் மலர் மாலை அணிவிக்கிறார்




தவத்திரு குன்றக் குடி அடிகளார் அவர்களுடன் முதலியார் கல்வி நிறுவனத் தலைவர்
திரு ஆர்.ஏ.என். முத்துசாமி முதலியார் - நிறுவனப் பெருமக்கள்



குருவும் சீடரும் ஆலோசனை செய்கின்றனர்
தவத்திரு அடிகளார் – திரு. ஆர். ஏ. என். எம்.



ஈரோடு கலைக் கல்லூரிக்கு வருகை தந்த அரசு கட்டிடப் பொறியாளர்களுடன் நீல்கிரீஸ் திரு. M. செல்லையன், தலைவர் திரு. R.A.N. முத்துசாமி முதலியார்.



கல்லூரிப் பேரவைத் தொடக்க விழாவில் நாவலாசிரியர் தீபம் நா. பார்த்தசாரதி அவர்கள் முதலியார் கல்வி நிறுவனத் தலைவர் ஆர்.ஏ.என். முத்துசாமி முதலியார்



ஈரோடு கலைக் கல்லூரியின் எழில் மிகு காட்சி



சென்னைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் தாமரைத் திரு . நெ. து .சுந்தரவடிவேலு
அவர்களுடன் நிறுவனத் தலைவல் திரு. ஆர்.ஏ.என். முத்துசாமி முதலியார்
திரு. ஆர்.ஏ.என். அங்கப்ப முதலியார் திரு. ஆர்.பி.ஏ. ரங்கசாமி முதலியார்




பொன் மனச் செம்மல் திரு . சி. கே. குமாரசாமி, எம். ஏ அவர்களுக்குப் பொன் விழா எடுத்து வாழ்த்துகின்றார்.



கல்லூரிக் கல்வி இயக்குநர் டாக்டர் கா. மீனாட்சி சுந்தரம் அவர்கள், தலைவர் ஆர்.ஏ. என். முத்துசாமி முதலியார், தாளாளர் க. வெ. இலட்சுமணன் அவர்கள்



கல்லூரி ஆண்டுவிழாவில் கோவை மண்டலத் துணைக் கல்லூரி இயக்குநர் பேராசிரியர் இராகவேந்திரராவ் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார். திரு. ஆர்.ஏ.என். முத்துசாமி முதலியார் வேளாளர் மகளிர் கல்லூரி முதல்வர் இலட்சுமியம்மாள்



இலக்கிய விழாவில் இலக்கியச் செல்வர் திரு குமரி அனந்தன் அவர்கள்
தலைவர் ஆர்.ஏ.என். முத்துசாமி முதலியார்,
பொருளாளர் திரு அ. முனுசாமி முதலியார்




மாண்புமிகு எம். பக்தவச்சலம்
மாண்புமிகு என். எஸ். எஸ். சர்க்கரை மன்றாடியாருடன் ஆர். ஏ. என்.



அருள்நெறி திருப்பணி மன்றப்பள்ளி குடியரசு தினநாளில் ஆர். ஏ. என். எம்.
திரு டாக்டர் எல். கே. முத்துசாமி, திரு டாக்டர் சி. எச். சிவராமன்
திரு என். எம். ராமசாமி -தலைவர் திரு எம். அழகப்பன் -செயலாளர்
அருள்நெறி திருப்பணி மன்றம்



திரு. R.A.N. முத்துசாமி முதலியார் அவர்கள் தென்னிந்திய சினிமா நடிகர் சங்கக் கட்டிட நிதிக்காக ரூ. 2,500/ யை மக்கள் கலைஞர் திரு. ஜெய்சங்கர் அவர்களிடம் அன்பளிப்பாக வழங்குகிறார்.



ஈராடு தொழில் நுட்பப் பயிற்சிக் கல்லூரியின் தோற்றம்.



நிறுவனத் தலைவர் ஆர்.ஏ.என் முத்துசாமி முதலியார், செயலர் ' தாளாளர்
க.வெ.இலட்சுமணன் அவர்கட்கு நினைவுப் பரிசு வழங்குகிறார்



தாளாளர் ராணா க.வெ இலட்சுமணன் அவர்களின் துணைவியார் திருமதி சரோஜா
அவர்கட்கு பரிசு வழங்குகிறார் பெரியவர் ஆர்.ஏ.என். முத்துசாமி முதலியார்.




விளையாட்டுப் போட்டியில் வெற்றி தம்பக்கமே என்ற நம்பிக்கையுடன்
பெரியவர் . **ஆர்.ஏ.என். முத்துசாமி முதலியார்**



விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவருக்குப் பரிசு வழங்குகிறார்
பெரியவர் . **ஆர்.ஏ.என். முத்துசாமி முதலியார்**


யோகிராஜ் வேதாத்திரி மகரிஷி அவர்கள்
வழங்கும் அருளுரை
மனவளக்கலையும்


கலைமகள் வித்யாலயம்
ஆங்கிலப் பள்ளி
KALAIMAGAL VIDHYALAYAM
ENGLISH SCHOOL
HOSPITAL ROAD, KAVINDAPADI.
பதிவு எண்: 7/1956.
கவுந்தப்பாடி சுதேசி ஜவுளி
வர்த்தகர்கள் சங்கம்
20.மருத்துவமனை வீதி,
கவுந்தப்பாடி.




' வாழ்க வளமுடன் '
யோகிராஜ் வேதாத்திரி **மகரிஷி** அவர்களுடன் தலைவர்
ஆர்.ஏ.என். முத்துசாமி முதலியார், மயிலோன் ஆறுமுகம் முதலியார்



கோவை மண்டலக் கல்லூரிக் கல்வித் துணை இயக்குநர்
திருமதி C.இராஜமாணிக்கம் அவர்களை விழாவிற்கு அழைத்து வரும் காட்சி




பெரியார் ஆர்.ஏ.என். முத்துசாமி முதலியார், க.வெ. இலட்சுமணன்
ஆகியோருடன் கல்லூரி முதல்வர் பேராசிரியர் ரா.வெ. இராமகிருஷ்ணன்




சமூகப் பணியில் பெரியவர் ஆர்.ஏ.என் முத்துசாமி முதலியார்



பாரதியார் பல்கலைக் கழகத் துணை வேந்தர் கொ. ம. மாரிமுத்து, பதிவாளர்
பேராசிரியர் பி.என். சிலம்பண்ணன், கல்வித் தந்தை ஆர்.ஏ.என்.எம்.
நிறுவனச் செம்மல்கள்





கல்லூரி விளையாட்டு விழாவில் முதலியார் கல்வி நிறுவனத்தினர்



ஈரோடு கலைக் கல்லூரியின் ஆண்டு நிறைவு விழாவில் பேரூர் ஆதினம்
தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளாருடன்
பெரியவர் ஆர்.ஏ.என் முத்துசாமி முதலியார், நிறுவனப் பெருமக்கள்

தி முதலியார் கல்வி நிறுவனத்தை ஆரம்பித்து நடாத்தி வந்தவர்கள்



திரு. ஆர். ஏ. என். முத்துசாமி முதலியார்
தலைவர்



சி.கே. கந்தசாமி முதலியார்
துணைத் தலைவர்



பி.கே. நஞ்சப்ப முதலியார்
துணைத் தலைவர்



மயிலோன் A. ஆறுமுகம்



திரு. S. வையாபுரி



திரு. S. N. பழனியப்ப முதலியார்



துணைத் தலைவர்கள்



திரு. எஸ். கே. பாலு



திரு. டி.ஆர். சுவாமிநாத முதலியார்



டாக்டர் பரந்தாமன்



திரு. வெங்கிடாஜலம்



தாளாளர்
பி. பி. சதாசிவம்



அமரர்
கே. முத்துசாமி முதலியார்
துணைத் தலைவர்



கவுந்தப்பாடி சுதேசி ஜவுளி வர்த்தக சங்க உறுப்பினர்களுடன்
கல்வித்தந்தை. திரு. ஆர். ஏ. என். முத்துசாமி முதலியார்



திரு. ஆர். ஏ. என். முத்துசாமி முதலியார் கவனத்துடன் வளர்த்துவரும்
அருள்நெறிப்பள்ளி, ஈரோடு.

முதலியார் கல்வி நிறுவனம்

ஆட்சிக்குழு



அமரர்
திரு. பெருமாள் முதலியார்
துணைத் தலைவர்



திரு. ஜே.கே. நாராயணன்
துணைத் தலைவர்



திரு. சீ.கே. இராமநாதன்
செயலாளர்



திரு. எம். செல்லையன்
துணைத் தலைவர்



திரு. சிவசுப்ரமணியம்
துணைத் தலைவர்



திரு. ஏ. முனுசாமி
பொருளாளர்



மாண்புமிகு எஸ். டி. சோமசுந்தரம், திரு. ஆர்.ஏ.என்.எம்.



ஈ. ஐ. டி. தொழில் கல்வி
மாநில ஆணையருடன் திரு. ஆர்.ஏ.என்.எம்.



பேராசிரியர்
திரு. க. இராமதாஸ்
முன்னாள் முதல்வர்



திரு. கே. கே. பாலுசாமி
து. தலைவர்




திரு. எம். தண்டபாணி
து. தலைவர்




இன்முகத் தென்றல்
ராணா. க. வெ. இலட்சுமணன்
செயலர், தாளாளர்,
ஈரோடு கலைக்கல்லூரி,
இந்து கல்வி நிலையம்.



பேராசிரியர்
திரு. ரா. வே. இராமகிருஷ்ணன்
முதல்வர்
ஈரோடு கலைக்கல்லூரி




கல்லூரிப் பேரவை நிகழ்ச்சியில் தலைமை திரு. ஆர். ஏ. என். எம்.
திரு. பீ. கே. என்., திரு. மயிலோன், திரு. சு. வையாபுரி



மாண்புமிகு ஆர். எம். வீரப்பன், மாண்புமிகு துரைராமசாமி
திரு. ஆர். ஏ. என். முத்துசாமி முதலியார், திரு. க. வெ. இலட்சுமணன்

Sakthi Printers, Erode. Phone : 76556—72985



குடியரசு தின விழாவில் பெரியார் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமிகு **V. லட்சுமிதரன், இ.ஆ.ப.** அவர்களுடன் நிறுவனப் பெருமக்கள் திரு **M. பாலசுப்ரமணியம், ராணா க.வெ. லட்சுமணன்** செயலர், திரு. **பி.பி. சதாசிவம்** தாளாளர். திரு **ஆர்.ஏ.என். முத்துசாமி முதலியார்**



ஈரோடு கலைக் கல்லூரி ஆண்டு நிறைவு விழாவில் சென்னைப பல்கலைக் கழகத் துணைவேந்தர் தாமரைத் திரு. **நெ.து. சுந்தர வடிவேலு** அவர்களுடன் கல்வி தந்தை **ஆர்.ஏ.என். முத்துசாமி முதலியார்**





இயற்கையோடு இயைந்த
ஈரோடு தொழில் நுட்பக் கல்லூரி
காமாட்சி அம்மன் ஐ.டி.ஐ



ஆர்.ஏ.என்.எம்.குடும்பத்தினர்

முருகப் பெருமானின் போர்ப்படைத் தளபதிகள்
வீரபாகு உள்ளிட்ட செங்குந்த கைக்கோள நவவீரர்கள்




பத்ம விபூஷன்
(28.08.1926 – 14.01.2018)
4 மாநில முன்னாள் கவர்னர் & இந்திய
உளவுத்துறை இயக்குனர்
டி.வி. ராஜேஸ்வரன் முதலியார் IPS


தர்மபுரி கள்ளுக்கடை மறியல், சட்டமறுப்பு, உப்பு சத்தியாகிரகம், நீல்
சிலையை அகற்றும் போராட்டங்களின்போது பல்வேறு கட்டங்களில் 8
ஆண்டுகளுக்கு மேல் சிறையில் அடைக்கப்பட்ட சுதந்திர போராட்ட வீரர்
டி.என். தீர்த்தகிரி முதலியார்


28.04.1913 - 27.06.1987
நெசவாளர்களின் முன்னேற்றத்துக்காக வாழ்க்கையை அர்ப்பணித்த
பத்மஸ்ரீ எம்.பி. நாச்சிமுத்து முதலியார்


ஈரோடு நகரதந்தை
டி. சீனிவாச முதலியார்
மூன்று முறை ஈரோடு சார் மேலாக வெற்றி பெற்று
ஈரோட்டின் தற்போதைய நகரக் கட்டமைப்பு, ஈரோடு வாட்டர்
வொர்க்ஸ், வ.உ.சி பூங்கா ஆகியவற்றை உருவாக்கிய
டி. சீனிவாச முதலியார்


(25.12.1898 - 14.03.1973)
ஈரோடு கல்வித்தந்தை, ஈரோடு முன்னாள் சேர்மன்,
OC பிரிவில் இருந்த செங்குந்த கைக்கோளர்
சமுதாயத்திற்கு BC இட ஒதுக்கீடு பெற்றுத் தந்த
எஸ். மீனாட்சிசுந்தரம் முதலியார்


21.09.1944 - 25.06.2010
நெசவாளர் நேசன், உத்யோக ரத்னா
ஜெ. சுத்தானந்தன் முதலியார்


(22.04.1903 - 30.03.1968)
ஈரோடு செங்குந்தர் கல்விக்கழகம், பழனி முருகன் கோவில் தங்க தேர், வைரவேல், தங்க மயில், வின்ச் ரயில் ஆகியவற்றின் நிறுவனர், சைவப் பெருவள்ளல்
வி.வி.சி.ஆர். முருகேச முதலியார்


(18.02.1890 - 14.03.1954)
பெருந்துறை மருத்துவமனை & கல்லூரிக்கு 107 ஏக்கர் இடமும், சென்னிமலை
செங்குந்தர் பள்ளிக்கு 15 ஏக்கர் இடமும் தானமாக வழங்கி கொங்கு மண்டலத்தில்
முதன் முதலில் ரோல்ஸ் ராய்ஸ் கார் வாங்கி பயன்படுத்திய பெரும் செல்வந்தர்
வி.எஸ். செங்கோட்டையா முதலியார்


இந்தியாவில் முதன்முதலில் சூப்பர் மார்க்கெட்
கொண்டு வந்த (நீல்கிரீஸ் 1905)
எஸ். முத்துசாமி முதலியார்